

நூறு வருட

# மட்டுநகர் நினைவுகள்

*

ஆசிரிய திலகம்

எஸ். பிரான்சிஸ்

914.212.
பிரான்
SL/PR

# நூறுவருட மட்டுநகர் நினைவுகள்

*ஆசிரிய திலகம்*

**எஸ். பிரான்சிஸ்**

*(இளைப்பாறிய அதிபர்)*

**அன்பு வெளியீடு**

ஆரையம்பதி

1994

அன்பு வெளியீடு - 5.

## பதிப்புத் தரவுகள்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | நூறுவருட மட்டுநகர் நினைவுகள். |
| பொருள் | : | சமூகவியல். |
| ஆசிரியர் | : | எஸ். பிரான்சிஸ் (இளைப்பாறிய அதிபர்) |
| வெளியீடு | : | அன்பு வெளியீடு, ஆரையம்பதி-1. |
| அச்சுப் பதிவு | : | புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு. |
| வெளியீட்டுத்தேதி | : | 8, மார்கழி - 1994. |
| உரிமை | : | நூலாசிரியர். |
| பிரதிகள் | : | 1000. |
| பக்கம் | : | 25 + 10 + 56. |
| விலை | : | ரூ. 40/- |

ANBU PUBLICATION - 5.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | "Nooru Varuda Maddunagar Ninaivukal" (Memoirs on 100 years of Batticaloa) |
| Subject | : | Social Studies. |
| Author | : | S. Francis (Retd. Principal) |
| Publishers | : | Anbu Veliyeedu, Arayampathy-1. |
| Printers | : | St. Joseph's Catholic Press. Batticaloa. |
| Date of Publication | : | 8th December 1994. |
| Copyright | : | Author. |
| No. of Copies | : | 1000. |
| Pages | : | 25 + 10 + 56. |
| Price | : | Rs. 40/- |


## பொருளடக்கம்


| | | பக். |
|---|---|---|
| i. | சமர்ப்பணம் ... | i |
| ii. | எனது நல் ஆசான் ... | ii |
| iii. | அறிமுக உரை ... | iv |
| iv. | என் உரை ... | ix |
| I. | சுருக்க வரலாறு | 1 |
| | 1. ஆரம்பகாலம் | |
| | 2. இயற்கை அமைவு | |
| | 3. மட்டுநகர் வாவி | |
| | 4. மக்கள் வாழ்க்கை நிலை | |
| | 5. கல்வி | |
| | 6. பாடசாலைகள் | |
| | 7. கத்தோலிக்கரின் கல்விப்பணி | |
| II. | வாழ்க்கை வசதிகள் | 11 |
| | 1. போக்குவரத்து | |
| | 2. அரிசி பெர்மிட்டு | |
| | 3. ஜெற்றி | |
| | 4. நாலேகால் குண்டுவிழும் விபரம் | |
| III | சனமும் சாதியமும் | 16 |
| | 1. இந்து முஸ்லீம் | |
| | 2. சிங்களவர் | |
| | 3. இன ஒற்றுமை | |
| | 4. லோக்கல் போட் | |
| | 5. தெருவில் ஓடிய சாராயம் | |
| | 6. தேர்தல்கள் | |
| | 7. பாராளுமன்ற உறுப்பினர்கள் | |
| | 8. பின்தங்கிய பகுதிகள் | |
| IV. | கிறிஸ்தவ சமயம் | 22 |
| | 1. கிறிஸ்தவர் வருகை | |
| | 2. யேசுபிரான் | |
| | 3. கிறிஸ்தவ சமயம் இலங்கைக்கு அன்னிய சமயமல்ல. | |
| | 4. முத். யோசேவாஸ் அவர்களின் பணி | |
| | 5. விவிலிய நூல் | |

V. கத்தோலிக்க சமயம் 28

1. கத்தோலிக்க சமய முன்னோடிகள்
2. வந். இக்னேஷஸ் கிளென்னி சே.ச.
3. வந். ஆயர் லீயோ இராஜேந்திரம்
4. வந். ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

VI. கத்தோலிக்க சமயம்பற்றிய தெளிவு 33

1. கத்தோலிக்க கோயில்களின் நடைமுறை
2. மரித்தவர்களுக்குக் கூடிய மரியாதை செய்தல் (சடலம்)
3. விருந்துபசாரம்
4. குருவானவரின் அனுசரணையுடன் கத்தோலிக்கரின் ஈடுபாடு
5. குருக்கள், கன்னியர், துறவிகள்பற்றியவை
6. பிராஞ்சிய நாட்டில் இருந்து வந்த குருக்களைப்பற்றி
7. அமெரிக்காவில் இருந்து வந்த குருக்கள்
8. சிறப்புப் பணிகள்
9. இழப்புக்கள்

VII. பாதயாத்திரைகள் 46

1. பெரிய புல்லுமலை பாதயாத்திரை
2. ஆயித்தியமலைப் பாதயாத்திரை
3. பாதயாத்திரையின் பலன்

VIII. நினைவை விட்டு நீங்காத நிகழ்ச்சி 49

1. தேவதாயார்
2. மட்டுநகர் ஊர்வலம்
3. தெய்வீக அலங்காரம்

இந் நூலாசிரியரைப்பற்றி 53



வண. ஞானச்சகோதரர்

S. பிலிப் S. S. J.

அவர்கள்.

## சமர்ப்பணம்



**வண. ஞானச்சகோதரர் S. பிலிப் S.S.J.**
**அவர்கள் திருவடிகளுக்கு.**

★ *அரசாங்கத்தால், ஈழத்தில் சுயமொழிக் கொள்கைத் திட்டம் அமுலாக்கப்பட்டபோது* சிறாரின் கல்வி மூலமே தமிழ்ச் சமூகத்தை முன்னேற்ற முடியும் என *நினைத்துத் தமது துறவற சபையினரையே ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் மேதாவிகளாக்கி ஆசிரியர் சமூகமாகவே ஆக்கிவிட்டவர்.*

★ *தனித் தமிழ் ஆசிரியரின் இழிநிலை கண்டு அவர் நிலை உயரக் கடைசிவரை பாடுபட்டு வெற்றியுங் கண்ட மாபெருஞ் செயல்வீரர்.*

## எனது நல் ஆசான்
## வண. ஞானச்சகோதரர் S. பிலிப் S.S.J.
## அவர்களைப்பற்றி...

29–04–1893ல் புனித வளனார் சபைத் துறவியாகி,

1908ல் ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் முதலாந்தர ஆசிரியராகி,

இளவாலை புனித ஹென்றியார் கல்லூரி அதிபராகி,

கடல்கடந்து றங்கூன் சென்று ஆங்கிலக் கல்லூரி ஒன்றை நிறுவி,

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் இருபது வருடங்கள் போதனா ஆசிரியராகி,

கணிதம், புவியியல், வேத உபதேசம், இலங்கைச் சரித்திரம் என்னும் நூல்களை எழுதி,

1926 தொடங்கி 1932 வரை புனித வளனார் துறவற சபைத் தலைமைச் சிரேஷ்டராகி,

கொழும்பு கல்விச்சபையில் ஆலோசகராகி,

தமிழாசிரியரின் மாதாந்த வேதனத்தை ரூபா நாற்பதாக உயர்த்தி,

1938ல் மட்டுநகரை வந்தடைந்தார்.

தமிழ் ஆசிரியருக்கெனப் பல ஆங்கில வகுப்புக்களை நடாத்தினார். சிறப்பாக என்னைத் தேர்ந்தெடுத்தார்.

பாடம் சொல்லித்தர நேரமில்லையே என்ற பிரச்சினையைத் தன் மதிய உணவைத் தான் படிப்பிக்கும் இடத்திற்குக் கொண்டுவரச்செய்து உணவை அருந்திக்கொண்டே அதைத் தீர்த்தார்.

1949ல் ஆங்கில மொழியில் எஸ்.எஸ்.ஸீ. பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்தியடையச் செய்தார்.



பொது வேலைகளில் ஈடுபடும்படியும், நூல்களை எழுதும்படியும் தூண்டினார்.

எனது ''விவேகப் பயிற்சி அப்பியாசங்கள்'' என்னும் நூலை ஐந்தாம் பதிப்பாக மதுரை டி நொபிலி அச்சகத்தில் ஐயாயிரம் பிரதிகளை அச்சிட வழிவகுத்தார்.

அவர்களது தணியாத ஆவல் 'தமிழ் ஆசிரியர் நிலையை உயர்த்தவேண்டும்' என்பதே. இதற்காகப் பல வழி வகைகளையும் சொல்லித்தந்தார். இதனால் எனக்கு ஏற்படக்கூடிய இழப்புகளையும் தீர்க்கதரிசனமாகச் சொல்லிவைத்தார்.

அவரது தாரகமந்திரம் ''நாம் கெஞ்சினால் மேலதிகாரிகள் மிஞ்சுவார். நாம் மிஞ்சினால் அவர் கெஞ்சுவார்'' என்பது.

எல்லாம் அவர் எண்ணப்படி ஓரளவு நிறைவேறிற்று.

29–04–1953ல் துறவற வாழ்வில் வைர விழா (60) கண்டார்.

1953 - ஐப்பசித் திங்கள் 8ல் முடிவில்லாத வாழ்விற் பிறப்பதற்காக இவ்வாழ்வை முடித்துக்கொண்டார்.

**எனது நன்றிக் கண்ணீர்த் துளிகள்.**



# அறிமுக உரை

பிரபல ஆங்கில அறிஞரான எச். ஜி. வெல்ஸ் எழுதிய "கால யந்திரம்" (TIME MACHINE) என்னும் கட்டுரையில், இன்றைய மனிதன் கடந்த காலத்துள்ளும் பயணஞ் செய்தால் எத்தகைய அனுபவங்களைப் பெறுவான் என்ற கற்பனைகள் விரிந்துள்ளன. இதே கற்பனையில் பல்வேறு தொலைக்காட்சிப் படங்களும் வெளிவந்துள்ளன.

இத்தகைய அனுபவத்தைப் போன்றதே மிக அண்மைக் காலமான நூறுவருட, 50 வருட சம்பவங்களை அறிந்துகொள்வதும்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை ஒரு 100 வருடத்துக்கு முந்திய நிலைப்பாடுகள், நிகழ்வுகள், கல்வி நிலை, சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் என்பன இன்றைய தலைமுறையினருக்கு விநோதமாகவும், நம்பமுடியாதனவாகவும் தோற்றுகின்றன.

அவ்வளவு ஏன். ஒருசில ஆண்டுகளுக்குமுன் 5 சதத்துக்குப் பிளேன்டீயும் 10 சதத்துக்குப் பால்டீயும் 50 சதத்துக்குச் சாப்பாடும் கிடைத்தன என்றால் இன்று யார் நம்புவார்கள்! ஒருசில வருடங்களுக்கு முந்திய நிலையே இப்படியென்றால் 100 வருடங்களுக்கு முந்திய நிலை எப்படி இருந்திருக்கும்.

கண்டிப்பாக அதை அறியவேண்டும் என்ற ஆவல் எல்லோர் மனதிலும் குமிழியிடும் என்பது நிச்சயம். இவைகளைச் சொல்லக்கூடியவர்கள், அறிந்தவர்கள், அனுபவித்தவர்கள் ஒருசிலரே இன்று உயிர் வாழ்கின்றனர். அவ்வனுபவங்களைத் தெளிவாகச் சொல்லக்கூடியவர்கள் அதிலும் குறைவாகவே இருப்பர். அத்தகையவர்களில் ஒருவரே ஆசிரியர் திலகமாகக் கருதக்கூடிய இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். பிரான்ஸிஸ் அவர்கள். அவருடைய வாழ்க்கை அனுபவங்களே ஒரு நாவலாக அமையும். அத்தகையவர் சென்ற ஆண்டு கத்தோலிக்க திருச்சபையின் திருமலை – மட்டுநகர் நூற்றாண்டு நிறைவின் போது பல அபூர்வமான சங்கதிகளைக் கூறினார். இவற்றைக் கேட்ட நான் இவற்றையெல்லாம் ஒரு நூல் வடிவில் எழுதினால் இன்றைய தலைமுறையினருக்கு மிகவும் பயன்படுமே என்று கூறினேன். அப்படிக் கூறியதுடன் நில்லாது அவற்றை



எழுதியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் உண்டாக்கினேன். எனது ஆக்கினை பொறுக்கமுடியாமல் சுகவீனமுற்றிருந்த நிலையிலும் அவர் எழுதத்தொடங்கினார்.

100 வருடத்துக்குள் மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பொதுவாகவும், அன்றைய சமுதாய சூழலில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைச் சிறப்பாகவும் அவர் எழுத்துக்களில் காணலாம்.

கத்தோலிக்க திருச்சபையின் நூற்றாண்டு நிறைவை ஒட்டி எழுதப்பட்டவை என்பதால், அச்சமய சம்பந்தமான தகவல்கள் அதிகமாக இந்நூலில் இடம்பெறுவது தவிர்க்க முடியாததே. ஆனால் இவற்றைவிட அவருடைய சொந்த அனுபவங்கள் சில, தலைமைத்துவத்துக்கும், ஆளுமைக்கும், ஆற்றலுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைந்திருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இத்தகவல்களிலிருந்து இன்றைய இளந் தலைமுறையினர் கற்றுக்கொள்ளவேண்டிய "பாடங்கள்" ஏராளமாக உள்ளன. குறிப்பாக (அ) நிர்வாகத்திறமை (ஆ) தற்றுணிபு (இ) சிக்கலான சூழலில் சிறந்த முடிவெடுத்தல் (ஈ) பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் (உ) காரியசாதனை (ஊ) பொதுப் பணி ஈடுபாடு என்பன குறிப்பிடத்தக்கவை.

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பல வருடங்கள் நான் கடமையாற்றியுள்ளேன். அக்காலப்பகுதியில், திணைக்கள ரீதியாகவும், பாடசாலை ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. அப்போது நான் அவதானித்த சில சம்பவங்கள் இவரது ஆற்றலுக்கும், ஆளுமைக்கும் சிறந்த உரைகற்களாகும்.

1970ம் ஆண்டில் 'சியவச' என்னும் கல்வி நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டது. அத்தொடர்பில் மட்டுநகர் ஏற்பாடுகளுக்கென பல்வேறு குழுக்கள் (வழக்கம் போல்) நிறுவப்பட்டன. நாட்கள் ஓடின. காரியங்கள் ஓடவில்லை. இந்நிலையில் திரு. எஸ். பிரான்ஸிஸ் அவர்கள் சகல ஒழுங்குகளையும் மிகச் சிறப்பாகச் செய்து, வெற்றிகரமாக அந்நிகழ்ச்சிகளைப் பூர்த்திசெய்தார். இத்திறமையைக், கல்விப் பணிப்பாளர்களான திரு. வெ. சங்கரலிங்கம், ஜனாப் ஏ. எம். மஜீத் ஆகியோர் மனம் திறந்து பாராட்டவும் தவறவில்லை.

'சியவச கண்காட்சி' கண்காட்சியைப் பார்க்கவரும் மாணவ மாணவியர்க்கான உணவு ஏற்பாடு. நாள்தோறும் கலை நிகழ்ச்சி என மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்வுகளை ஒரு பிசிறும் இல்லாமல் சிறப்பாக ஒழுங்குசெய்து நிறைவேற்றினார் திரு. பிரான்சிஸ்.

இவ்வாறே ''சித்திரச் செயற் கண்காட்சி'', ''தமிழ்த் தின விழா'' முதலிய பாரிய நிகழ்வுகளில் ஆணிவேராக நின்றார். எங்கள் கடை நிறுவுதல், ஞானசூரியம் விளையாட்டரங்கு, வெபர் விளையாட்டரங்கு, வீச்சுக்கல்முனை தார் றோட்டு, புதூர்ச் சந்தி புனித அன்னம்மாள் கோயிலடியில் நீர்க்குழாய்கள், பஸ் சேவை போன்ற பல்வேறு சாதனைகளை மிகவும் சாதுரியமாக நிறைவேற்றினார். வாய்ச் சேவையை விடுத்து காரியங்களை நிறைவேற்றுவதில் குறியாக உள்ளவர் திரு. பிரான்சிஸ்.

இவரிடமுள்ள சிறந்த குணாதிசயங்களுள் ஒன்றைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்யும் அநீதிகளைப் பொறுக்காது எதிர்க்குரல் கொடுக்கும் பண்புதான் அது. இவ்வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவரது நெஞ்சுரம் வெளிப்பட்டுள்ளது. இதை இவர் தனது ஆசிரியரான அருட்சகோதரர் S. பிலிப் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார். அவர் கற்ற பாடம் இதுதான். அதிகாரத்தில் உள்ளவர்கள் ''கெஞ்சினால் மிஞ்சுவர் மிஞ்சினால் கெஞ்சுவர்'' அதனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்யும் அநீதிகளுக்குத் தலைவணங்கக்கூடாது. தைரியமாக அவற்றை எதிர்க்கவேண்டும்.

தனது குருநாதர் போதித்த இப்பாடத்தை வேதவாக்காகக்கொண்டு வாழ்நாள் முழுவதும் அதைக் கடைப்பிடித்ததனால் அவர் அநேக கஷ்டங்களையும், நஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டியிருந்தது.

உதாரணமாக, இவர் தனது கல்வி அதிகாரியை எதிர்த்துப் பேசியதால் அவரது சேவை நீடிப்பு மறுக்கப்பட்டது. 55 வயதில் இளைப்பாறினார். அதனால் குறைவான மாதாந்த ஓய்வூதியத்தைப் பல வருடங்களாகப் பெற்றுவருகிறார். அவ்வகையில் இவ்விழப்பு பல இலக்க ரூபாய்களாகத் தேறும்.



அதேசமயம், தர்க்கரீதியான வாதத்தை ஏற்றுக்கொள்ளும் மனச்சாட்சியுள்ள மேலதிகாரிகள், இவர் கூற்றிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டு இவருக்கு மதிப்புக்கொடுத்த சம்பவங்களுமுள. இந்நூலில் இவர் குறிப்பிடும் அலீஸ்துரையிடம் அரிசி கொண்டுபோவதற்கான அனுமதி பெற்ற முறை அத்தகைய சம்பவங்களுக்கு ஒரு உதாரணமாகும். அவ்வாறே கல்விப் பணிப்பாளர்களான திரு. S. தணிகாசலம், திரு. V. சங்கரலிங்கம், ஜனாப் மஜீத் போன்றவர்களாலும், திரு. V. T. அரசன், திரு. K சோமசுந்தரம் போன்ற வட்டார வித்தியாதரிசிகளாலும் போற்றப்பட்டவர் இவர்.

இவர் தனது ஆசிரிய சேவைக்காலத்தில் எழுதி வெளியிட்ட சில நூல்கள் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. ஒன்பதாம் வகுப்புக்குரிய மாணவர் சைந்நூல் (கிருஷ்ணன் தூதுச் சுருக்கம்), உளச்சார்பு (5ம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைக்குரியது), வேத உபதேசம் (4ம், 5ம், 6ம், 7ம் வகுப்புகளுக்குரியது) முதலியன குறிப்பிடத்தக்கன. இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றன. 5ம் வகுப்பு உளச்சார்பு நூலில் ஒரு பிரதியைக் கடத்திச்சென்று அதிலுள்ள விடயங்களை எடுத்துத் தமது நூலாகச் சிலர் வெளியிட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

கற்பித்தலில் இவர் சில விசேட உத்திகளைக் கையாளுவார். அவ்வகையில் தமிழ்மொழி, தமிழ் இலக்கணம், கணிதம் ஆகிய 3 பாடங்களையும் கற்பித்தலில் விசேட திறமை பெற்றவர் இவர். இப்பாடங்களில் சித்தி எய்தாதவர்கள் இவரிடம் வந்து சில பயிற்சிகளைச்செய்து அப்பாடங்களில் சித்தி எய்துவது வழக்கம். இப்பாடங்களில் திறமை குறைந்தவர்களுக்குச் சில நவீன உத்திகளைக் கையாண்டு அவர்களைச் சித்திபெறச் செய்யும் ஆற்றல் கொண்டவர் இவர்.

ஆத்மீகத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர், புனித அந்தோனியாரின் அருள் பெற்றவர். அவரைப் பற்றி இவர் எழுதிய ஒரு சிறியநூல் அண்மையில் மிக விரைவாக விநியோகமாகியது குறிப்பிடத்தக்கது.

எண்பது வயதை அண்மித்துக்கொண்டிருக்கும் இவர் உள்ளத்தால் இளைஞர். கால்கள் நடக்கமுடியாதபடி வாதக் குணம் இருந்தபோதும் சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியைத் தொடர்ந்தும் மேற்கொள்கிறார். கட்

டுரைகளை எழுதுகிறார். அரிய ஆலோசனைகளைக் கூறுகிறார். அரசியல் பித்தலாட்டங்களைப் புரியவைக்கிறார்.


இந்நூலைப் படிப்பவர்கள். ஒரு நூறுவருட காலத்துள் மட்டுநகரில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்துகொள்வதுடன் மறைமாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ளலாம். அவற்றினூடே நூலாசிரியரின் சில குணாதிசயங்களையும் தெரிந்துகொள்ளலாம். குறிப்பாக இவருடைய குருபக்தி வாசகர்களை மெய்சிலிர்க்கச் செய்யும்.

அருட்சகோதரர் S. பிலிப் அவர்கள்மீது அவருக்குள்ள குருபக்தி அளவற்றது. அவ்வாறே திருச்சபையில் உள்ளவர்களிடம் அவருக்கிருக்கும் மதிப்பும் மரியாதையும் குறிப்பிடத்தக்கவை.

55 வயதில் ஓய்வு பெற்றாலும் 37 ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்து, சமூகப் பணிகளை நிறைவேற்றி, பொதுப் பணிகளில் முன்னின்று உழைத்து ஓய்வு பெற்றபின்னும் ஓயாது உழைத்துக்கொண்டிருக்கும் இவர் கூறும் கருத்துக்கள் இன்றைய இளம் தலைமுறையினருக்குப் புதிய தகவல்களைத் தருவதுடன் ஆளுமை, ஆற்றல், தலைமைத்துவம் தொடர்பான எண்ண எழுச்சிகளையும் ஏற்படுத்தலாம்.

தலைமுறை இடைவெளி என்பது இன்று எல்லாத் துறைகளிலும் துலாம்பரமாகத் தெரிகின்றது. இன்றைய செய்தி இது. அதற்கான தூண்டுதலை ஒரு சிறிய அளவிலேனும் இந்நூல் தருகின்றது.

**இரா. நாகலிங்கம்**
**(அன்புமணி)**





# என் உரை

திருமலை – மட்டுநகர் மறைமாவட்ட நூற்றாண்டு யுபிலி 1893 — 1993 ஆவணி 15 வரை. ஏதாவது எழுத எண்ணம் ஏற்பட்டது. கற்பனைக் கடலில் மூழ்கி ஆகாயத்தில் கோட்டையைக் கட்டுவதைவிட அனுபவரீதியாக எதையும் எழுதுவது நலமெனப்பட்டது. எழுதினேன். காலமோ நூறாண்டு. இடமோ மட்டுநகர். நூறு வருட மட்டுநகர் நினைவுகள் எனத் தலையங்கம் உதித்தது. உடல்நிலை காரணமாகக் கனடா சென்றேன். ''இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை'' என்பதை எட்டு மாதத்தில் கண்டேன். மீண்டுவந்தேன். மேலோட்டமாக எழுதியதை அன்பர் அன்புமணியிடம் காட்டினேன். கண்ணோட்டம் விட்ட அவர், 'இது: நூல் – உரு – பெற – வேண்டும்' என்ற அஞ்சு சொற்களையும் அஞ்சுகம்போல் சொன்னது மட்டுமன்றி, விண்ணின்று, மண் வளமுற, வாரி வழங்கும் மாரிபோல திருமலை நின்று மட்டுநகரில் செயல்படுத்தியும் விட்டார்.

இவ்வைந்து செஞ்சொற் கடனைக் கழிப்பது எப்படி என்றே திண்டாடுகின்றேன்.

தேடுவாரற்றுத் தெருவில் கிடந்த மொக்குக்கட்டையை, கைதேர்ந்த சிற்பி ஒருவர் கண்டெடுத்து, செதுக்கிச் செப்பனிட்டு, அருமையான உருவம் ஒன்றை அமைத்தார் என்றால், அதன் பெருமை மொக்குக் கட்டைக்கா சிற்பிக்கா என்பதை வாசகர் அறிவர்.

இதுமட்டுமா...

தமது அறிமுக உரையின்மூலம் என்னைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளும் அத்தனைபேருக்குமே என்னில் சந்தேகம் உருவாகும் அரிய சந்தர்ப்பத்தையும் உருவாக்கிவிட்டார்.

புனித வளனார் கத்தோலிக்க அச்சக இயக்குநர் வண. S. A. ஞானப்பிரகாசம் S. S. J. அவர்கள் இந்நூல் சிறந்த முறையில் உருவாக பலவழிகளில் உறுதுணைபுரிந்து, தங்கள் முன்னாள் சிரேஷ்ட தலைவர் இறையடியடைந்த வண.

ஞானச்சகோதரர் S. பிலிப் S. S. J. அவர்கள் தங்களுககுக் காட்டிய வழிவகைகளைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக் கின்றோம் என்பதைப் பிரகடனப்படுத்திவிட்டார்.

5-10-74ல் நடந்தேறிய பாராட்டு விழாவில் உரை வழங்கியோரில் அமரத்துவமடைந்த திரு. K. V. M. சுப்பிர மணியம், திரு. P. ராஜன் செல்வநாயகம், திரு. D. S. K. வணசிங்க மூவர்க்கும் என் துன்பக் கண்ணீர் அஞ்சலி.

அவதி தெரிந்து உதவிபுரிந்தார் உதவித் தபால் அதிபர் திரு. S. தவராசா அவர்கள்.

சிலர் இலைமறை காய்போல் நின்றும் உதவிகள் புரிந் தனர்.

அச்சகப் பணியாளர்களான திரு. S. சிங்கராசா, திரு. R. குரூஸ் இருவரும் பணிவுடன் பணிபுரிந்தனர்.

திரு. K. சரவணபவான் தமது ஓவியத் திறமையாலும், புகைப்பட உதவியாலும், பழைய மாணவன் என்ற நிலை யைப் புதுப்பித்துக்கொண்டார்.

யாவருக்கும் எனது இதயக்கமல அன்பின் ஊற்று. கற்றறிந்தோர் இதிலுள்ள குறைநிறைகளைத் தெரிவிப்பா ராயின் அவை பெரிதும் பயன்படும்.

அன்பன்,

எஸ். பிரான்சிஸ்

19, ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.
8-12-94.

**வாசகர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள்.**

நூலை வாசிக்கத் தொடங்குமுன், இதனுள் இருக்கும் படங்களைப் பார்த்து விளங்கிக்கொண்டால், உமல், கரப்பு, அத்தாங்கு, ஒட்டிக்கூடு, போயாக்கட்டை, ஆசந்தி, தூம்பை, ஆடவர் தோளிலும் கா, இளநீர் வாணம், குப்பை அள்ளும் வண்டில் போன்றவைகளை நன்கு விளங்கிக்கொள்ளலாம்.



# I. சுருக்க வரலாறு

## 1. ஆரம்பகாலம்:

இலங்கை, போர்த்துக்கேயர் காலந்தொடங்கி (கி. பி. 1505) அரசியல் ரீதியாக மூன்று ஐந்து எனப் பிரிக்கப் பட்டு, இன்று திசை அடிப்படையில் ஒன்பது மாகாணங்க ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க சமயரீதியில் அது, ஒன்று இரண்டு ஐந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, இன்று நகர அடிப்படை யில் கொழும்பு, சிலாபம், குருநாகல், காலி, கண்டி, பதுளை, அநுராதபுரம், மன்னார், யாழ்ப்பாணம், திரிகோணமலை என்னும் பத்து மேற்றிராசனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வந். இக்னேஷஸ் கிளென்னி சே. ச. ஆயர் காலத்தில் - 1965ல் திரிகோணமலை மேற்றிராசனம், திருமலை - மட்டுநகர் மேற் றிராசனம் என மாற்றமடைந்தது.

**மேற்றிராசனம் எனப் பெயர்வந்த காரணம்:**

ஒரு மேற்றிராணியாரின் ஆட்சிக்கு உட்பட்ட இடம் மேற்றிராசனம். அங்குள்ள சிறந்த ஆலயம் ஆசனக்கோவில் என்ற பெயரைப் பெற்றது. இக்கோயிலில் மேற்றிராணியாருக் கெனத் தனி ஆசனம் உண்டு. இவ்வாசனத்தில் அமர்ந்தே விசேட சமயக் கிருத்தியங்களைச் செய்வார். (ஆசனக்கோயில் என்பது பேராலயம் - Cathedral; மேற்றிராணியார் என்பவர் - ஆயர் - Bishop. மேற்றிராசனம் என்பது மறைமாவட்டம் - Diocese).

திருமலை - மட்டுநகர் மறைமாவட்டம் கிழக்கு மாகா ணம் முழுவதையும் அடக்கியுள்ளது. மின்னேரி... சில இடம் நீங்கலாக - வட எல்லையாக மா ஓயாவையும், தென் எல்லை யாக கும்புக்கன் ஓயாவையும் கொள்ளலாம். கிழக்கு ஓரம் முழுவதும் வங்காளவிரிகுடாக் கடல் நீரால் அலசப்படுகிறது. மேற்கு எல்லையாக வடமத்திய, மத்திய, ஊவா மாகாணங் களின் கிழக்குப்பகுதி ஓரங்கள் அமைகின்றன. இதன் நீளம் இலங்கையின் கிழக்குக்கரை மொத்த நீளத்தில் சுமார் நாலில் மூன்றாகும்.

## 2. இயற்கை அமைவு :

இலங்கையின் அதிநீளமான மகாவலிகங்கை (330 கி.மீ.). மதுறுஓயா, கல்லோயா ஆறு உட்படப் பதினான்கு (14) ஆறுகள் இதனூடாக வங்காளவிரிகுடாக் கடலில் விழுகின்றன. நீர்ப்பாசனம் அதிகம்; சற்று மழை கூடினால் வெள்ளமும் அதிகம்; சேதமும் அதிகம்.

இப்பிரதேசத்தின் சுமார் பத்தில் ஒன்பது பாகம் பதிந்த கரையோரச் சமவெளி. எனவே நெல்லுக்கும், தென்னைக்கும் நல்ல நிலம். கரையோரம் முழுவதும் கண்டமேடை உண்டு (கண்டமேடை என்பது மீன்பிடிபடும் இடம்). உலகில் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றான திருமலைத் துறைமுகம், அன்றும் இன்றும் வல்லரசுகளைக் கவர்ந்துகொண்டிருக்கும் பாதுகாப்பான இயற்கைத் துறைமுகம். இது இப்பிரதேசத்துக்கு மட்டுமல்ல, முழு இலங்கைத் தீவுக்குமே சிகரமாகத் திகழ்கின்றது.

48 மைல் (77 கி.மீ.) நீளமான மட்டுநகர்க் கடல் நீர் ஏரியும், உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பாசிக்குடாக் கடற்கரையும் உண்டு. மட்டுநகர் முகத்துவாரம் (Bar), கற்குடா ஆகிய இரு துறைகளிலும், பருவப்பெயர்ச்சிக் காற்றின் தாக்கத்தால் ஆறாறுமாதம் மாறிமாறிக் கப்பல்கள் கரை தட்டின. 1929 பங்குனியில் மட்டுநகர்ப் புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டதால் கப்பற்பயணம் நின்றுவிட்டது.

கிழக்கிலங்கையில் இரு முக்கிய நகரங்கள் புகழ்பெற்றவை. ஒன்று திரிகோணமலை, மற்றது மட்டுநகர்.

திருகோணமலை அழகான ஓர் இடம். இது, துறைமுகத்தைப் பாதுகாத்து முக்கோண வடிவில் மூன்று மலைகள் அமைந்திருப்பதால் தமிழில் திரிகோணமலை எனவும், ஆங்கிலத்தில் றிங்கோமலி (Trincomalee) எனவும் பெயர் பெற்றது. மும்மலைகளில் ஒருமலை, சைவப் பாடல்பெற்ற திருத்தலமாகிய கோணேசர் மலை. இதன் புனிதத்தன்மையை விளக்கத் 'திரு' என்னும் அடைமொழி சேர்த்துத் திருக்கோணேசர் மலை என்றனர். நாளடைவில் திருக்கோணமலை - திருமலை என மருவிற்று. இதற்கு அரணாக ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டை அமைந்துள்ளது.


மட்டுநகர் கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் ஆகும். மட்டுநகர் வாவியிலுள்ள புளியந்தீவில் கட்டப்பட்ட ஒல்லாந்தர் கோட்டையுமுண்டு. வாவியின் நீளம் 48 மைல். மேற்குக்



## கிழக்கிலங்கை

A, B விளக்கம் மறுபக்கம்

வட எல்லை மாஓயா




தென் எல்லை குமுக்கன் ஆறு.

நன்றி: மட். தமிழகம்.

### கிழக்கிலங்கைப் பட விளக்கம்

## A

இயற்கை அமைவில் கிழக்கிலங்கை,
அரசியல் அமைப்பில் கிழக்கு மாகாணம்.

கத்தோலிக்க மறைமாவட்ட அரங்கில்,
திரிகோணமலை மேற்றிராசனம் - 1893.


திருமலை – மட்டுநகர் மறைமாவட்டம் – 1965.

## B

**மேற்றிராசன பீடத்திலமர்ந்து
வழிநடத்திய ஆயர்கள் :**

*1895* — முனிசிரேஷ்டர் J. வன்றீத் (பரிபாலகர்)
*1898* — வந் C. லவிங்.
*1924* — வந். G. றொபிஷே
*1947* — வந். I. கிளென்னி
*1967* — வந். B. தியோகுப்பிள்ளை
*1974* — வந். L. R. அன்ரனி
*1979* — அதி. வண. நோபேட் A. ஒக்கஸ் (பரிபாலகர்)
*1983* — வந். J. K. சுவாம்பிள்ளை.

### மட்டுநகர் வாவியும், தென்னஞ்சோலையும்



மட்டக்களப்பு என்னும் பெயருக்குக் காரணிகளாய்
அமைந்த இடம்.
களப்பு நிறைம் மட்டைகளும்.
இதில்தான் புளியந்தீவு அமைந்துள்ளது.

## மட்டுநகர் கடலேரியும், படுவான்கரை வயல்வெளியும்



கரைபோர மக்களில் 90 விதமானோர் வாழ்வு பெறும் இடம்.
இறால், நண்டு, மீன்கள் உண்டு.
சிலகாலங்களில் கவிர் வெளிச்சமும் உண்டாகும்.
இடைக்கிடை முதலைகளும் உலாவும்.

கரை ஓரம் (படுவான்கரை) முழுவதும் வயல் நிலம். கிழக்குக் கரை ஓரம் (எழுவான்கரை) முழுவதும் தென்னந்தோட்டம். ஏரி ஆழமற்ற களப்பு நிலம். தேங்காய்களும், மட்டைகளும் மண்டிக்கிடந்தன. மட்டையும் களப்பும் சேர்ந்து மட்டக் களப்பு ஆயிற்று. சேறும் களப்பும் சேர்ந்து (சேறு Mud-மட்) மட்டக்களப்பு ஆனது எனவும், பாலும் தேனும் பொழியும் இடமாதலின் மட்டுநகர் என மாறிற்று எனவும் கூறுவர். படுவான்கரையில் உள்ள தான்தோன்றீஸ்வர ஆலயம் புகழ் பெற்றது.

### 3. மட்டுநகர் வாவி :

படுவான்கரைப் பகுதியில் நெற்செய்கை, சேனைச் செய்கை, பசுமாடு, எருமைமாட்டுப் பட்டிகள் – வாவியில் மீன், நண்டு, இறால் ஏராளம். கரப்பு, அத்தாங்கு கொண்டு மட்டறால் பிடிப்பர். இது இன்றைய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்று. இதனால் மட்டுநகர்வாசிகளுக்கு ''மட்றால்'' என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று - திருமலைவாசிகளுக்குச் ''சூடைமீன்'' என்றதுபோல.

மட்டுநகர் வாவியில் எருமைதீவு, காக்காய்த்தீவு, கரையாக்கன்தீவு, மாந்தீவு எனப் பல தீவுகள் உள்ளன. மாந்தீவில் 1915ம் ஆண்டு தொடங்கி, பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர் தொழுநோய் வைத்தியசாலையைக் கட்டி, நோயாளிகளைப் பராமரித்துவந்தனர். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் ஆட்சியில் வெளிநாட்டார் வரத் தடையேற்பட்டதும் அரசாங்கம் பொறுப்பேற்றது. இதைச் சுற்றிய வாவி ஆழங்கூடியதால், வள்ளத்தில் பயணஞ்செய்த ஏழுபேர் இறந்தனர். இதனால் ''ஏழு தாலி அறுத்த கடல்'' எனப் பெயர் வழங்குகிறது. எருமைதீவு ஒன்பது மைல் சுற்றளவு. முழுவதும் நன்செய் வயல். இதனால் பெரியகளம் என வழங்கப்படுகிறது. இவ் வாவி பன்குடாவெளி தொடங்கி, கல்முனை கிட்டங்கித்துறை வரை நீண்டுகிடக்கின்றது. இக்கிட்டங்கித்துறை வழியாகவே வண. யோசேவாஸ் அடிகளார் மட்டுநகர் வந்ததாகச் செவிவழிக் கதை.

மட்டுநகரில் இருந்து கல்முனை செல்லும் பாதையில் 20 கல் தொலைவில் கல்லாறு என்னுமிடம், கால் நூற்றாண்டுக்குமுன் நன்கு கற்ற சிலர் இருந்ததால் கல்வியாறு எனக் கூறினர். இப்போது அப்பெயர் அருகிவிட்டது. இந்த இடமும் மட்டுநகர் வாவிக்கரையில்தான் அமைந்துள்ளது. 48 மைல் நீளமான ஏரியில் வேறு எங்கும் அகப்படாத ஒன்று இங்கே உண்டு. அதுதான் கூனி. இரு பெண்கள் நின்று ஒட்ட நீரில்

சிலையை மறித்துப்பிடித்து வடித்து எடுத்துக் காயவைத்து விற்பர். மிகவும் உருசியான சின்னஞ்சிறிய இறால். இதனால் ''கல்லாற்றுக்கூனி'' என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று - செட்டிபாளையத்தில் ''காய்ச்சுப்பு'' என்றதுபோல.

காலை நேரத்தில் இறால் தோணி, மீன் தோணி என நூற்றுக்கணக்கான தோணிகளை வாவியில் காணலாம். கூடு போட்டும் பிடிப்பர். இன்னும் நண்டுக்கூடு, ஒட்டிக்கூடு என்பன நடைமுறையில் உண்டு. இவர்கள் ஆழ்கடல் மீன்பிடியை அறியாதவர்கள். இலங்கையின் மேற்கு, தெற்குப் பகுதிகளில் பாடுகிடைக்காதவர்கள் (பாடு என்பது ஆழ்கடல் மீனவர்க்குக் கடற்கரையில் ஒதுக்கிக்கொடுக்கப்படும் இடம்) கிழக்குக்கரையோரம் வந்து குடியேறினர். அப்படிக் குடியேறிய நீர்கொழும்புக் கத்தோலிக்க மீனவர்களை இன்றும் மாங்கேணியிற் காணலாம்.


ஆரம்பகாலத்தில் பிராஞ்சிய நாட்டில் இருந்து வந்த வண. டிலாஹே சே. ச. குருவானவரால் வேடர்களுக்கெனக் கட்டப்பட்ட ''சம்மனசுக்களின் இராக்கினி'' என்னும் தேவாலயத்தைத் தமதாக்கிக்கொண்டனர். அங்கு ஒரு கன்னியர் மடமும் உண்டு.

பொதுவாக எல்லா மக்களும் தங்கள் நாளாந்த உணவில் எருமைப்பால் தயிர் சேர்த்துக்கொள்வதால் ''அறபிக் குதிரையானாலும் பிறவிக்குணம் போகாது'' என்பதற்கமைய எருமையின் மந்தபுத்தி உள்ளவராயினர் எனக் கூறுவர். (*Batticaloneons are buffaloes, without horns and hoofs*) ''மட்டக்களப்பார் கொம்பும் குளம்புமற்ற எருமைகள்'' என்ற சொற்தொடர் வழங்கலாயிற்று. இப்படிச் சொன்னவர்கள் வெளிமாகாணங்களில் இருந்து உத்தியோகத்திற்காக இங்கு வந்தவர்களே. இப்படிச் சொன்னவர்களே கொஞ்சக்காலத்தின்பின் ''வந்தாரை வாழவைக்கும் மட்டக்களப்பு'' என வாயார வாழ்த்தி, சோடி தேடிக் குடிபதிகளாகிப் பெருஞ் செல்வந்தராகவும் மாறினர்.

## 4. மக்கள் வாழ்க்கை நிலை :

ஆரம்பத்தில் செல்வம், கல்வி, சமயம் இவைகளில் எதுவுமே அவர்களது வாழ்க்கைக்குத் தேவைப்படவில்லை. சாப்பாட்டுச் சாமான் எதையும் பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலை இருக்கவில்லை. அப்படி ஏற்பட்டாலும் சிறிய சில்லறையே போதும். அப்போது வழக்கத்தில் புழங்கிய நாணயங்கள் சல்லி ($\frac{1}{2}$ சதம்) சதம். துட்டு ($1\frac{1}{2}$ சதம்) - பேச்சுவழக்கில். காசு (5 சதம்), பணம் 6 சதம், பத்துச்சதம். சதத்தோடு







உமல்
'போடியாரின் மணிப்பர்ஸ்'




அத்தாங்கு




நண்டுக் கூடு




ஒட்டிக் கூடு




போயாக் கட்டை




ஆசந்தி




உடுக்கை




தாம்பை




இளநீர் வாணம்



கரப்பு



மணியத்தார் போட்




குப்பை வண்டில்



ஆடவர் தோளிலும் கா



கூனி வடித்தல்



பீரங்கி

நாலுபணம் (25 சதம்) - கால் ரூபா. அரை ரூபா (50 சதம்) - (எட்டுப்பணம்). முக்கால் ரூபா பேச்சுவழக்கில் - இதை இறையால், இறைசால் என்றும் கூறினர். ஒரு ரூபாக் குத்தி என்பன. தற்செயலாக ஒருவர் இடறிவிழுந்தால் ''புறக்கிய துட்டில் ஒரு சல்லியைத் தா'' என்று பகிடியாகக் கேட்பர். (சல்லிமுட்டி என்பது இன்னும் வழக்கில் உள்ளது. சல்லியைக் கொடுத்தே குழம்புக்கறிக்குச் சரக்குச்சாமான் வாங்கிய காலம். இப்போது பிச்சைக்காரர்கூட 25 சதத்துக்குக் குறைவாகக் கொடுத்தால் வாங்காத காலம்).

சிலர் பெரும் போடிமாராகவும், தோட்டக்காரராகவும் இருந்து பணத்தில் புரண்ட காலம் அது. (உ+ம்) திரு. வைத்திலிங்கம் என்பவருக்குக் கோமாரியில் தென்னந்தோட்டம் ஒன்று இருந்தது. இது நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்புடையது. இதில் இருந்து உருவான உவமைத்தொடர் ''கோமாரித் தோட்டத்தில் தேங்காய் ஆய்வதுபோல'' என்பது. இதன் விளக்கம்: தோட்டத்தில் தேங்காய் ஆய்வதற்கென அமர்த்தப்பட்ட குழு, கொக்கைத்துறட்டியால் ஒரு தொங்கலில் இருந்து ஒவ்வொரு மரத்திலும் பழுத்த இவ்விரு குலைகளாக ஆய்ந்து கொண்டு செல்வர். அடுத்த தொங்கலுக்குப் போய்ச்சேர இரு மாதங்கள் செல்லும். இதற்கிடையில் முதலில் ஆய்ந்த மரத்தில் இரு குலைகள் ஆயக்கூடிய நிலைக்கு வந்துவிடும். எனவே பழையபடி திரும்பிவந்து ஆய ஆரம்பிப்பர். படித்த பாடங்களை மறந்து மறந்து, திரும்பியும் ஆரம்பத்திலிருந்து படிப்போருக்கு இந்த உவமை பொருந்தும். இக்காலம்தான் கொப்பறா இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட காலம்.

வயல்களில் அரிவி வெட்டிமுடிந்தால், கதிர் பொறுக்குவோருக்கும் பட்சிசாலங்களுக்கும் ஒரே மகிழ்ச்சி (வெட்டுக்காரர், உப்பட்டி கட்டுவோரின் தாராள சிந்தையால்). விதைநெல்லு, படிநெல்லு, சாப்பாட்டுநெல்லு இவைகளை வைத்துக்கொண்டு, மீதியை வியாபாரிகளுக்கு விற்பர். வியாபாரிகள் முஸ்லிம்களும், யாழ்ப்பாணத்தவரும். போடியார் வருடம் ஒருமுறை கடுக்கன், குடை, கொண்டை சகிதம் பட்டணம் வருவார் (உடுபுடைவை, சாராயம் வாங்க). பின்னால், முல்லைக்காரன், காவல்காரன், இனசனம் என ஒரு பட்டாளமே வரும். இடையிடையே தெருவில் நின்று புதினம் பார்த்துக் கொண்டே செல்வர். "பட்டிக்காட்டான் பட்டணம் பார்த்ததுபோல" என்ற தொடர் வழக்கில் வந்தது. இப்போதுதான் போடியாரிடம் 10 ரூபா, 100 ரூபா நோட்டுக்களை உமலுள் காணலாம். (உமல் என்பது பாய் இழைக்கும் பன் என்னும் புல்லால் செய்யப்பட்ட பை.)

## 5. கல்வி :

கல்வியைப்பற்றிக் கனவுகூடக் காணாத காலம் தமிழ் நன்றாகப் பேசுவர். சுவாமி விபுலாநந்த அடிகளார் பாடியது போல "ஆடவர் தோளிலும் கா, அரிவையர் நாவிலுங் கா" கா என்னும் அசை சேர்த்துப் பெண்கள் கதைப்பர். கேட்க இனிமையாகத்தான் இருக்கும். ஆண்கள் மாலையில் பொழுது போக்கிற்காகக் கூடியிருந்து கதைப்பர், சீட்டாடுவர், கூத்தும் ஆடுவர். அண்ணாவியார் "மதன துரந்தர மன்னன்தானே" என்று சொல்லிக்கொடுத்தால், "மெதன துரந்தர மென்னன் தானே" என அகரத்துக்குப் பதிலாக எகரம் சேர்த்துப் பாடுவர்.

கி. பி. 1814ல் மெதெடிஸ்த பாதிரியார் வண. வில்லியம் ஒல்ற் மட்டுநகர் வந்தார். அவரது குறிக்கோள் "சமயத்தைப் பரப்புவதாயின் கல்விச்சாலைகள் அவசியம்" என்பது. ஐந்து மாணவர்களுடன் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். அது இன்று மெதெடிஸ்த மத்திய கல்லூரியாகத் திகழ்கின்றது. இவர் அடுத்த ஆண்டிலேயே, நோய்வாய்ப்பட்டு இறைபதமடைந்தார். இவரின் ஞாபகார்த்தமாக ஒல்ற் மண்டபம் நிறுவப்பட்டது. மட்டுநகர் வைத்தியசாலை வீதியும், தபால் நிலைய வீதியும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது. 14 ஆண்டுகளின் பின்னரே மெதெடிஸ்த தேவாலயம் கட்டப்பட்டது.

பெண்கள் கல்விக்கு வித்திடப்பட்டது. 1838ல் வீட்டுப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, பல எதிர்ப்புகளின் மத்தியில் 1849ல் மிஷன் பாடசாலையாகி 1895ல் வின்சன்ட் பெண்கள் பாடசாலையாகியது. இன்று வின்சன்ட் மகளிர் உயர்தரக் கல்லூரியாக மிளிர்கின்றது.

1873ல் யாழ்ப்பாண கத்தோலிக்க ஆயர் அவர்கள் பிரான்சிஸ் சேவியர் என்னும் குருவானவரை மட்டுநகருக்கு அனுப்பினார் பாடசாலை கட்டும்படி. (அப்போது இம்மேற்றிராசனம் யாழ். மேற்றிராசனத்துடன் சேர்ந்து இருந்தது.) ஐந்நூறு ரூபாவுடன் வந்த குருவானவர் தனது பெரும் முயற்சியால், பஸ்கோல் முதலியாரிடம் இனாமாகப்பெற்ற நிலத்தில் புனித மிக்கேல் ஆண்கள் ஆங்கில பாடசாலையைக் கட்டினார். 1875ல் 57 மாணவர்களுடன் திரு. ஜோசப் ஆபிரகாம் என்பவர் தலைமைப் பதவியேற்றார். அரை நூற்றாண்டு காலம் சிறந்த சேவையாற்றி 1925ல் யேசுசபைக் குருக்களிடம் ஒப்படைத்தார். இவரது சிறந்த சேவையைப் பாராட்டிய 15ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசர் '*BENE MERENTI*' –



## கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்




குளக்கோட்டன் கட்டியதாகக் கல்வெட்டு.

மட்டக்களப்பில் தேர் இழுக்கும் ஒரேயொரு ஆலயம்.

பார்வதி பரமசிவனுக்குப் பெரிய தேர்,
விநாயகர் முருகனுக்குச் சிறிய தேர்.

நன்றி: மட். தமிழகம்;




மூன்று நூற்றாண்டு கண்ட அரசமரம்.
அரசடி: மணிக்கூட்டுக் கோபுரமாக மாறிற்று.

ஆசிரிய கலாசாலை மூடப்பட்டதும்
அரசடி என்னும் பெயர் மங்கியது.

சாதனா பாடசாலை மகாஜனக் கல்லூரியானதும்
அரசடி அடியோடு மறைந்தது.

'*WELL DESERVED*' என்னும் தகைமைப் பதக்கத்தை அன்பளிப்புச் செய்தார்.

இக்கட்டிடம் எவ்வளவு சிறந்ததென்றால், அதை இடித்து அழிக்க மனமில்லாமல், புனித மரியன்னை உபபேராலயத்தின் சக்கிறிஸ்தியாகச் சேர்த்துள்ளனர். இன்றும் நிலையாக நிற்கின்றது. (*Sacristy of St. Mary's Co-Cathedral, Batticaloa*) - சக்கிரிஸ்ரி என்பது பூசைப்பலிக்கு ஆயத்தம் செய்யுமிடம். அடிகளார் நிறுவிய பாடசாலைகள் மூன்று. 2வது புனித மரியாள் ஆண்கள் தமிழ்ப் பாடசாலை, 3வது கார்மேல் பெண்கள் தமிழ்ப் பாடசாலை. மூன்று கட்டிடங்களுக்கும், இரு பாடசாலை நிலத்துக்குமான மொத்தச் செலவு இரண்டாயிரம் ரூபா மாத்திரமே.

## 6. பாடசாலைகள் :

ஆங்கில பாடசாலைகள் அன்றே ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஆங்கிலச் சொற்கள் மாணவர் நாவில் நடனமாட அதிக காலம் சென்றது. 35ம் ஆண்டில்கூட புனித மிக்கேல் கல்லூரியில் வகுப்பு நேரத்தில் தமிழில் கதைத்த குற்றத்திற்காகப் பத்துப் பத்துச் சதம் தெண்டப்பணம் கட்டியவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அக்காலம் சைவப்பாடசாலை என்று சொல்லக்கூடியதாக இருந்தது, மட்டக்களப்பில் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில் வளவுக்குள், காலஞ்சென்ற கா. அருணாசல தேசிகர் அவர்கள் படிப்பித்த ஒரு சிறிய பாடசாலை மாத்திரம்தான். 1933ல் சுவாமி விபுலானந்தர் அவர்கள் கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலய அதிபராக வந்தபின்புதான் ஆங்காங்கு பல இ. கி. மி. தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமாகிய திரு. V. நல்லையா போன்றோரை உருவாக்கிய காரணத்தால் சிவாநந்தா வித்தியாலயமும் வீறுகொண்டு எழுந்தது. தமிழ்மணமும் எங்கும் பரவத்தொடங்கியது.

1880ல் அரசடி என்ற இடத்தில் பெரிய அரசமரம் ஒன்று இருந்தது. (இன்று ஆஞ்சநேயரது மணிக்கூட்டுக் கோபுரம்.) மெதடிஸ்த சபையினரால் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. போதக ஆசிரியர்களாக வேதநாயகம் போதகரும், தம்பு மாஸ்ரரும் யாழ்நகரில் இருந்து வரவழைக்கப்பட்டனர். பயிற்சி பெறுவோரும் அங்கிருந்தே வந்தனர். தகுதியுள்ள மாணவர்களும் இங்கு இருக்கவில்லை.

இரு ஆண்டுப் பயிற்சி முடிந்ததும், நாட்டுப்புறப் பாடசாலை களுக்குத் தமிழும், சமயமும் கற்பிக்க அனுப்பப்பட்டனர். இவர்களே தமிழ்க் கல்விக்கு வித்திட்டவராயினர். நாளடை வில் நாட்டுப்புற மாணவர்களும் பயிற்சிக் கலாசாலையில் சேர்க்கப்பட்டனர்; பயிற்சி முடிந்தால் இவர்களுக்குரிய ஒரே யொரு தொழில் ஆசிரியத் தொழில்தான். சம்பளமும் நாலைந்து ரூபாவுக்குமேல் இல்லை. நாகரிகமும், பண்பாடும் குறைந்தவர்கள். எனவே மக்கள் இவர்களை மதிக்கவில்லை. வெளிநாட்டு வித்தியாதரிசிகளும் இவர்களை அடக்கி ஒடுக்கி வைத்தனர். உபாத்தியார், ஆசிரியர் என்ற பெயர் மறைந்து 'வாத்தி' என வழங்கலாயிற்று. இதை இழிவான தொழி லாகவும் கருதினர்.

**'வயித்துக்கில்லாதவன் வாத்தி'.** மூர்க்கக்குணம் படைத்த தன் மகளுக்குத் தாயோ தந்தையோ ஏசும்போது ''இருந்து பார்ரீஇ ; உன்னத் தமிழ் வாத்திக்குத்தான் கட்டிக்குடுப்பண்டீஇ'' என்ற பேச்சுக்களும் நிலவத்தொடங்கின. இந்த நிலைமை 1931 வைகாசியில் சஞ்சூசையப்பர் சபைத் துறவிகள் யாழ் நகரில் இருந்து இங்குவந்து புனித அகுஸ்தீனார் ஆசிரியர் கலாசாலை, புனித மரியாள் பாடசாலை – விடுதிச்சாலை, அநாதர்சாலைகளுடன் – இவைகளைக் கையேற்றதும் மெல்ல மெல்ல மாறத்தொடங்கியது. இவர்களை யாழ்ப்பாணத்து விறதர்மார், கொழும்புத்துறை விறதர்மார், படிப்பிக்கும் விற தர்மார் எனப் பல பெயர்களால் அழைத்தனர்.

## 7. கத்தோலிக்கரின் கல்விப்பணி :

1907ம் ஆண்டு தொடங்கியே கத்தோலிக்க ஆயரும், குருக்களும், விசுவாசிகளும் சேர்ந்து பயிற்சிக் கலாசாலை ஒன்றை உருவாக்கப் ''பகீரதப் பிரயத்தனம்'' பட்டும் நிறை வேறவில்லை. காரணம் படிப்போரும் இல்லை. படிப்பிப் போரும் இல்லை. விறதர்மார் இங்கு வருவதற்கு வழிகாட்டி யாகவும், மட்டுநகருக்கு விடிவெள்ளியாகவும் அமைந்தவர் காலம்சென்ற வந். காஷ்டன் றொபிஷே சே.ச. ஆண்டகை அவர்கள். யாழ்ப்பாணத்துக்கு விறதர்மாரிடம் தூதுசென்ற வர். தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலயப் பங்குத் தந்தையாக இருந்த வண. பற்றிக் அடிகளார், வசிப்பிடமாக ஆயர் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ''வில்காசிம்'' மண்டபத்தை விரும்பாது, மாதா கோயிலின் அருகில் திரு. வர்ணகுலசிங்கம் உபதேசியார் குடியிருந்த சிறிய வீட்டைக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். (வில்காசிம் மண்டபம் இப்



போது 'சுபராஜ்' தியேட்டராகவும், 'சீலோஆம்' வைத்திய சாலையாகவும், உபதேசியாரின் வீடு, பங்குத்தந்தையின் மாடிவீடாகவும் அமைந்துள்ளன.) விறதர்மாரிடம் கல்வித் திறமையும், பேச்சுச் சாதுரியமும் இருந்ததால் மக்களை இலகு வில் கவர்ந்துகொண்டனர். வாசகர்களும் சுவைக்கும்படி இரு உதாரணங்கள் :

(i) வண. பிலிப் விறதர் ஒருநாள் நீதிமன்றத்தில் சாட்சி சொல்லிக்கொண்டிருந்தபோது, வக்கீல் கேட்ட கேள்விக்கு நீண்ட பதிலைச் சொல்லியதால் வக்கீல் அவரைப் பார்த்து ''நீங்கள் நான் கேட்கும் கேள்வி களுக்கு ஆம் அல்லது இல்லை என்ற பதிலை மாத் திரம் சொல்லவேண்டும்'' எனக் கடுமையாக வக்கீ லுக்குரிய தோரணையில் கூறிவிட்டார். உடனே விறதர் நீதிபதியைப் பார்த்து, *Your honour, May I ask a question from this gentleman''* 'மேதகு நீதிபதி அவர்களே! இந்தக் கனவானிடம் நான் ஒரு கேள்வி கேட்கலாமா' எனக் கேட்டார்.

நீதிபதி, ''*Yes, proceed*'' எனச் சம்மதம் தெரிவித் தார்.

விறதர் வக்கீலைப் பார்த்து ''ஐயா! நீங்கள் ஒவ் வொருநாளும் குடித்துவிட்டுப்போய் மனைவிக்கு அடிக்கும் பழக்கத்தை இப்போது விட்டுவிட்டீர்களா? ஆம் இல்லை என்ற பதிலை மாத்திரம் கூறுங்கள்'' என் றார். வக்கீல் திண்டாடினார். கோட்டார் கொல் லென்று சிரித்தனர். நீதிபதி வழக்கை ஒத்திபோட்டு விட்டு அறைக்குச் (chamber) சென்றார். இக்கதை ஊர்முழுவதும் பரவிற்று.

(ii) மற்றொரு உதாரணம் ; அன்று சுகாதார வாரக் கொண்டாட்டக் கடைசிநாள். வில்காசிம் வளவில் பொதுக்கூட்டம். நிருவாகிகள் டாக்டர் குருவில்லா வும், S. M. R. ஆம்ஸ்றோங் (மைனர் றோட் சுப்பி றீந்தர்) அவர்களும், கடைசிப் பேச்சாளராக இன்னாசி முத்து விறதர் அவர்கள் அழைக்கப்பட்டார். பேச்சின் இறுதியில், ''குருவில்லா வித்தை பாழ்''. ஒரு அலுவலைத் திறம்படச் செய்வதாயின், பண பலமும், புஜ பலமும் தேவை. இவைகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற டொக்டர் குருவில்லாவும், பணமும், கைப்பெலனும் கொண்ட ஆம்ஸ்றோங்

அவர்களும் சேர்ந்தால் கேட்கவாவேண்டும். எல்லாம் ஜாம் ஜாம் என்று அமைந்தன'' எனத் தனது கணீர் என்ற குரலில் தனது தோளிலும் தட்டிப் பேசினார்.

இருவரது பெயர்களைப் பொருத்தியதையும், தமிழ், ஆங்கிலம் இரண்டையும் பொருத்திப் பேசியதையும் மக்கள் வெகுவாகப் பாராட்டினர் – மதிப்புக் கொடுக்கத்தொடங்கினர்.

சஞ்சூசையப்பர் சபைத் துறவிகள் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை அரை நூற்றாண்டுக்கு மேலாகத் திறம்பட நடாத்திய அனுபவம் உடையவர்கள். இங்கும் பாடவிதானத்தை விரிவுபடுத்தினர். இருவருடம் பயிற்சி பெற்று வெளியேறும் ஒவ்வொருவரும், ஆசிரியர் தராதரப் பத்திரத்துடன், பிரவேச பண்டிதம், பாலபண்டிதம், சித்திரம், சங்கீதம், ஆங்கிலம், தேகப்பயிற்சி, சமயம் (கத்தோலிக்கர் மட்டும்) ஆகிய பாடங்களிலும் தனித்தனித் தகைமைப் பத்திரம் பெறப் பெருமுயற்சியெடுத்தனர். கரபந்தாட்டத்திலும் வீரர்களாக்கினர். கலாசூரி மகாவித்துவான் பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா (F. X. C.) அவர்களும் இச்சாலை மாணவரே.

இக்கலாசாலையின் மதிப்புக் கூடத்தொடங்கியதும் அரசடிக் கலாசாலையின் மதிப்புக் குறையத்தொடங்கியது.

பயிற்சி முடிந்த ஆசிரியர், தமிழையும், சமயத்தையும் திறம்படக் கற்பிக்கத்தொடங்கினர். அப்போதிருந்த சமயப் பாடப்புத்தகம் யாழ். புனித வளனார் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்ட ''சின்னக்குறிப்பிடம்'', ''பெரியகுறிப்பிடம்'' என்னும் வினா விடைப் புத்தகம் இரண்டும்தான்.

கத்தோலிக்க பாடசாலைகள் கத்தோலிக்க முகாமையில் இருந்ததாலும், அவர்களே தவணைக்கொருமுறை அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்று, மாத வேதனமாக ஆசிரியர்க்கு வழங்கியதாலும், அடிக்கடி, பரீட்சித்துப் பார்த்ததாலும் கத்தோலிக்க கல்விப்பணி துரித வளர்ச்சிபெற்றது.



# II. வாழ்க்கை வசதிகள்

## 1. போக்குவரத்து :

திருமலை – மட்டுநகர் இடைத்தூரம் 86 மைல்தான் (138 கி. மீ.). ஏழு துறைகளைக் கடக்கவேண்டும். ஒவ்வொரு துறைக்கும் மிதக்கும் படகு (Ferry) இருந்தது. 1922ல் ஓட்டமாவடிப் பாலம். 1973ல் திரு. K. W. தேவநாயகம் அவர்களின் முயற்சியால் பனிச்சங்கேணிப் பாலங்கள் கட்டப்பட்டபின்னும், மூதூருக்கும், திருமலைக்குமிடையில் கொட்டியாரக் கடலில் இயந்திர வள்ளம் (Motor Launch) சேவைக்கு வந்தபின்னும் பிரயாணம் கொஞ்சம் கொஞ்சமாக இலேசாகியது. இந்திய பாதுகாப்புப் படை இங்கிருந்தபோது வெருகல் துறைக்கு இறப்பர் பாலம் அமைத்திருந்தனர். இப்போது அது இல்லை. ஏழு துறைகளையும் வாகனங்கள்மூலம் கடந்துசெல்லும் பிரயாணம் 1912ல் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லீம், தமிழ்க் கிராமங்களுக்கூடாகச் சென்றதால் இடையிடை முஸ்லீம், இந்து, கத்தோலிக்க வழிபாட்டுத் தலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு இருந்தது. சுமார் 10 மணித்தியாலப் பயணம். 1950 வரையில் ஹபரணைச் சந்தியால் திரும்பி வரும் பிரயாணம் சுமார் 150 மைல். எனினும் 6 மணித்தியாலத்தில் வந்துவிடலாம். ஆனால் 56ன் இனக்கலவரத்தின் பின் உயிரைப் பணயம் வைக்கவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுவிட்டது.

மட்டுநகர் – கல்முனை, இடைத்தூரம் 24 மைல்தான் – 38 கி. மீ. 1924ல் கல்லடிப் பாலம் கட்டப்பட்டபின் வாகனங்கள்மூலம் பிரயாணம் இலகுவாகியது. எனினும் மாரிகாலத்தில் கல்லாற்றில் இரு தாம்போதிகளைக் (Cause Ways) கடக்கவேண்டும். மாரிகாலத்தில் இவைகளுக்கு மேலால் ஐந்து ஆறு அடி உயரத்தில் நீர் பாயும். ஒந்தாச்சிமடத்துக்கும், கோட்டைக்கல்லாற்றுக்கும் இடையில் ஒன்று. கோட்டைக்கல்லாற்றுக்கும், பெரியகல்லாற்றுக்கும் இடையில் மற்றது. ஆற்று வெள்ளமும், காட்டு வெள்ளமும், இங்கினியாக் கலைக்குளத்து வெள்ளமும் கடலுட் பாயக்கூடிய வகையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. S. M. இராசமாணிக்கம் அவர்களது முயற்சியால் 1958ல் இரு தாம்போதிகளும் கட்டப்பட்டன. மாரிகாலத்திலும் பிரயாணம் தடைப்படவில்லை.

1924ல், கல்லடிப்பாலம் கட்டப்படுமுன், கல்முனைப் பிரயாணம் மிகமிகச் சங்கடமான நிலையில் இருந்தது. மட்டுநகர்க் கோட்டை (கச்சேரி)யின் கிழக்குப்பகுதி வாவிக்கரையில் வாடகைத் தோணிகள் இருக்கும். ஒரு சதம் கொடுத்து மறு கரைக்குச் (கல்லடிக் கரைக்கு) செல்வர். விரும்பினால் இதே ஒருசதத்துடன் திரும்பியும் வரலாம். இடைத்தூரம் சுமார் 200 யார்தான் (180 மி. மீ.). மாடுகள், மாட்டுவண்டிகள், துவிசக்கரங்கள் மறுகரை செல்வதாயின் மிதக்கும் படகு (*Ferry*) ஒன்று இருந்தது. ஆனால், போதியளவு வாகனம் சேரும்வரை காத்திருக்கவேண்டும்.

இக்காலத்தில், யாழ். வாசியான திரு. மணியம் என்பவர் அரும்பாடுபட்டு, அரசாங்கத்தால் புளியந்தீவுப் பாலம் தொடங்கிக் கிட்டங்கித்துறைவரை, வாவியில் ஆழங்குறைந்த நடுப்பகுதியைத் தோண்டுவித்து, வழிப்பாட்டைச் சரியாகக் காட்ட இடையிடையே கொங்றீற் தூண்களை நடுவித்து (இத்தூண்களைப் போயாக்கட்டை என்பர். நீலாவணைப் பக்கத்தில் இப்போதும் காணலாம்) இயந்திர வள்ளச் சேவையை ஆரம்பித்தார். இது தென்பகுதிவாழ் மக்களுக்குப் பெரியதொரு வரப்பிரசாதமாகியது. இந்த வள்ளம் சிறிய கப்பலைப்போன்ற தோற்றம். சுமார் 50 அடி நீளம், 20 அடி அகலம். ஓடத்தின் உட்புற ஓரமாக வளைத்துப் பயணிகளுக்கான ஆசனம், வாங்குபோல - பலகையினால் அமைக்கப்பட்டது. நடுவில் சாமான்கள் - நெல், அரிசிமூடைகள், வெற்றிலைத் தட்டிகள், பாய்க்கட்டுக்கள் ஏற்றப்படும். காத்தான்குடி, மண்முனை, செட்டிபாளையம், கல்லாறு முதலிய இடங்களில் வோட் சற்றுத் தரித்துநின்று, தோணிகள்மூலம் வரும் பிரயாணிகளையும் ஏற்றிச்செல்லும். காலை ஆறு மணிக்கு மட்டுநகர் ஜெற்றியில் இருந்து புறப்பட்டு 11 மணிக்குக் கிட்டங்கித்துறையை அடையும். பி. ப. 1-00 மணிக்குக் கிட்டங்கித்துறையில் இருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு மட்டக்களப்பையடையும். காலையிலும், மாலையிலும் ஜெற்றி தமிழ்நாட்டுக் காஞ்சித்துறைபோலக் கலகலப்பாகக் காட்சியளிக்கும்.

## 2, அரிசி பெர்மிட் :

இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் மணியத்தார் ''வோட்'' புளியந்தீவு மக்களின் பசிப்பிணியையும் ஓரளவு நீக்கியுள்ளது என்பதையும் அறியலாம். ஆனாலும் யுத்த காலத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டன.



## சுபராஜ் படமாளிகையும், சிலோஆம் தனியார் மருத்துவமனையும்



இடைக்காலம் இம்பீரியல் தியேட்டர்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டப்பட்டது. கலை, சுகாதார, பொது நிகழ்ச்சிகள், உள்நாட்டு வெளிநாட்டு நாடகமேடை எல்லாவற்றிற்கும் ஒரேயொரு மண்டபம் வில்காசிம் மண்டபம்.

## மணியத்தார் ஜெற்றி எனச் சுவீகாரம் பெற்ற சுங்கப்பகுதி ஜெற்றி



ஆண்டாண்டுகாலம் கோடானகோடி மக்கள் அறுசுவை யுடன் உண்ண உப்பைக் குவித்த ஜெற்றி.

காலையும் மாலையும் வியாபாரத் தலம்போல, இரவில் காற்றாடல் சேட்டாடல் இடம்போல, புழுக்க காலங்களில் கடைச் சிப்பந்திகளின் படுக்கை இடம்போன்ற ஜெற்றி.

புனித மரியாள் பாடசாலை ஆசிரியர் ஒருவர், கல்முனை யில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் ஏ.எம்.ஏ. அஸீஸ்துரை அவர்கள் "ஒருவர் ஒருபுசல் அரிசி கொண்டுபோக அனுமதியுண்டு" என அறிவித்தல் போட்டிருப்பதை அறிந்து விடுதி மாணவர்கள் 24 பேரையும் கூட்டிக்கொண்டு 13 சாக்கு களுடன், ஒருநாள் காலை 6 மணிக்கு, தனித்தனி 25 சதம் கொடுத்துப் பயணச்சீட்டுப் பெற்று வோட்டில் ஏறினார். கல்முனைக்குச் சென்று சந்தையில் ஒருபுசல் 10 ரூபாப்படி 25 புசல் அரிசி வாங்கி 13 சாக்குகளில் கட்டி (12×2+1=25) புசல் என்பது 24 கொத்து அல்லது 28 சேர் - 5 ரூபா கூலி கொடுத்து வண்டில் ஒன்று பிடித்து 13 சாக்குகளையும் ஏற்றி, துறையடிக்குக் கொண்டுபோகும் வழியில் விதானை யார் வண்டிலை நிறுத்தி, தனது வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார். அன்று பகிரங்க விடுமுறை நாள் ஆனதால் அடுத்தநாள் நீதிமன்றம் சென்றுதான் இதைத் தீர்க்கலாம் என்றும் சொல்லிவிட்டார்.

ஆசிரியர், மணற்சேனையில் அசீஸ்துரை இருந்த வீட் டைக் கண்டுபிடித்து அவருடன் உரையாடுகின்றார்:

ஆசிரியர் : ஐயா, 25 புசல் அரிசி கொண்டுவந்தேன். விதானையார் அதை மறியலாக்கி அவரது வீட் டில் வைத்திருக்கிறார்.

அர. அதிபர்: இவ்வளவு அதிகம் கொண்டுவந்தால் பிடிப் பார்கள்தானே.

ஆசிரியர் : அதுதான் ஐயா எனக்கு விளங்கவில்லை. உங் களிடம் கேட்டு அறியலாம் என்று வந்தேன்.

அர. அதிபர்: நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே.

ஆசிரியர் : ஒரு ஆள் ஒரு புசல் அரிசி கொண்டுபோகலாம் என நீங்களே அறிவித்தல் போட்டிருக்கிறீர் கள். எனவே 25 பேர் 25 புசல் கொண்டு போவது எப்படிக் குற்றமாகும்?

அர. அதிபர், நீர் எங்கே இருந்து வருகிறீர்? என்ன செய் கிறீர் என்பவற்றை எல்லாம் விளக்கமாகச் சொல்லும்படி கேட்க, ஆசிரியரும் நன்கு விளக்கி, விடுதிச்சாலை மாணவரின் பட்டினி நிலையையும் விளக்கினார். உடனே அசீஸ் துரையவர்கள் விதானையாரிடம் "நீர் துறை யடிக்குப் போய் நான் சொன்னதாகச் சொல்லி, வோட்டைக் கொஞ்சம் தாமதித்து வைத்து விட்டு அரிசிச் சாக்குகளைக் கொண்டு ஏற்றி அனுப்பிவிடும்" எனச் சொன்னது மட்டுமல்ல, ஜெற்றியிலிருந்து சென்மேரிஸ் பாடசாலைக்குக் கொண்டுசெல்ல 25 புசல் அரிசிக்குப் பெர்மிற் (*Permit*) ஒன்றும் எழுதிக்கொடுத்தார்.

இதிலிருந்து உயர்ந்த உத்தியோகத்தின் பண்பாடு, தமிழ் முஸ்லீம்களின் ஒருமைப்பாடு விளங்குகின்றது. புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வெண்பாக்களும் ஞாபகத்துக்கு வருகின்றன.

''இருதயத்தின் ஈரிதழ்போல் இந்துமுசிலீம் யாம்
ஒருவயிற்றுப் பாலகர்போ லுள்ளோம்.''

''புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர் கள்வீசி
நிலத்தறிகா ரஞ்செய்து நின்று – பலத்திலிறை
நல்லகளம் பொலிந்து நாடு புரத்தலால்
நெல்லும் அஸீஸ்துரைக்கு நேர்.''

## 3. ஜெற்றி (Jetty) இறங்குதுறை :

மட்டுநகர் மாநகர பகிரங்க வாசிகசாலைக்கு அருகில், முன்னே உப்புக்குதம் (இப்போ தளரமட்டம்) இருந்த இடத்துக்கு எதிரே வாவிக்கும் தெருவுக்கும் இடையில், இரும்பினாலும், தடித்த பலகைகளினாலும் அமைக்கப்பட்டுள்ளது. பழுவைத் தூக்கக்கூடிய கப்பி பொருத்தப்பட்ட இயந்திரக் கருவி (*Crane*) இன்றும் பழுதடையாமல் இருக்கின்றது. இந்தியாவில் இருந்து கலிக்கற் கொழுக்கி ஓடும், ஆனையிறவு உப்பும் ஏற்றிவரும் உருக்களும், வத்தைகளும் இதில் கட்டப்பட்டு, சாமான்கள் இறக்கப்பட்டதும் வாவியின் வேறு இடங்களில் நங்கூரமிடும். மணியத்தார் வோட் மாத்திரம் இரவில் இதில் கட்டப்படும். காலை 5-45க்கும் 6 மணிக்கும் வோட் ஊதும் சத்தம் கேட்கும் (*Siren*). இச்சத்தம் கேட்டதும் 6 மணியாயிற்று என்று மக்கள் பரபரப்படைவர். மாதா கோயில், ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில் மணியோசை கேட்டு பகல் 12 மணி எனவும், குண்டு விழுந்தால் 4 மணி 15 நிமிடம் எனவும் மக்கள் நேரத்தைக் கணிப்பர். ''நாலேகால் குண்டு'' என்றே அழைப்பர். மணிக்கூடு அருமையாக ஒரு சிலரிடம் மாத்திரம் இருந்த காலம்.

## 4. நாலேகால் குண்டு விழும் விபரம் :

குண்டு போடுவதற்கென்றே ஒருவர் மாதச் சம்பளத்தில் அமர்த்தப்பட்டிருந்தார். அவர் பிற்பகல் 3 மணிக்குக் கச்சேரிக்குச் சென்று அலாரம் (*Alarm*) அடிக்கும் மேசை மணிக்கூடு ஒன்றை வாங்கிக்கொண்டு முற்றவெளிக்கூடாக (இப்போது வெபர் விளையாட்டரங்கு) தபாற்கந்தோர் அதிகாரியிடம் கொடுப்பார். அவர் சரியாக 4-15க்கு அலாரம் அடிக்




## நாலேகால் குண்டுபோட்ட பிரங்கி



''நாலேகாலாப் போச்சி'' என்ற பேச்சை எழுவான்கரை படுவான்கரைகளில் பழக்கிய பிரங்கி.
உத்தியோகத்தரின் உள்ளம் கவர்ந்த பிரங்கி.
இன்று தேடுவாரற்றுக்கிடக்கும் பிரங்கி.

## மட்டுநகர்க் கோட்டை

*1682ல் ஒல்லாந்தர் கட்டியது (இன்றைய கச்சேரி)*



கிழக்கு மாகாணத்தின் தலைநகர் மட்டக்களப்பு எனக் கட்டியம் கூறுவது.

வங்காளவிரிகுடாக் கடலை இதில் இருந்து காவலர் பார்க்கக்கூடியதாக சுவரின்மேல் வடமூலையில் கூண்டு ஒன்றும் உள்ளது.

கக்கூடியதாக ஒழுங்கு செய்துகொடுப்பார். திரும்பிக் கச்சேரிக்குச் சென்று சாமான் பொறுப்பதிகாரியிடம் (*Store Keeper*) வெடிமருந்து, பழைய கடதாசி, மண்ணெண்ணெய், நெருப்புப்பெட்டி, இரும்பு அச்சுலக்கை, தட்டுக்கட்டை முதலியவற்றை வாங்கிக்கொண்டு, கச்சேரியின் மேற்குப்புற மதில் உச்சிக்கு ஏறுவார். இச்சுவர் 8 அடிவரை அகலமானது. அங்குள்ள பெரிய மரம் ஒன்றின்கீழ் இவைகளை வைத்துவிட்டு, கொஞ்சம் தள்ளி இரண்டு மூன்று விறகுகளை வைத்து நெருப்பை மூட்டுவார். மரத்தின்கீழ் வெளிப்புறமாக அகழியை நோக்கியிருக்கும் பீரங்கியில் வெடிமருந்து, தக்கை (பழைய கடதாசி) மாறிமாறிப் போட்டு அச்சுலக்கையால் இடித்து முடிந்ததும், பீரங்கியின் எரிவாயிலிலும் கொஞ்சம் வெடிமருந்தை வைத்துவிட்டு, நெருப்பு எரித்த இடத்துக்குச் சென்று அலம்பல் ஒன்றை (நீண்ட மெல்லிய கம்பு) எடுத்து மண்ணெண்ணெயில் தோய்த்து எரியும் விறகுகளுடன் வைத்துவிட்டு, அலம்பலையும், அலாரத்தையும் பார்த்துக்கொண்டேயிருப்பார். அலாரம் அடிக்கத்தொடங்க அலம்பலை எடுத்து மரத்தில் மறைந்து நின்று திரிவாயில் உள்ள வெடிமருந்தில் வைப்பார். பீரங்கியில் இருந்து வெடிச்சத்தம் உண்டாகும். கச்சேரி, மற்றும் கந்தோர்களில் வேலை செய்யும் சிற்றூழியர்கள் (*Peon*-பியன்மார்) யன்னல்களைப் பூட்டத்தொடங்குவர். பீரங்கிக்குள் இருந்து தக்கை வெளிப்பட்டு வெண்ணிறப் புறாக்கள்போல பறந்து அகழியுள் விழும். அகழியில் நின்ற கொக்குகள் பயந்து மேலே எழுந்து பறக்கும். மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்கள் விளையாட்டை விட்டு இக்காட்சியைக் கண்டுகளிப்பர்.

ஒருநாள் நேரத்துக்குக் குண்டு விழவில்லை. அரசாங்க அதிபர் இதனோடு சம்பந்தப்பட்ட அத்தனைபேரையும் அழைத்து விசாரணையே வைத்துவிட்டார். நாலேகால் குண்டு மட்டக்களப்பை ஆட்டிப்படைத்த காலம். இப்பீரங்கி வெடியைப் பின்பற்றிச் சில கத்தோலிக்க தேவாலயங்களிலும் பீரங்கிகள் செய்து திருவிழாக் காலங்களில் சத்தவெடிகள் வைக்கத்தொடங்கினர். பிரதானமாகப் புளியந்தீவு மாதா கோவில். மற்ற ஆலயங்களுக்கும் இரவல் கொடுத்தனர். இப்போது கேட்பது ஆட்களைச் சுடும் துவக்கு வெடிச்சத்தம். ஆகாயத்தில் இருந்து போடும் குண்டு வெடிக்கும் சத்தம், நிலத்தில் இருந்து கேட்கும் கண்ணிவெடிச் சத்தம் முதலிய ஆட்கொல்லிச் சத்தங்களே.

# III. சனமும், சாகியமும்

## 1. இந்து – முஸ்லீம் :


ஆரம்பத்தில் தமிழர், சோனகர் எனச் சாதி இரண்டே இரண்டு. (தமிழரில் பள் பறை பதினெட்டு என்றும் சொல்லிக்கொண்டனர்.) முஸ்லீம்களில் சாதியும் ஒன்றே சமயமும் ஒன்றே. வயல் தொழில், ஆற்றுத் தொழில் இரண்டிலும் இருசாராரும் சகோதர பான்மையாகவே ஈடுபாடு கொண்டனர். வியாபாரம் முஸ்லீம்களுக்கு மாத்திரம் கைவந்த கலை. பலர் கூடி நெருக்கமாக இடத்துக்கிடம் வாழ்ந்தனர். நாளடைவில் மசூதிகள், மதுரசாக்களை ஆக்கினர். ஒலிபெருக்கி பாவனைக்கு வந்தபின் காலை, மதியம், மாலைகளில் வாங்கு சொல்லுதல், கொத்துவா ஓதுதல் முதலிய சத்தங்களைக் கேட்கமுடிந்தது.

மட்டக்களப்புப் பகுதியில் தமிழர் பரவலாக வாழ்ந்தனர். கோயில்களும் அதிகம். கிராமப்புறங்களிலும் ஆண்டுக்கொருமுறை உற்சவம் நடக்கும் சிறிய கோயில்களும் உள்ளன. உற்சவகாலங்களில் வெடி, பறை, உடுக்கு, சிந்து முதலிய ஒலிகளைக் கேட்கலாம். ஆனால் முஸ்லீம்கள்மத்தியில் ரபான் ஒலியும், குரவைக் குரலும்தான். இருசாராரும் சிற்றுண்டிகள் பரிமாறிக்கொள்வர். தமிழர் வீட்டுக்கு முஸ்லீம்கள் விருந்துண்ணப் போகமாட்டார்கள். (தக்குப்பீர் பண்ணாத காரணத்தால்) . சமயமாற்றம் அருமையிலும் அருமை. எனினும் காதல் மணங்கள் ஏற்பட்டால் மாத்திரம் ஆயிரத்தில் ஒருவன் ஒருத்தி என சமயமாற்றம் ஏற்பட்டதுமுண்டு. இவர்களின் சந்ததியில் இன்றும் ஒருசிலர் இருக்கின்றனர். தமிழர் எல்லோருமே கிட்டத்தட்ட இந்துக்கள். சிலர் மது அருந்தும் பழக்கம் உடையவர். முஸ்லீம்கள் மது அருந்துதல் இல்லை. ஆனால் ஒருசிலர் அபின், கஞ்சா முதலிய போதைவஸ்துக்களை உபயோகிப்பர் (வயது வந்தவர்கள் மாத்திரம்). தமிழரில் ஆண்கள் வேட்டியும், முஸ்லீம்கள் சாறனும உடுப்பர். உள்ளுடுப்பு, வெளியுடுப்பு இருசாராரும் அணிவர். எல்லாப் பெண்களும் சேலையே உடுப்பர். தாம்பூலம் தரித்துச் சொண்டுகளைச் சிவப்பாக்கிக்கொள்வர். தமிழ்ப்பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்க, முஸ்லீம் பெண்கள் கைகளில் மருதோன்றி பூசுவர்.



## புளியந்தீவுப் பள்ளிவாசல்

20ம் நூற்றாண்டு முற்பகுதியில் ஆரம்பம்.
23-05-1964ல் புனருத்தாரணம்.



வெளியூர் முஸ்லிம் அதிதிகளின் தங்குமிட வசதியும்,
கிறிஸ்தவருக்கு ஞாயிறு, யூதருக்குச் சனிபோல,
முஸ்லிம்களுக்கு வெள்ளி.

நோன்புக்கஞ்சி விநியோகத்துக்காகப் பல கிடாரங்கள் உள.
இவை மற்றைய கோயில்களுக்கும்,
பகிரங்க விழாக்களுக்கும் பயன்படும்.

## மட் / முதியோர் இல்லம்

மண்ணுக்கும், விண்ணுக்கும் ஏணி?



காலஞ்சென்ற வந். இக்னேஷஸ் கிளென்னி சே. ச.
அவர்களால் நிறுவப்பட்டு,
14-12-54ல்
ஏழைகளின் சிறிய சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுவரை விண்ணகம் ஏறியோர் 600க்கும் மேல்.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் கடைப்பிடிப்பர். ஆண்களைக் கண்டால் முக்காட்டை இழுத்துவிட்டுக்கொள்வர்.

### 2. சிங்களவர் :

அக்காலம் சிங்களவரைப் பார்ப்பதென்றால் மிகவும் அரிது. தலையிற் சீப்பு, இடையிற் கம்பாயம், வெள்ளிச்சங்கிலி. ஆசையான தமிழ் ஓசை. சில்லறைக்கடை, ஜவுளிக்கடை, மருந்துக்கடைகளை வைத்துக்கொண்டு, திருவாளர்கள் சர்னலிஸ் டீ சில்வா, அரசநிலை, ஆத்தர் டீ சில்வா, மத்தாயேஸ் டீ சில்வா, விக்கிரமசிங்க என்னும் ஐந்து பேர் மாத்திரம் மருந்துபோல இருந்தனர். இவர்கள் தமிழருக்கும், முஸ்லீம் களுக்கும் பலவழிகளிலும் உதவினர். திரு. அரசநிலை, மட்டு. திருமலை வீதியில் தற்போதைய வஸ் டிப்போவுக்கு எதிரில் காளையடிவளவில் குடியிருந்தார். புல்லுமலை, மகாஓயாப் பக்கமிருந்து சாமான்கள் ஏற்றிவரும் இரட்டைமாட்டு வண்டிகள் இங்கேயே அவிழ்த்துவிடப்படும். காளையடி வளவு எனப்பட்டது, இப்போது அது வயோதிபர் மடம் இருக்கும் இடம். திரு. சர்னலிஸ் டீ சில்வா முகத்துவாரத் தெருவில் வெயிலி வீதி சந்திக்குமிடத்தில் மாடி வீடுகட்டிக் குடியிருந்தார். இவர்கள் இருவரும் தமிழ்ப் பெண்களை விவாகம் முடித்துத் தமிழ்ப் பண்பாட்டுடன் வாழ்ந்தனர். இவர்களின் சந்ததியார் பலர் இன்றும் இங்கு வாழ்கின்றனர்.

காலஞ்சென்ற *S. W. R. D.* பண்டாரநாயக்கா அவர்கள் காலத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது தமிழர் படுகொலை செய்யப்பட்டதை அறிந்த இச்சிங்ளவர் கூறிய ஆறுதல் வார்த்தைகள் இன்றும் பலர் மனத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்துகிடக்கின்றன.

### 3. இன ஒற்றுமை :

''போன நூற்றாண்டில் வெள்ளக்காரன் ஆட்சியில, அப்ப சிங்களம் சோனி சண்டை. சிங்களப் பெரிய ஆக்களப் புடிச்சி மறியல்ல போட்டான் வெள்ளக்கார அரசாங்கம். சிங்களவனுக்கு உதவிசெய்ய ஒருவரும் இல்ல. அப்ப சேர். பொன்னம்பலம் ராமநாதன் தொரகப்பல் ஏறி, கடல்ல இங்கிலன்ட் போய், ஜோர்ஜ் ராசா 5ம் ஜோஜ் அவரோட கதச்சி–அதுக்குப்புறகு இஞ்ச ஆக்கள விட்டிட்டாங்க. பிறகு ராமநாத தொர கப்பலால கொழும்பு வந்தார். குதிரக்கரத்தயில வெள்ளக்குதிரபூட்டி, வெள்ளக் கயிறுகட்டி, மறியல்ல இருந்து வந்த ஆக்கள், பெரிய பெரிய ஆக்கள் எல்லாம் கயிறு புடிச்சி

இழுத்து, ராமநாதன் தொரயக் கரத்தயில இருப்பாட்டி ஒவ்வொரு றோட்டுக்கும் கொண்டுபோய், இவருதான் சிங்கள வண்ட மரியாத காப்பாத்தித்தந்த தமிழ் தொர, ராமநாத தொர என்டு கும்பிட்டவனுகள் — இண்டைக்குத் தமிழன வெட்றானுகள் நண்டி இல்லாத நாய்மாதிரி. நம்மளுக்குச் சரியான, மிச்சம் துக்கம். கடவுள் ஒருநாள் காட்டுவான்'' — இப்படியெல்லாம் அந்தச் சிங்களவர்கள் அப்போது தமிழருக்கு ஆறுதல் கூறினர்.

## 4. லோக்கல் போட் :

அப்போது மட்டக்களப்புப் பெண்களின் வாயில் அடிக்கடி வரும் சொல் ''லோக்கல் போட்,, என்ற சொல். இதற்கான காரணங்கள் பல. இப்போ மாநகரசபையாய் இருப்பது அப்போது கிராமசபை. இதைத்தான் லோக்கல் போட் என்றது. அதில் 20 பேர்வரை தெருச்கூட்டும் வேலையில் இருந்தனர். முகத்துவார வீதியில் சீலாமுனைச் சந்தி, புளியந்தீவு, பெரிய ஆஸ்பத்திரிக்கு அப்பால் சாத்திரியார் வயல் சந்தி முதலான பிரதான 10 சந்திகள்வரை தெருவில் மண்ணெண்ணெய் விளக்கு வைப்பர். இதற்குக் கூலியாட்கள் இருவர். காலையில் 5 அடி நீளமான ஏணியும், மண்ணெண்ணெய்த் தகரமும் கொண்டுசென்று ஒவ்வொரு விளக்காகக் கண்ணாடி துடைத்து, திரி சரிபார்த்து, எண்ணெய் ஊற்றி ஆயத்தம் செய்வர். பிற்பகல் 4 மணியானதும் லோக்கல் போட்டில் நின்று புறப்பட்டுச் சீலாமுனைச் சந்திக்குச் சென்று, ஒவ்வொரு விளக்காக வெளிச்சமேற்றி வருவார். இவ்வெளிச்சங்கள் நடுச்சாமம் ஒரு மணிவரை எரிந்து எண்ணெயும் முடிய அணைந்துவிடும். வாவிக்கரையில் அத்தாங்கு, கரப்புமூலம் மட்றால் பிடிப்போர் – லோக்கல் போட் லாம்பும் நூர்ந்து விட்டது என நேரத்தைக் கணிப்பர்.

லோக்கல் போட் வேலை எண்டாலும் மாதம் முடியப் பசை முறியாத தாளாகச் சம்பளம் என்று பெண்கள் பேசிக் கொள்வர். லோக்கல் போட் வேலை என்பது இழிவான வேலை என்ற எண்ணம் அப்போது இருந்தது.

## 5. தெருவில் ஓடிய சாராயம் :

மட்டுநகர் சென்றல் றோட்டில் இப்போதைய M.C.M. கடைக்கு எதிரில் சாராயக்குதம் இருந்தது (இப்போது இது கல்லடியில்). அங்கு ஆயிரம் கலனுக்குமேல் கொள்ளக்கூடிய பெரிய பீப்பா ஒன்று இருந்தது. கொழும்பில் இருந்து கனிச்



சைகளில் சாராயம் கொண்டுவந்து இதனுள் ஊற்றுவர். (கனிச்சை என்பது 15-20 கலன்வரை கொள்ளக்கூடிய சாடிகள்.) 1929ல் மட்டுநகர் புகையிரத சேவை ஆரம்பிக்குமுன் கப்பல்மூலம் கற்குடாத் துறையில் அல்லது முகத்துவாரத்தில் இவை இறக்கப்பட்டு வண்டில்கள்மூலம் குதத்துக்கு வரும். (இரும்பு ஏணிமூலம் ஏறிப் பீப்பாவுக்குள் ஊற்றுவர்.) தேவைப்படும்போது நீர் கலந்து, வெள்ளைப்போத்தல்களில் அடைத்து சிகப்புக் கஞ்சந்தாள் ஒட்டி விற்பனைக்காகத் தவறணைகளுக்கு அனுப்புவர். ''ஒரு ரூபா நாற்பது சதத்துக்கு (1-40) ஒரு சிகப்புத் தலப்பா'' என்று சொல்வர். நீர் கலக்குமுன் சாராயம் வீறுகொண்டதாக இருக்கும்.

ஒருநாள், பீப்பாவின் ஒரு பலகையை உடைத்துக் கொண்டு வெளியேறிய சாராயம் அறையின் கதவு, யன்னல் பலகைகளையும் உடைத்துக்கொண்டு வெளியே வந்து தெருக் 'கான்' (வாய்க்கால்) வழியே மிராண்டா (இப்போ லூட்லன்ட்) கடையைக் கடந்து கடைத்தெருக் கான் வழியே ஓடி மட்டுநகர் வாவியில் கலந்தது. கான் ஆழமாக இருந்தபடியால் மேற்பரப்பில் ஓடிய சாராயம் துப்புரவாக இருந்தது. போனவர் வந்தவர் எல்லாரும் (மதுப்பிரியர்கள்) அகப்பட்ட பாத்திரத்தால் அள்ளிக் குடித்தனர். சந்தைக்குச் சாமான் வாங்கச் சென்ற பெண்கள் சிலரும் இந்த நாடகத்தில் பங்கெடுத்தனர். கொஞ்சநேரத்தில் அவர்களுக்கு நித்திரை செய்வதற்குக் கட்டிலும் மெத்தையும் பாயும் தேவைப்படவில்லை, தலையணையும் தேவைப்படவில்லை. நடுத்தெருவிலும், சந்தைக்குள்ளும் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கத்தொடங்கி விட்டனர். இதை அறிந்த லோக்கல் போட் செயர்மன் (தலைவர்) தெருக்களில் குப்பை அள்ளும் வண்டிகளை ஒரு மணி நேரத்தின்பின் அனுப்பிக் கொஞ்சக்கொஞ்சப் பேராக ஏற்றி அவரவர் வீட்டுக்கு அனுப்பினார் முதலில் ஏற்றி அனுப்பப்பட்டோர் பெண்கள். அன்றுதொடங்கி அப்பெண்களுக்கு 'லோக்கல்போட்காரிகள்' என்ற பட்டமும் ஏற்படலாயிற்று. இப்பெண்களுக்குள் சண்டை தொடங்கினால் இச் சொல்லைக் கேட்டே காது புளித்துப்போய்விடும்.

## 6. தேர்தல்கள் :

அரசாங்கசபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், பட்டினசபை, நகரசபை, மாநகரசபை, எத்தேர்தல் வந்தாலும் மக்கள் அக்கறைகொள்வது குறைவு. ஒருசில இனத்தவர்களைத் தவிர. ஏனையோர் ''இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன கூட இருந்த குரங்கு ஆண்டா

லென்ன'' என்ற கொள்கையுடையவர்களாயிருந்தனர். சிலர் எல்லாப்பக்கமும் சென்று குடித்துக்கொண்டு திரிவர். பெண்கள்கூட சேலை, காசு என்று எதிர்பார்த்தார்கள். படித்த ஒருசிலர் மாத்திரம் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரசாங்கசபையில் பேசியது சரி எனக் கதைத்துக்கொண்டனர். அவர்கள் பேசியது:—

''கல்வித் தராதரம் உள்ளவர்களுக்கு மாத்திரம் வாக்குரிமை கொடுக்கலாம் என்றும், சட்டத்தை மாற்றி 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்க உரித்து உண்டு என்னும் விவாதம் நடக்கின்றது. ''பன்றிகளின் முன் முத்தைப் போடாதீர்கள். முத்தின் பெறுமதி அவைகளுக்குத் தெரியாது, காலால் மிதித்துவிடும்.'' இது விவிலிய நூலிற் கூறப்பட்ட உண்மை." இது சேர். இராமநாதன் கூறியது.

சர்வசன வாக்குரிமை நடைமுறைக்கு வந்தபின் இனம் இனத்தோடு சேரும் என்னும் உண்மையை ஜனாப் *A*. சின்ன லெவ்வை, திரு. *R. B.* கதிராமர் இருவரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

## 7. பாராளுமன்ற உறுப்பினர்கள் :

சில பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை, அவர்களது சிறந்த செயல்களைக்கொண்டு பெண்கள்கூட ஞாபகத்தில் வைத்திருந்தனர். எடுத்துக்கட்டாகச் சில பெயர்கள்:

(அ) திரு. E. R. தம்பிமுத்து — கல்லடிப்பாலம் கட்டியது. இன்னுமொன்று இவர் முதல் முதல் அரசாங்கசபைக் கூட்டத்துக்குச் சென்றபோது பெரும்பான்மை அங்கத்தவர் சிலர் சேர்ந்து ''கிழக்கில் இருந்து புது விளக்குமாறு ஒன்று வந்திருக்கிறது'' என்று நையாண்டி பண்ணியபோது இவரது பதில் ''ஆமாம், உங்கள் மூளைகளிற் படிந்திருக்கும் தூசியைத் தட்டுவதற்காக வந்த விளக்குமாறுதான்'' எனக் கூறியது.

(ஆ) திரு. S. M. இராசமாணிக்கம் — கல்லாற்றுத் தாம் போதிகள் கட்டியது. தமிழர் உரிமைக்காகப் போராடியது. தமிழரசுக்கட்சித் தலைவராயிருந்தது.

(இ) கலாநிதி பதியுதீன் முகம்மது — முஸ்லீம் மாணவிகள் 8ம் வகுப்பிற் சித்தியடைந்ததும் ஆசிரிய கலாசாலையில் சேர வழி செய்தவர். (இது முஸ்லீம்களுக்கு மாத்திரம் கிடைத்த நன்மை)



(ஈ) திரு. V. நல்லையா — கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தள வைத்தியசாலை, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, காகித ஆலை முதலியவற்றைப் பெற்றுத்தந்தவர்.

(உ) திரு. ராஜன் செல்வநாயகம் — சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து வலையிறவுப் பாலம் அமைத்தவர். மட்டுநகர் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்தக்கேணிக்குக் கட்டுக் கட்டினார்.

(ஊ) திரு. கே. டபிளியூ. தேவநாயகம் — பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் மாக்கான் மரைக்கார் தலைமையில் காத்தான்குடியில் இருந்து மட்டுநகரில் உள்ள சத்தியாக்கிரகத்திடலுக்கு வந்த ஊர்வலம் பொலிசாரால் தடை செய்யப்பட்டபோது, உடனடியாக அங்கு சென்று தடையை நீக்கி. ஊர்வலத்தில் தானும் சேர்ந்து சத்தியாக்கிரத்திடலுக்கு வந்தார். கிழக்குப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்குப் பாடுபட்டார்.

(எ) திரு. செ. இராசதுரை — தமிழர் உரிமைப் போராட்ட சத்தியாக்கிரகத்தின் இறுதிக்கட்டத்தில் சமூகமளிக்கத் தவறினாலும், பின்பு பிரதேச அபிவிருத்தி அமைச்சராகி, விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரியைத் தோற்றுவித்தார். நகர நுழைவாயிலில் நீரர மகளிர் சிற்பத்துடன் அலங்கார வளைவு அமைத்தார்.

## 8. பின்தங்கிய பகுதிகள் :

எத்தனையோபேர் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பல வருடங்களாக ($\frac{1}{2}$ நூற்றாண்டுக்கு மேலாக) பதவி வகித்தபோதும், மட்டுநகரின் கன்னங்குடா, ஈச்சந்தீவு, ஆயித்தியமலை, மகிழவெட்டுவான் போன்ற எத்தனையோ குக் கிராமங்கள் இன்றும் அப்படியே இருப்பது வேதனைதரும் நினைவூட்டலாகும்.

# IV. கிறிஸ்தவ சமயம்

## 1. கிறிஸ்தவர் வருகை :

கிறிஸ்தவ சமயம் பிறநாட்டாரின் சமயம், அந்நியச் சமயம் என்றெல்லாம் குறை கூறுபவர்கள் சிலர். இவர்கள் இலங்கையில் தோன்றிய சமயத்தையே தெரியாதவர்கள் எனலாம். கிறிஸ்தவ சமயம் கப்பலில் வந்து இறங்கியதா என்று கேட்டால் வினாவுக்கு ஆம் என்பதே விடை. ஆனால் அது தனியாக, தானாக பிரயாணச் சீட்டு எடுத்து வரவில்லை. நல்ல புனிதர்களுடைய உடலோடும், இரத்தத்தோடும் சேர்ந்து இங்கே வந்தது. கி. பி. 16ம் நூற்றாண்டு தொடங்கி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூன்று சாதியினரும் குடியேற்றம், வியாபாரம், சமயம் என்னும் மூன்று நோக்கங்களுடன் இங்குவந்து இறங்கினர்.

**(அ) குடியேற்றம் :**

போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூவினச் சந்ததியும் இங்கு உண்டு.

ஒல்லாந்தரின் கோட்டைகள், சட்டம் (*Dutch Law*). 1948 மாசி 4 வரை ஆங்கிலேயர் ஆட்சி.

**(ஆ) வியாபாரம் :**

போர்த்துக்கேயரைப் பறங்கியர் என்றும் சொல்வர். இந்தியாவிலுள்ள கலிக்கற் என்ற இடத்தில் நல்ல சாதி வாழைமரங்கள் இருந்தன. கலிக்கற் என்ற சொல் கோழிக்கூடு என மருவிற்று. அங்கிருந்து பறங்கியர் கப்பலில் வாழைப்பழம், வாழைமரம் முதலியன கொண்டுவந்தனர். எனவே இப்பழம் கப்பலில் வந்ததால் கப்பல் பழம் எனவும், பறங்கியர் கொண்டுவந்ததால் பறங்கிப் பழம் எனவும், கோழிக்கூடு என்னுமிடத்தில் உற்பத்தியானதால் கோழிக்கூட்டுப் பழம் எனவும் பெயர்பெற்றது. மூன்றும் ஒரு பழத்தையே குறிக்கும். இது போர்த்துக்கேயரின் வியாபாரம்.

1931ல் இலங்கைக்கு டொனாமூர்த் திட்டம் நடைமுறைக்கு வரமுன், இங்கிலாந்தில் *"What is Ceylon"* இலங்கை என்றால் என்ன? எனக் கேட்டால் *"It's a*



*Tea Estate of Lipton's"* அது லிப்றரனின் தேயிலைத் தோட்டம் என விடை சொன்ன காலம். இன்றும் லிப்ரன் தேயிலை விற்பனையில் உண்டு. இது ஆங்கிலேயரின் வியாபாரம்.

**(இ) சமயம் :**

மூவினத்தாரினதும் மூவகை ஆலயங்களும் இன்றும் இங்கு நடைமுறையில் செயல்படுகின்றன.

குறிப்பு: **இந்த மூன்று சாதியாரும் இலங்கைக்கு வராமல் இருந்திருந்தால் நிச்சயமாக இலங்கை இவ்வித உன்னத நிலையை அடைந்திருக்கவே முடியாது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.**

றோமன் கத்தோலிக்க சமயம் போர்த்துக்கேயரது சமயம். இவர்கள் இங்குவந்து யாழ்ப்பாணக் குடாநாடு, மன்னார், நீர்கொழும்பு முதலிய பகுதிகளில் இச்சமயத்தை விதைத்தனர். இவ்விதைப்பு இன்று ஒன்றுக்கு அறுபது, எண்பது எனப் பலன் கொடுக்கின்றது. அக்காலத்தில் இம்மறை மாவட்டத்தில் (திருமலை மாவட்டத்தில்) அங்கொன்றும் இங்கொன்றுமாக வழியிலும், பாறையிலும் முட்செடிகளுள்ளும் விழுந்தவை பலனளிக்கவில்லை. நல்ல நிலத்தில் விழுந்த சில விதைகள் கடுகு விதைபோல் வளர்ந்தன. எனினும் நிலம் மலட்டுத் தரையாக மாறியதால் அடிமாந்திப்போயின.

யுபிலி ஆண்டில் – 1893ன் பின் – படிப்படியாக நிலத்தைப் பண்படுத்தி, நீரூற்றி, இரசாயனப் பசளைகளிட்டு வருவதால் ஒன்றுக்கு நாற்பது ஐம்பதாகப் பலனளிக்கத் தொடங்கின. எதிர்காலம் கூடிய பலனை எதிர்பார்க்கலாம்.

## 2. யேசுபிரான் :

போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தையும், ஒல்லாந்தர் மெதடிஸ்த சமயத்தையும், ஆங்கிலேயர் அங்கிளிக்கன் சமயத்தையும் இலங்கைக்குக் கொணர்ந்தனர். ஆனால் மூவருமே கிறிஸ்துநாதரே இறைவன் என ஏற்றுக்கொள்பவர்கள்.

உலகில் உள்ள எல்லாச் சமயங்களுக்கும் பிறப்பிடம் ஆசியாக்கண்டமே. இதன்மேல்பால் அமைந்துள்ள கலிலேயா நாட்டில் பெத்லகேம் ஊரில் இற்றைக்கு 1994 ஆண்டுகளுக்கு முன் மார்கழி மாதம் 24ந் திகதி நல்ல நடுச்சாமத்திலே மாட்டுக்கொட்டிலிலே யேசுநாதர் பிறந்தார்.

33ம் ஆண்டு ஜெருசலேம் கொல்கொத்தா என்னும் கல்வாரிமலையில் பெரிய வெள்ளியன்று பிற்பகல் 3 மணிக்கு ''வந்தகாரியம் எல்லாம் நிறைவேறிற்று, தந்தாய் உமது கரங்களில் என் ஆன்மாவை ஒப்படைக்கிறேன்'' என்று சுய அறிவோடு சொல்லி உயிர்விட்டார் யேசுநாதர்.

இவை இரண்டையும் பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் நிரூபிக்கின்றன. எனவே இவரது தோற்றம் கற்பனையானதல்ல. மேலும், இறந்த மூன்றாம்நாள் உயிர்த்தார் என்பதை ''பரிவட்டத்துணி'' நிரூபிக்கின்றது.

உயிர்த்த 40ம் நாள் பெத்தானியா என்னுமிடத்தில் ஒலிவந்தோப்பு என்னும் மலையில் நின்று விண்ணகம் சென்றார் என்பதை, கூட நின்று கண்ணாற்கண்ட 500 பேருக்கு மேல் சாட்சி பகருகின்றார்கள்.

''பரிவட்டத் துணி'' (The Most Precious Relic, Holy Shroud). இது 13½ அடி நீளமும், 3½ அடி அகலமும் கொண்ட செங்கல் மங்கல் நிறமான லினன் துணி. 1578ம் ஆண்டு தொடங்கி ஐரோப்பாக் கண்டத்தின் இத்தாலி நாட்டில் ரியூறின் நகரில் புனித ஸ்நாபக அருளப்பர் பேராலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. முழு மனிதனை முன்னும் பின்னுமாக மூடிக் கட்டியிருந்ததால் முன்பக்க பின்பக்க உருவங்கள் *'Negative Pictures'* பதிந்துள்ளன. இதைப் புகைப்படக் கருவியில் பதித்தால் சுய உருவம் உண்டாகும்.

1898ம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி புகைப்பட நிபுணரும், சட்டவல்லுநருமான 43 வயதான செக்கண்டோபியா என்பவர் இத்தாலிநாட்டு அரசனிடம் உத்தரவு பெற்று முதன்முறையாக இச்சீலையைப் படம்பிடித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தொடர்ந்து பல தடவைகளில் 200 பேருக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், நாஸ்திகர், உயிரியல், அங்கவியல் படப்பிடிப்பு நிபுணர்கள் குழுக்குழுவாக ஆராய்ந்தனர். ஆராய்ச்சியின் பலனாக ஏகமுடிவாக வெளியிட்டவைகளில் ஒருசில குறிப்புகள் :

1. ஒரு மனித உடல் இறந்தவுடன் 24க்கும் 48க்கும் இடையான மணித்தியாலங்கள் இச்சீலையுடன் இணைந்திருக்கின்றது.
2. இச்சீலையைக் கசங்காது, பழுதடையாது ஒருவர் மடித்து வைத்திருக்கவேண்டும்.



3. உடலில் ஏற்பட்ட அடிகாயங்களின் எண்ணிக்கை ஜூலியோ றிச்சி என்பவரின் ஆராய்ச்சிப்படி அடிகாயங்கள் 220வரை. (உரோமரின் சட்டப்படி கூடுதலான அடிகள் 16) தலையில் உள்ள முள் அழுத்திய அடையாளங்கள், வலக்கன்னம் உப்பியிருத்தல்.
4. தோளில் ஏற்பட்ட காயம்.
5. இந்த மனிதனின் உயரம் 6 அடி 2 அங்.

இப்படிப் பலப்பல.

இதற்குரிய விளக்கங்கள் [யாவும் *'Holy Shroud'* என்னும் நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மரித்த யேசுவைக் கல்லறையில் அடக்கம்செய்த நேரம் வெள்ளிக்கிழமை பிற்பகல் சுமார் 6 மணி. கல்லறையில் இருந்து உயிர்த்து வெளியேறிய நேரம் 3ம் நாள் ஞாயிறு அதிகாலை 5 மணி இருக்கலாம் (35 மணித்தியாலம்வரை).

## 3. கிறிஸ்தவ சமயம் இலங்கையருக்கு அந்நிய சமயமல்ல :

இதற்குக் காரணங்கள் பல உள. விரிவஞ்சி சில உதாரணங்கள் மாத்திரம் தருவோம்:

(அ) மேல்நாடு, கீழ்நாடு என்ற பேதமின்றி அகில உலகில் ஒவ்வொரு தேவாலயத்திலும் யேசுவின் இரத்தம் தோய்ந்த புனித சிலுவையின் பகுதி, பரிசுத்த சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு இணைப்புப் பெறுகிறது.

(ஆ) யேசுவும், புனிதர்களும் காலத்துக்குக் காலம் உலகிற்குக் காட்சிகொடுத்து மக்களை நல்வழிப்படுத்துகின்றனர். (உ+ம்) போர்த்துக்கல்தேச பாத்திமா பதியில் தேவதாயார் லூசியா என்னும் சிறுமிக்கு 1917 வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி ஆறு மாதங்களும் ஒவ்வொரு 13ந் திகதியிலும் காட்சி கொடுத்து றஷியாவின் நாத்திகத்தைப்பற்றிக் கூறியவை இப்போ நிறைவேறுகிறது.

(இ) கி. பி. 1231ல் போர்த்துக்கல் தேசத்தில் இறைபதமடைந்த புனித அந்தோனியாரின் அழியாத நாவின் ஒரு பகுதி, கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் எமக்காக வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

(ஈ) கீழைத்தேசம், மேலைத்தேசம், ஏழை, செல்வர் என்னும் பேதம் பாராது ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் அப்பம் பகிர்ந்து எல்லாரையும் ஒன்றாக்கிக் கொண்டிருக்கிறார் புனித அந்தோனியார்.

## 4. முத். யோசேவாஸ் அவர்களின் பணி :

21-4-1651ல் இந்தியாவில் பிறந்து, 1686ல் இலங்கைப் பயணத்தை மேற்கொண்டு 87 சித்திரையில் யாழ்ப்பாணத்தையடைந்தார் ஆசாரத்துக்குரிய யோசேவ்வாஸ் முனிவர் போர்த்துக்கேசரின் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்காக.

ஒல்லாந்தர் 1638ல் மட்டக்களப்பையும், 1639ல் திருமலையையும், 1658 மாசியில் மன்னாரையும், சித்திரையில் ஊர்காவற்துறை, யாழ்ப்பாண இடங்களையும் கைப்பற்றினர். இவர்கள் கல்வின் மதத்தைப் பின்பற்றுபவர்கள். எனவே கத்தோலிக்கரையும் குருமாரையும் கொலைசெய்தனர். பாடசாலைகளைத் தரைமட்டமாக்கினர். முதலிப்பட்டம், அதிகார்ப்பட்டம் பெறுவதற்காகப் பலர் ஒல்லாந்தரின் கூலிப்படையாகிக் காட்டிக்கொடுத்தனர். இதனால் மாறுவேடத்துடன் கால்நடையில், செருப்புமின்றி நேரத்துக்கு உணவுமின்றி 24 ஆண்டுகளாகப் புத்தளம், வன்னி, மாதோட்டம், கண்டி ஆகிய இடங்களில் யேசுவுக்காகப் பணிபுரிந்தார். கண்டியிற் சிறைவாசம் அனுபவித்தார். 1710ல் மட்டக்களப்பு தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா கோவில் வளவில் சிறு ஓலைக் கோயில் கட்டிப் பலி ஒப்புக்கொடுக்கும்போது காட்டிக்கொடுக்கப்பட்டு வம்மிமரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். 1711ல் இலங்கையிலேயே இறைவனையடைந்தார்.

மூன்றரை நூற்றாண்டுகால ஆராய்ச்சியின்பின் 1995 தை 20ந் திகதியில் புனித பேதுருவானவரின் வழிவந்த 264வது பாப்பரசராகிய 2ம் அருள் சின்னப்பர் கொழும்புக்கு வருகை தந்து காலிமுகத்திடலில் திருச்சடங்கின்போது எமக்கென ஒரு சுத்த ஆத்மாவைத் தரவிருக்கிறார். அவரே முத்திப் பேறுபெற்ற யோசேவாஸ் முனீந்திரர் ஆவார்.

எனவே கிறிஸ்தவ சமயம் நமக்கு அந்நியமல்ல. அதைக் கடைப்பிடிக்கவும் பாதுகாக்கவும் கடமையும் உரிமையுமுடையோம் நாம்.

முனீந்திரர் கட்டுண்ட வம்மிமரம் 1913ம் ஆண்டு ஏற்பட்ட யானை மிதந்த வெள்ளத்தால் அள்ளுண்டுபோயிற்று. இம்மரம் இருந்த இடம், தாண்டவன்வெளி திருமலை வீதியில் திருக்குடும்பக் கன்னியர் வசிப்பிடத்தின் பின்னால் உள்ள வளவு.



**யார் இவர்...**

நம்மவர் என்று நாம் உரிமை பாராட்டும் ஓர் உத்தமர்.



21-1-1995ல் முத்திப்பேறுபெற்ற

**யோசேவாஸ் முனீந்திரர்.**

## காணிக்கைமாதா கோயில்
## வியாகுலமாதா கோயில்

(இரு பெயர்கள்)



இந்த வளவில்தான் முத். யோசேவாஸ் அடிகளார் தங்கியிருந்து அருட்சாதனங்கள் வழங்கினார்.
(மட்டு. தாண்டவன்வெளியில்)

அடிகளார் நடமாடித்திரிந்த இடம் பரி. வியாகுலமாதா ஆலய வளவு. இவ் இடங்களைப் புனிதப்படுத்தவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். சிறப்பாக, தாண்டவன்வெளிப் பங்கு மக்கள் என்பதை நினைவூட்டுகின்றோம்,

### 5. விவிலிய நூல் :

கிறிஸ்தவர்களுக்குரிய ஒரேயொரு வேதநூல் திரு விவிலியம் (பரிசுத்த வேதாகமம்). இது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பகுதி. பழைய ஏற்பாட்டில் 46, புதிய ஏற்பாட்டில் 27 பகுதிகள்.

இந்நூல் ஆபிரிக்கா 122. ஆசியா 104. ஐரோப்பா 60. பெருங்கடல் நாடுகள் 26. அமெரிக்கா 16. பிற 1 இந்தியா தமிழ் உட்பட 46. மொத்தம் 375 மொழிகளில் எழுதப்பட்டுண்டு. எட்டாம் வகுப்புப் படித்த மாணவரும் விளங்கக் கூடிய எளிய நடை.

நூலுக்குநூல் வித்தியாசத்தைத் தேடினாலும் காண முடியாது. நோவாகால சலப்பிரளயம், மோயீசன் கோலை நீட்டச் செங்கடல் பிரிந்தது, கன்னிமரி யேசுவைப் பெற்றார். யேசு சிலுவையில் தொங்கியபோது 'பிதாவே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள் இவர்களை மன்னித்தருளும்' என்றார். 3ம் நாள் உயிர்த்தார். 40ம் நாள் விண்ணகம் ஏறினார். 50ம் நாள் தூய ஆவியானவரை அனுப்பினார் (விண்ணகம் சென்ற 10ம் நாள்) இவைபோன்றவைகளை 375 மொழிகளிலுமுள்ள நூல்களிலும் காணலாம்.

ஒரு மொழியில் இந்நூலை அச்சிடும்போது இதற்கென நியமிக்கப்பட்ட சங்கமும், வத்திக்கான் சங்கமும், அதிகாரம் வழங்கிய அம்மொழியில் பாண்டித்தியம் வாய்ந்த கத்தோலிக்க பேராயர் அச்சிடலாம் என ஒப்பமிட வேண்டும் **IMPRIMATUR.** இது கண்டிப்பான கட்டளை.

எனவே இப்பரிசுத்த வேதாகம நூலாலும் மேல்நாடு கீழ்நாடு எனப் பிரியாது ஒன்றாகின்றோம் என்பதும் ஞாபகத்திற் கொள்ளவேண்டிய ஒன்று.

# V. கத்தோலிக்க சமயம்

ஒரு தமிழனைப் பார்த்து, ''நீ தமிழா? வேதமா?'' என்று கேட்டால் அவன் ''தமிழ்'' எனச் சொல்வான். ஆம் ''தமிழ்'' என்றால் சைவம், ''வேதம்'' என்றால் கிறிஸ்தவம் என்றும் எல்லோரும் விளங்கிக்கொண்ட காலம் அக்காலம். முஸ்லீம்கள் இதற்கு விதிவிலக்கானவர்கள்.

ஆரம்பகாலத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றியவர்கள் மிகமிக சொற்பமானவர்களே. தேவாலயங்களை அண்டியிருந்த ஒருசிலர் ஞாயிறு பூசைக்குச் செல்வர். அதுவும் ஆண்டுக்கொருமுறை, ஆவணிக்கொருமுறைதான். தேவாலய மணி அடிக்கும் சத்தம் கேட்டால் மாத்திரம் செல்வர். குருக்கள் குறைவாக இருந்ததே இதற்குக் காரணம். கத்தோலிக்கர் நத்தார், புதுவருடப் பிறப்புக் கொண்டாடுவர். இந்த இரு நாட்களையும் கொண்டாடினால் கத்தோலிக்கர் ஆகலாம் எனவும் நினைத்தனர். மற்றவர் எல்லோருக்கும் தையில் பொங்கலும், சித்திரையில் வருடப் பிறப்புந்தான்.

## 1. கத்தோலிக்க சமய முன்னோடிகள் :

1893 ஆவணிக்குமுன் இம்மாவட்டம் மாற்றாந்தாய்க் குழந்தைபோல காலி, யாழ்ப்பாண ஆயர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. போக்குவரத்து வசதியின்மை காரணமாகக் குருவானவரைக் காணுவதாயின் ''சுரடியனார் பிறை கண்டது போல''த்தான். காலஞ்சென்ற வந். சாள்ஸ் லவீங் சே.ச. ஆயரின் பின் காலஞ்சென்ற வந். காஷ்டன் றொபிஷே சே.ச. ஆயர் ஆட்சிபீடம் ஏறினார். மட்டுநகரில் ஆயர் மாளிகை கட்டப்பட்டது. 1928ல் கல்முனையில் கார்மேல் சபைக் கன்னியர் மடம் கட்டப்பட்டது. பெண்களுக்கும் சமயக்கல்வி புகட்டப்பட்டது. 1908ல் புனித மரியாள் பாடசாலை கல்முனை திரு இருதயநாதர் கோவில் வளவில் கட்டப்பட்டது. இதன் வளர்ச்சி மந்தகெதியில் நடந்தேறினாலும் இதில் கல்வி கற்ற ஹென்றி பொன்னையா என்பவர் இப்பாடசாலை ஆசிரியராகி 1928ல் கண்டி தேசியக் குருமடத்தில் சேர்ந்தார். 1984ல் இம்மறைமாவட்டத்தில் குருத்துவப்பணியில் பொன்விழாக் கண்ட முதற்குரு என்னும் பெருமை பெற்றார். இதே பாடசாலையை 1938ல் சஞ்சூசையப்பர் சபைத் துறவிகள் கையேற்றனர். 1950ல் பத்திமா மாதா சொரூபம் கல்முனைக்கு வந்த தன் ஞாபகார்த்தமாக பாத்திமா பாடசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1976 வைகாசி 1ல் கார்மேல் பெண்கள் பாடசாலையும், பாத்திமா ஆண்கள் பாடசாலையும் ஒன்றிணைந்து ''கார்மேல் பாத்திமாக் கல்லூரி''யாக இயங்கத் தொடங்கியது. இன்று, இம்மறைமாவட்டத்திலேயே இணையற்ற ஒன்றாகத் திகழ்கின்றது. இது நடந்தது வந். லீயோ இராஜேந்திரம் அன்ரனி ஆயர் காலத்தில்.

## 2. வந். இக்னேஷஸ் கிளென்னி, சே.ச.

1947ல் வந். இக்னேஷஸ் கிளென்னி சே. ச. திருமலை மேற்றிராசன ஆட்சிபீடம் ஏறியதும் இம்மறைமாவட்டம் பல கோணங்களிலும் மிளிரத்தொடங்கியது. எதிர்காலத்தில் சமயப்பணி சுதேசக்குருக்களிடமே ஒப்படைக்கப்படும் என்பதை உணர்ந்து, திருமலை உப்புவெளியில் ஆரம்ப குருமனையை ஆக்கினார். மட்டுநகரில் ஆயர் மாளிகைக்கருகில் பல குருக்கள் வசிக்கக்கூடிய மாடிவீட்டை உருவாக்கினார். ஆதரவற்ற வயோதிபர்களை நினைத்து 75 ஆண்களும், 75 பெண்களும் வசிக்கக்கூடிய இரு கட்டிடங்களையும், தேவாலயம் ஒன்றையும், 15 கன்னியருக்கான மாடிக்கட்டிடம் ஒன்றையும், திருமலை வீதியில் 25 ஏக்கர் நிலத்தை வாங்கி நினைத்ததை நிறைவேற்றினார். ''ஏழைகளின் சிறிய சகோதரிகள்'' என்ற சபைக் கன்னியர்களை வரவழைத்து 1954ம் ஆண்டு மார்கழி மாதம் 14ந் திகதி அவர்களிடம் ஒப்படைத்தார். முதன் முதல் வருகைதந்தவர் அமரத்துவமடைந்த மதர் ஆகத்தா அவர்கள். இதுவரை இச்சகோதரிகளால் பாதுகாக்கப்பட்டு இறுதி யாத்திரை முடித்தோர் சுமார் 600 பேர். இன்னும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இருக்கின்றனர். விண்ணுக்கும் மண்ணுக்கும் இணைப்பு ஏணி என இவ் இல்லத்தை அன்புடன் அழைப்பர். (இவ்வயோதிபர் சாலைக்கு நாளாந்தச் செலவு ஆறாயிரம் ரூபாவுக்குமேல். ஆரம்பத்தில் இக்கன்னியர் வீடுவிடாகச் சென்று கைநீட்டினர். இனக்கலவரத்தால் நாடு அல்லோல கல்லோலப்பட்டதால் இரக்கும் முயற்சியை நிறுத்தினர். இப்போது மீண்டும் ஆரம்பித்துள்ளனர். எனினும் எப்படி நிலைமையைச் சமாளிக்கிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்).

1960ல் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றதால் மறைக்கல்வி பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த ஆயர் கிளென்னி அவர்கள், தமிழ்நாடு திண்டிவனம் மறைக்கல்வி நடுநிலையத்துக்கு இருவருடப் பயிற்சிக்காக இடையிடை

இளைஞரை அனுப்பி 29 இல்லறத் தூதுவரை உருவாக்கினார். மறைக்கல்வி நடுநிலையம் ஒன்றையும் இங்கே உருவாக்கினார். இயக்குனர்களாக வண. குருக்கள் ஹென்றி பொன்னையா, பார்தலட், சாமிநாதன், தேவதாசன் முதலியோர் பணி புரிந்து இப்போது நோயல் இம்மானுவேல் பணிபுரிகின்றார். இவர்களுள் வண. சாமிநாதன் அவர்கள் ஆற்றிய பணி மிக மிகச் சிறப்புடையது. ஆரம்பக் குருமனை குறிப்பிடத்தக்க ஒன்று. (இதை இப்போது வண. P. யோசேப் பொறுப்பேற்றுள்ளார்.)

க.பொ.த. பரீட்சையிற் சித்திபெற்ற இளைஞர் யுவதிகளைச் சேர்த்துக் கருத்தரங்குகள்மூலம் மறையறிவையூட்டிப் பங்குகள்தோறும் அனுப்பிவைத்தார் மறைபரப்ப. 1983 வைகாசி 12ல் ''குழுவாழ்வுச் சகோதரிகள்'' என்னும் சபையை ஆரம்பித்தார் ஆயித்தியமலையில். இது இலங்கையில் வேறு எங்குமில்லாத பணி. மூன்று நான்குபேர் சேர்ந்த குழுவாக, பங்குகள்தோறும் பணிபுரிகின்றனர். பாம்புக்கடியால் மரணம் ஏற்படாமல் நூற்றுக்கு மேற்பட்டோரைக் காத்துள்ளனர். இனக்கலவரத்தால் சில சங்கடங்கள் ஏற்பட்டபோதிலும் இன்று வந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தாராள சிந்தையால் புனித அந்தோனியார் வீதியில் உள்ள ''அருள் ஒளி'' இல்லத்தில் பயிற்சி பெறுகின்றனர். அமரர் ஹென்றி பொன்னையா அடிகள் ஞாபகார்த்தமாக ஹென்றி மண்டபமும் கட்டப்பட்டது. இதில் இல்லறத்தூதுவர், மறையாசிரியர், குழுவாழ்வுச் சகோதரிகளுக்கான தியானங்கள் நடைபெறுகின்றன.

வந். இக்னேஷஸ் ஆயர் காலத்தில் வத்திக்கான் சங்கம் ''மக்கள் தம் மொழியில் விளங்கிக் குருவுடன் சேர்ந்து பலி ஒப்புக்கொடுக்கவேண்டும்'' எனப் பிரகடனம் செய்தது. வண. நோபேட் *A.* ஒக்கஸ் அடிகளார் ஆயரின் அனுசரணையுடன் தமிழ் இலக்கியக்கழகத் தலைவர், தூத்துக்குடி ஆயர் அதி. வந். தோமாஸ் பெர்னாண்டோ அவர்களின் அனுமதி பெற்று ''மக்கள் திருப்பலி'' என்னும் நூலை, திருவருகைக் காலம், தவக்காலம், பாஸ்காக் காலம், பொதுக்காலம் என நான்கு பகுதிகளாகப் பதிப்பித்தார். கண்டியில் நடந்த கருத்தரங்கின் தீர்மானப்படி, பூசைப்பலி நேரத்தில் விசுவாசிகள் இசையுடன் பாடுவதற்கென வருகைப்பாடல், தியானப்பாடல், காணிக்கைப்பாடல், திருவிருந்துப்பாடல்கள் அமைந்த சிறுநூலையும் பதிப்பித்தார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு, காலஞ்சென்ற வண. பீற்றர் துரைரெட்ணம் அவர்களால் வெளியிடப்பட்டது.



வேதபாட நூல்கள் இல்லாத குறையைப் போக்க, கத்தோலிக்க ஆசிரியர் சங்கச் செயலாளரால் 4, 5, 6, 7ம் ஆண்டு மாணவர்க்கான நான்கு புத்தகங்கள் அச்சிடப்பட்டன. இந்நூல்களில் அதிக பிரதிகளை அப்போது தாழங்குடாப் பங்குத் தந்தையாக இருந்த வண. கிளாக்சன் சே.ச. அடிகளார் வாங்கித் தமது பங்கிலுள்ள பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கினார்.

## 3. வந். ஆயர் லீயோ இராஜேந்திரம்:

*1974*ல் வந். கிளென்னி ஆயர் ஓய்வுபெற்று சொந்த இடமாகிய நியூ ஓர்லியன்ஸ் தேசம் செல்லும்போது, இங்கு பதினாறு ஆயிரமாக இருந்த கத்தோலிக்கர் தொகை முப்பத்தாறு ஆயிரமாக வளர்ந்திருந்தது. துணை ஆயராக இருந்த வந். தியோகுப்பிள்ளை அவர்களும் யாழ் ஆயராக நியமனம் பெற்றுச் சென்றார். எனவே அடுத்த துணை ஆயராக இருந்த லீயோ இராஜேந்திரம் அன்ரனி அவர்கள் இம்மறைமாவட்ட ஆயரானார். திறம்படப் பணியாற்றிவரும்போது 1978ல் வீசிய சூறாவளி இம்மாவட்டத்தையே சுக்குநூறாக்கிவிட்டது. எனினும் *SEDEC (Social and Economic Development Centre)* என்னும் தாபனத்தின் உதவியுடன் எல்லாம் புனரமைப்புச் செய்யப்பட்டது. அரசாங்கம் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்துச் செய்யும் அத்தனையும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது. உதாரணமாக, கிராம எழுச்சித்திட்டம், கட்டுமுறிவு, மியாங்கல் குளம், வீடமைப்பு, குழாய்க்கிணறு, யுவர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, தையல் இயந்திரங்கள், புல்லுமலையில் ஆரம்பித்த பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்டம் ''சீனத்துச் சிங்காரி'' எனச் சிறப்புப் பெயர்பெற்றது. கூட்டுப்புழுக் கூடுகள் கொழும்பு நாயக்காகந்த கன்னியர் மடத்துக்கு அனுப்பப்பட்டு நூற்றுக்கணக்கான யார் சீலை நெசவு செய்து இங்கு யார் 100 ரூபாப்படி பட்டுச்சீலை விற்கப்பட்டது. ஆயர் அன்ரனி அவர்கள் தமது நோய் காரணமாக 1979ல் இம்மறைமாவட்டப் பரிபாலகராக வண. நோபட் A. ஒக்கஸ் அவர்களை நியமித்துவிட்டுத் தான் ஓய்வெடுத்துக்கொண்டார். இப்போது திருமலையிலுள்ள உவர்மலையில் ஆயர் இல்லத்தில் வசிக்கின்றார். வண. நோபட் *A.* ஒக்கஸ் அவர்கள் காலத்தில் சாதிசமய பேதம் பாராது அழிந்த வீடுகள் புதுப்பிக்கப்பட்டன. ஏழைகள் அதிக உதவி பெற்றனர். பொதுமக்களிடையே குருக்களுக்கும் கத்தோலிக்க சமயத்துக்கும் மதிப்புக் கூடிய காலமிது.

### 4. வந். ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை :

*1983 ஆனி 7ல்* வந். கிங்ஸ்லி ஜோசேப் சுவாம்பிள்ளை அவர்கள் இம்மறைமாவட்டத்துக்கு ஆயராகப் பதவியேற்று *SEDEC* செடெக் நிறுவனத்தை *EHED* எகெட் *Eastern Human and Economic Development* கிழக்கிலங்கை மனித பொருளாதார அபிவிருத்தி நிலையம் எனப் பெயரை மாற்றி இளமைத் துடிப்புடன் செயலாற்றுகின்றார். அடிக்கடி திருமலை சென்று இரண்டும் ஒரே மாவட்டம் என்பதை நிலைநாட்டுகின்றார். சமய வேறுபாடு காட்டாமல் செயலாற்றுகின்றார். இந்து இளைஞர் மன்றத் தலைவரிடமே பல இலட்சம் ரூபாய்களைக் கொடுக்கப்பண்ணி வீடுகட்டிக் கொடுக்கச்செய்தார். மட்டு நகர் விமானத்தள வீதியிலுள்ள குருத்துவ மாணவர் இல்லத்தை இருமாடிக் கட்டிடமாக்கினார். பொதுமக்களின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்காகச் சாள்ஸ் மண்டபம் கட்டப்பட்டது. சத்திர சிகிச்சைக்காகக் கொழும்பு சென்று அனுபவிக்கும் உபத்திரவங்களைக் குறைப்பதற்காக, சீலோஆம் வைத்திய சாலையைப் பொறுப்பேற்றார். இவர் பங்குபற்றாத பொது நிகழ்ச்சிகளும், அரசாங்க நிகழ்ச்சிகளும் மிகச் சிலவே.

மனிதாபிமானமும், சமய சமரச நோக்கும் கொண்டு சகல சமய, சமூக, கலை, இலக்கிய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதுடன், எல்லா மக்களினதும் அபிமானத்தையும் பெற்றுள்ளார்.



# VI. கத்தோலிக்க சமயம்பற்றிய தெளிவு

காய்தல் உவத்தலின்றி – விருப்பு வெறுப்பற்ற மன நிலையில் ஆறுதலாக வாசித்து, விளங்கிச் சிந்திக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### 1. கத்தோலிக்க கோயில்களின் நடைமுறை :

(i) சாதிக் கட்டுப்பாடு இல்லை. மட்டுநகர் புனித மரியன்னை உப-பேராலய சேவா சங்கத் தலைவர் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அவரது பணி அனைத்து மக்களாலும் பாராட்டப்படுகிறது.

அனுட்டானங்கள் யாவும் விளங்கக்கூடியதாக சுய மொழியிலேயே நடைபெறும்.

(ii) முழந்தாட்படியிட்டே பிரதான அனுட்டானங்கள் நடைபெறும்.

(iii) உடனடிப் பதிவுத் திருமணம், கலப்புத் திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன. இவைகள் பலிபீடத் தண்டையே இடம்பெறும்.

(iv) இனக்கலவரம், அரசாங்கத் தாக்குதல்கள் ஏற்படுமிடத்து இன மத பேதம் பாராது பொதுமக்களுக்காக மாதக்கணக்கில் வசிப்பிடமாக மாறுவது கத்தோலிக்க தேவாலயங்கள் என்பதில் பெருமைப்பட வேண்டும்.

(v) கோவில்களில் கிறிஸ்தவ சமயப் பாடல்கள் மாத்திரமே ஒலிபரப்பப்படுகின்றன.

### 2. மரித்தவர்களுக்குக் கூடிய மரியாதை செய்தல் (சடலம்):

(i) துறவிகள் இறந்தால் அஞ்சலிக்காக நாள்முழுவதும் கோயிலில் வைத்தல்.

(ii) ஒருவரது மரணத்தை 1–2; 1–2 என மணியடித்து மக்களுக்கு அறிவித்தல். இதனால் செலவு சுருங்கும்.

(iii) குருவானவர் மரண வீட்டுக்கும், சேமக்காலைக்கும் சென்று சமயச் சடங்குகள் செய்தல்.

(iv) கோயிலில் பிரேதத்தை வைத்துப் பலி ஒப்புக் கொடுத்தல்.

(v) பிரேதப் பெட்டியை வைத்துத் தூக்கிச்செல்லும் தூம்பையை இலவசமாகக் கொடுத்தல் (தூம்பை - நான்குபேர் காவிக்கொண்டு போகக்கூடியதாக, பாடைபோல மரத்தால் செய்யப்பட்டது). பிரேதம் காவும் வாகனம் (*Hearse*) நடைமுறைக்கு வந்தபின் செல்வந்தர் தூம்பையைக் கைவிட்டனர்.

(vi) வசதிகுறைந்தோர் மரித்தால் அதற்குரிய செலவினங் களைச் சமாளிக்க வசதி செய்தல்.

(vii) சேமக்காலையில் குழிவெட்ட வேலையாள் ஒழுங்கு செய்தல்.

(viii) கல்லறையைக் கல்லாற் கட்ட விரும்புவோருக்கு இடம் ஒழுங்குசெய்தல்.

(ix) வருடந்தோறும் கார்த்திகை 2ம் திகதி, சேமக்காலைத் திருநாள் (ஆன்மாக்கள் திருநாள்). சேமக்காலையில் புதையல் இடத்தைத் துப்பரவு செய்து, அந்த ஆன்மா விண்ணகம் சேர செபித்தல். குருவானவர் பொதுவாகப் பலி ஒப்புக்கொடுத்து, தனித்தனிப் புதையலண்டை சென்று ஆசீர் அளித்தல்.

குறிப்பு: சில இடங்களில் சில கோயில்கள் இருக்கும் தெருவால்கூடப் பிரேத ஊர்வலம் செல்வது தடை செய்யப்படுவது மனம் வருந்தற்குரியது.

## 3. விருந்துபசாரம் :

(i) தகுதி, தகைமை பாராது யார் விருந்துக்கழைத் தாலும் குருவானவர் செல்வர்.

(ii) நாளாந்தம் ஒவ்வொரு வீட்டில் இருந்தும் வரும் சாப்பாட்டை அருந்தியே காலங்கழிப்பர் (சில இடங் களில் மாத்திரம்).

(iii) செவ்வாய்க்கிழமைகளில் புனித அந்தோனியார் ஆல யத்தில் அப்பம், கஞ்சி கொடுத்தல்.

(iv) திருவிழா அன்று அன்னதானம் வழங்குதல்.



(v) வயற்காணிகள் சொந்தமாக உள்ள ஆலயங்களில் அரிவி வெட்டியதும் புதிர் கொடுத்தல்.

(vi) தைப்பொங்கலன்று, தனித்தனி வீடுகளில் இருந்து அரிசி முதலியவற்றைக் கோயிலடியிற் சேர்த்து எல் லோரும் ஒன்றாகப் பொங்கிப் பகிர்ந்துண்ணல் - அப்போஸ்தலர்கால ஞாபகம்.

(vii) சனிக்கிழமை காலையில் வின்சன் டீ போல் சபை யாரால் தெரிவுசெய்யப்பட்ட ஏழைகளுக்கு அரிசி, காசு வழங்குதல். வருடமொருமுறை உடுப்பும், விருந்தும் கொடுத்தல் (நத்தாருக்கு முன்).

(viii) சில இடங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் வசதியுள் ளோர் இரண்டு மூன்று உணவுப் பொட்டலங்களைக் குருவானவரிடம் சேர்ப்பிப்பர். அவர் தேவைப்பட் டோருக்கு விநியோகிப்பார்.

(ix) பிரசித்திபெற்ற ஆலயங்களில் விழாக் காலங்களில் யாத்திரிகர்களுக்கெனக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (உணவு வசதி, சுகாதார வசதிகள் உட்பட).

## 4. குருவானவரின் அனுசரணையுடன் கத்தோலிக்கரின் ஈடுபாடு :

(i) பத்திச்சபைகள் நோயாளரை வீடுகளிலும், வைத் தியசாலைகளிலும் சந்தித்து வேண்டிய உதவிகளைச் செய்தல்.

(ii) தைமாதம் 6ந் திகதி மூவரசர் திருநாள் (திருக்காட் சித் திருநாள்). 6ந் திகதிக்கு அடுத்துவரும் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்குக் கீழ்த்திசை ஞானிகள் மூவர் புளியடிக்குடா, சின்ன உப்போடை, பெரிய உப் போடை மூன்றிடங்களிலிருந்தும், மட்டக்குதிரை, கழுதை போன்றவற்றில் ஏறி, புளியந்தீவுப் பாலத் தில் சந்தித்து ஏரோதின் அரண்மனைக்குச் செல்வர். இது மிராண்டா மளிகைக் கடை (ஹூட்லன்ஸ்) விறாந் தையில் அமைக்கப்பட்டிருக்கும். பின்பு புனித அந் தோனியார் தேவாலயத்துக்குட் சென்று தேவபால கனைச் சந்தித்துப் பொன், தூபம், வெள்ளைப் போளம் ஆகிய மூன்று காணிக்கைகளையும் செலுத்தி வணங்கிநிற்பர்.

நத்தார்த் திருவிழா இரு ஆண்டு மாதா கோவிலிலும், மூன்றாம் ஆண்டு புனித அந்தோனியார் கோவிலிலும் நடைபெறும். எனவே இரு ஆண்டுகளின் பின் தான் இது நடைபெறும். புனித அந்தோனியார் கோவில் பங்கைச் சேர்ந்த கத்தோலிக்கர் குடியேற்றங் காரணமாகப் புளியடிக்குடா, சின்ன உப்போடை, பெரிய உப்போடை ஆகிய மூன்று இடங்களிலும் சென்று வசிக்கின்றனர். உறவுமுறைகளைப் புதுப்பித்துப் புதுவருடத்தைக் கொண்டாடும்முகமாகவும் இச்சரித்திரக் காட்சி (*Pageant*) தத்ரூபமாகக் காட்டப்படும்.

**புனித மத்தேயு நற்செய்தி 2ம் அதி. 1 – 12 வசனங்களில் குறிப்பிடப்பட்ட ஞானிகள் வருகைச் சாதனை.** (இப்போது நடைமுறையில் இல்லை.)

**(iii)** பங்குக் கோயில்களில் திருநாளுக்கு முந்திய நாள் சுற்றி இருக்கும் நாலு தெருக்களாலும் சொரூப ஊர்வலம்.

**(iv)** வருடமொருமுறை நற்கருணைநாதரின் ஊர்வலம். புனித அந்தோனியார் கோவில் வளவில் முதலாவது ஆசீர்வாதம், மாதாகோயில் வளவில் இரண்டாவது, புனித மிக்கேல் கல்லூரி வளவில் மூன்றாவது, புனித சூசையப்பர் கன்னியர்மடத்து வளவில் நாலாவது, புனித மரியாள் பாடசாலை வளவில் ஐந்தாவது, புனித அந்தோனியார் ஆலயத்துள் ஆறாவது. (இப்போது மூன்று இடங்களில் மாத்திரம்.)

**சோடினைகளைப் பார்க்கக்கூடிய இடங்கள் :**

**தெருக்கள் :** அந்தோனியார் வீதி, சென்றல் வீதி, மரியநாயகி வீதி, மிக்கேல் வீதி ஆகிய நான்கு பெரிய வீதிகளும், மரியநாயகி வீதிச் சந்தியிலிருந்து புனித சூசையப்பர் மடத்து வாசல்வரை, 1ம் குறுக்குத் தெரு.

**வளவுகள் :** புனித அந்தோனியார் ஆலய வளவு, புனித மரியநாயகி ஆலய வளவு, புனித மிக்கேல் கல்லூரி வளவு, புனித சூசையப்பர் மடத்து வளவு, புனித மரியாள் பாடசாலை வளவுகள்.

ஒவ்வொரு வீட்டுவாசலிலும் இயல்புக்குத்தக்க போட்டி மனப்பான்மையில் மின்குமிழ், சிறு சொரூ



பங்கள், வாசனைப் புகைகள், வெடிகள், இருமருங்கும் தென்னங்குருத்துக்கள். மேல் விதானம் முழுவதும் வெள்ளைப் பட்டுத்தாள். நான்கு சந்திகளிலும், பீடம் உள்ள வளவுகளின் வாயில்களிலும் அலங்கார வளைவுகள்.

மிரண்டாச் சந்தி அலங்கார வளைவே அதிகமாகச் சிறப்பாக இருக்கும். இவர்கள் நல்ல விசுவாசமுள்ள தூத்துக்குடிப் பரவர். இவர்கள்தான் பெரிய வெள்ளியன்று ஆண்டவருக்கு ஆசந்தி அனுப்புகிறவர்கள். (ஆசந்தி என்பது யேசுவின் மரித்த உடலைத் தூக்கிச்செல்லும் பாடை). மிரண்டாச் சந்தியில் இருந்து மாதா கோயில் வாசல் வரையான சென்றல் வீதி புதுப் பொலிவுடன் விளங்கும். ஏனெனில் ஆரம்ப காலச் சிங்களவருள் ஒருவரான திரு. அரசநிலை கத்தோலிக்கரானதினால் மண்டுக்கொத்தும், தாழங்காயும் கொண்டுவந்து ஒவ்வொரு கம்பிலும் கட்டச் செய்வார். பின்னணி மெல்லிய குருத்துப்பச்சை. ஒவ்வொரு கம்பிலும் சோணால் வீணாலாக மண்டுக் கொத்து கடும்பச்சை. நடுவில் பல வர்ணமுடைய தாழங்காய். பல ஆண்டுகளாக இவரே இவ்வீதிச் சோடினையை மெருகூட்டிவைத்தவர்.

நிலபாவாடை விரிப்பதற்கு, மிரண்டாச் சந்தி தொடங்கி, புனித மிக்கேல் தெருவில் அப்புக்காத்தர் வீதி சந்திக்கும் இடம்வரை மாதா கோவில் ஆட்களும், மீதி இரு வீதியும் அந்தோனியார் கோயில் ஆட்களும் பொறுப்பு. இதற்காக ஆடை ஒலிப்போரிடம் மாத்து வாங்கும் வழக்கமில்லை. இரு கோயில்களிலும் 20 யார் நீளமான வெள்ளைச் சீலைகள் சொந்தமாகவே இருந்தன. ஆரம்பத்திலேயே விரித்துவைப்பர். காற்று அலங்கோலப்படுத்தாமல் பார்ப்பதற்கு மாத்திரம் ஆட்கள் ஆங்காங்கே நிற்பர்.

வீச்சுக்கல்முனை, புளியந்தீவு, புளியடிக்குடா, அமிர்தகழி, இருதயபுரம், தாண்டவன்வெளிப் பங்குகளுக்குப் பொதுவான ஊர்வலமானதால் பெருந்திரளாகச் சனங்கள் வருவார்கள். எல்லோரும் வெள்ளை உடுப்பில். பெண்கள் தலையில் வெள்ளை நெற். கதிர்ப்பாத்திரத்துள் வைக்கப்பட்ட நற்கருணைநாதரை வந். ஆயர் அல்லது குருமுதல்வர் கையிலேந்தியபடி பட்டுவிதானத்தின்கீழ் நிற்க, விதா

னத்தைக் கோயில் மூப்பர் நாலுநாலு பேர் மாறி மாறித் தூக்கிச்செல்ல, பின்னால் குருக்கள், துறவியர், கன்னியர், பூசைப்பரிசாரகர், பாடகர் என நூற்றுக்கணக்கில் பின்தொடர, முன்னால் தூபம் காட்டுவோரும், பூச்சொரிவோரும் செல்ல, மெல்ல மெல்ல நிலபாவாடையில் அன்னநடையிற் செல்வர். பத்திப்பரவசமான ஊர்வலம்.

(v) வருடந்தோறும் பாடசாலைகளில் ஒளிவிழா.

(vi) கோயில்களிலும், வீடுகளிலும் பாலன்குடில், நத்தார் மரம், கிறிஸ்மஸ் தாத்தா பரிசு வழங்குதல்.

(vii) புனித தெரேசாள் கன்னியர் மடம்போன்ற இடங்களில் யுவதிகளுக்குத் தையல்வேலை, பூத்தைத்தல், றேந்தை பின்னுதல் போன்றவற்றின்மூலம் அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டுதல்.

(viii) விடுதிச்சாலைகள், அநாதர்சாலைகளை வைத்து அவர்களை நல்லொழுக்கத்தில் வளர்த்தல்.

(ix) குழுவாழ்வுச் சகோதரிகள் வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்தித்தல், பாம்புக்கடிக்கு வைத்தியம்.

(x) பாதயாத்திரைகளை ஒழுங்குபண்ணுதல்

(xi) சில கோயில்களில் பெருந்தொகைப் பணம் செலவு செய்து யேசுவின் திருப்பாடுகளின் காட்சி காட்டுதல். (சில கோயில்களில் மரணிக்கும் காட்சி மட்டும்.) இக்காட்சிகள் ஆரம்பத்தில் பொம்மைகள் மூலம் காட்டப்பட்டன. இப்போது மக்கள் நாடக பாத்திரமேற்று நடிக்கின்றனர். யேசுவாக நடிப்பவர் தபசுகால நாற்பது நாளும் உபவாசம் இருப்பார்.

சிறப்பாகச் சிலவற்றைக் குறிப்பிட்டால்:

(அ) அமரகாவியம் – கல்முனை:
வண. S. A. I. மத்தியூ, S. S. J.
புலவர் A. W. அரியநாயகம்.

(ஆ) நீ எதிர்கொண்டதேன் (நாட்டிய நாடகம்)
திருமலை – மட்டுநகர்:
வண. ஜோசேப்மேரி, S. J.
செல்வி R. மனோகரி.
(தற்போது திருமதி S. கந்தசாமி)

(இ) பலிக்களம் – புளியடிக்குடா:
வண. போல் சற்குணநாயகம், S. J.



வண. நோபேட் A. ஒக்கஸ் அவர்கள் இன்னும் ஒரு படி மேலேறி வசனங்களை ஸ்ரீறியோவுடன் ஒலிப்பதிவு செய்து இருதயபுரத்திலும், திருமலையிலும் காண்பித்து, வீடுகளிலும் இருந்து பார்க்கக்கூடியதாக வீடியோ நாடாக்களில் பதிப்பித்து (Vedio) வழங்கினார்.

''பரிவட்டத் துணி'', ''உயிர்த்தெழுந்தார்'' என்னும் வானொலி நாடகங்களை வழங்கினார்.

பொதுமக்கள் விரும்பி இரவு முழுவதும் கண்விழித்துப் பார்க்கக்கூடியதாக ''கடவுள் அவதாரம்'' என்னும் நாட்டுக்கூத்தைப் பழக்கிப் பல இடங்களில் மேடையேற்றிவைத்தார் – பரிசுகளையும் பெற்றார்.

## 5. குருக்கள் - கன்னியர் - துறவிகள் பற்றியவை :

(i) சொந்தத் தேசம், ஊர், பெற்றார், உற்றார், வசதியான ஊண், உடை, வீடு சகலவற்றையும் துறந்து குருமனைகளிலும், மடங்களிலும் வசித்து, கொடுப்பதையும், கிடைப்பதையும் உண்டு வாழ்கின்றனர்.

(ii) இல்லற சுகத்தை அனுபவிக்கமாட்டோம் என வாக்குறுதியளித்துள்ளனர்.

(iii) செபம், தவம், ஒறுத்தல், உபவாசம் இவைகளைக் கடைப்பிடித்தல்.

(iv) வருடத்துக்கொருமுறை 5 – 8 நாட்கள் எவரோடும் கதைக்காமல் மௌன விரதங் காத்து இவ்வருடத்தில் செய்த பிழைகளைச் சிந்தித்து அடுத்த வருடம் திருந்த வழிகாணுதல் (ஞானோடுக்கம்).

(v) குருக்கள் நாளாந்தம் ஒருமுறையும், தேவை ஏற்படின் பலமுறையும் பலி ஒப்புக்கொடுத்தல்.

(vi) வீடுகளிலுள்ள நோயாளரை வாரம் ஒருமுறையேனும் சந்தித்து அருட்சாதனங்கள் வழங்குதல்.

(vii) மரணத்தருவாயில் ஒருவர் இருப்பதாக அறிந்தால் நடுச்சாமத்திலும் சென்று அருட்சாதனங்களை வழங்குதல்.

(viii) பெரிய வியாழன் கால் கழுவுஞ் சடங்கு
யேசு தான் மரணிப்பதற்கு முதல் நாள் தமது பன்னிரு சீடர்களின் கால்களையும் கழுவி முத்தமிட்

டார். இதை ஞாபகப்படுத்தும் முகமாகப் பாப்பரசர் தொடங்கி பங்குக் குருவானவர் வரை ஒவ்வொருவரும் பன்னிரு ஏழைகளின் கால்களைப் பன்னிருமுறை முழந்தாளில் இருந்து கழுவித் துடைத்து முத்தமிட்டு தாழ்ச்சி என்னும் புண்ணியத்தைப் புதுப்பிக்கிறார்கள்.

(ix) பெரிய வெள்ளியன்று காலை பெரிய சிலுவைப் பாதை. 14 இடங்களில் பொதுமக்களோடு சேர்ந்து கல்லிலும் முள்ளிலும் முழந்தாட்படியிட்டுச் செபித்தல்.

(x) உதவிகேட்டு வருவோர்க்கு மனம் கோணாமல் வசதிப்படி உதவுவது. (இக்காலம் இராணுவத்தால், பொலிசாரால், இயக்கத்தால் பிடிக்கப்பட்டோரை விடுதலை செய்ய முயற்சித்தல்).

(xi) தொடர்ந்து உபவாசமிருந்து ஆசீர்வதித்து, பேய்களைத் துரத்துதல். இதனால் ஏழைகளுக்குப் பணச் செலவு இல்லை.

6. பிராஞ்சிய நாட்டில் இருந்து வந்த குருக்களைப்பற்றி:

(i) வண. எவ்றால்ட் சே. ச. மாட்டுவண்டியில் மட்டக்களப்பிலிருந்து புல்லுமலை, பதியத்தலாவை வரை சென்று கத்தோலிக்கரை நெறிப்படுத்தினார்.

(ii) வண. டிலாஹே சே. ச. மாட்டுவண்டியில் மாங்கேணி, வாகரை வரை.

(iii) வண. ஹோப்னோ சே. ச. நடையில் தாழங்குடா வரை.

(iv) வண. பொணல் சே. ச. ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் துவிசக்கரத்தில் புறப்பட்டு புல்லுமலையில் ஞாயிறு பூசை முடிந்ததும் பின்னேரம் மட்டக்களப்பை அடைவார். மறுநாள் காலை புனித மிக்கேல் கல்லூரியில் அதிபர் வேலை.

(v) வண. பொணல் சே.ச. 1933ல் புளியந்தீவுப் பங்கில் உதவித் தந்தையாயிருந்தபோது தனது 72ம் வயதிலும் யேசுநாதர் சிலுவை சுமந்துசென்ற 19ம் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக, கறுத்த அங்கியும் முள்முடியும் தரித்து, புளியந்தீவு மாதா கோயிலில் இருந்து தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா கோயில் வரை சிலுவை சுமந்துசென்றார். (இக்காட்சியின்போது கண்கலங்காதவரேயில்லை).

(vi) குருக்களுக்கு உதவியாக மூன்று விறதர்மார் வந்தனர். அவர்களில் ஒருவர் இங்கிலாந்து தேசத்தவர். பெயர் ஜோசப் றைற் சே.ச. இவரே புனித மிக்கேல் கல்லூரி, ஆயர் மாளிகை, மரியன்னை தேவாலயங்களுக்கு மூலைக்கல்லாக அமைந்தவர். சிறந்த பொறியியலாளர். பூதக்கண்ணாடிமூலம் மணலைச் சோதித்து, ஒட்டைகள் இருந்தால் கொங்கிறீற்றுக்கு, இல்லாவிட்டால் கட்டுவேலைக்கு என ஒதுக்கிவிடுவார். கொழும்பில் இருந்து கப்பலில் வந்து கற்குடாத்துறையில் அல்லது முகத்துவாரத்துறையில் இறக்கப்படும் கட்டிடச் சாமான்களைப் புளியந்தீவுக்குக் கொண்டுவருவதற்கென இரு மாடுகள் பூட்டக்கூடிய வண்டியொன்றைத் தானாகவே செய்து பாவனைக்குவிட்டார்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது பாடசாலைகளில் கடதாசித் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் தனது 75ம் வயதிலும் கடதாசி செய்து அப்பியாசப் புத்தகங்கள் கட்டிக்கொடுத்து கல்விக்கு உதவியவர்.

7. அமெரிக்காவில் இருந்து வந்த குருக்கள்:

(i) வண. லாங் சே. ச. அடிகளார் பலநாள் பூரணை காலத்தில் காத்திருந்து கண்விழித்து, கல்லடிப்பாலத்தில் மீன்பாடுவதை நாடாவில் ஒலிப்பதிவு செய்து அமெரிக்காவுக்கு அனுப்பி மட்டுநகர் மீன்பாடும் தேன்நாடு என்பதை நிரூபித்தார்.

(ii) வண. லாங் சே.ச., வண. மேயர் சே.ச. இருவரும் வெள்ளைக்காரக் கூலிகள் என்ற பெயரெடுத்துத் திருமலையில் புனித யோசேப் கல்லூரி, குருமனைகளையும், மட்டுநகர் புளியடிக்குடாவில் மீன்கோவில் எனப் பெயர்பெற்ற புனித செபஸ்தியார் ஆலயத்தையும் கட்டிமுடித்தனர்.

(iii) அமெரிக்கரோடு வந்த ஒரேயொரு ஜேர்மனியக் குரு வண. குக் சே. ச. பல கஷ்டப் பிரதேசங்களில் வேலைசெய்து கடைசியில் அலிகம்பே என்னுமிடத்தில் குறவரோடு குறவராக அவர்களது உணவை உண்டு இப்போ தள்ளாத வயதில் நோய்வாய்ப்பட்டு இளைப்பாறியுள்ளார்.

(iv) 1947ல் அமெரிக்க நியோர்லியன்சில் இருந்து மட்டு நகர் வந்து, அதன் நூறு ஆண்டுகளில் 47ஐப் பகிர்ந்து கொண்டு புனித மிக்கேல் கல்லூரியில் அதே அறையில் தங்கி, வெளிநாட்டு உதவிபெற்று விளையாட்டு மைதானத்தில் சிறுவர் உடல்நலக் கல்விக்காகப் பாடுபட்டு, தொண்டையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக இருமுறை சத்திரசிகிச்சைக்குட்பட்டும், 30-07-1994ல் துறவற வாழ்வில் பொன்விழாக் கண்டும் 80 வயதைப் பூர்த்திசெய்த நிலையிலும் 'வெபர் விளையாட்டு அரங்கு' என்னும் பெயரை நிலைநாட்டி இம் மட்டுநகர் மண்ணுக்கே தன்னுடல் சொந்தமெனக் கூறிப் பணிபுரிகின்றார் வண. H. J. வெபர் யேசுசபை அடிகளார்.

## 8. சிறப்புப் பணிகள் :

### (1) பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகள் :

பொதுமக்களால் அருவருத்துத் தள்ளப்படும் தொழுநோயாளரை மாந்தீவு என்னுமிடத்தில் 1915ம் ஆண்டு தொடங்கி காலஞ்சென்ற பண்டாரநாயக்கா (பிரதமர்) காலத்தில் அந்நியர் இங்கு வரக்கூடாது என்ற சட்டம் வரும்வரை வைத்தியசாலையில் வைத்துப் பராமரித்துவந்தனர்.

**அவர்களது சேவையின் தன்மையை விளக்க அமெரிக்காவில் நடந்த உண்மைக்கதை.**

ஒரு இளைஞனும் யுவதியும் அன்னியோன்னியமாகப் பழகிவந்தனர். இளைஞனின் அன்பு காதலாக மாறியது. இவன் கடற்படை இராணுவத்தில் சேர்ந்து கப்பற்படைத் தளபதியானான். கடலிலும் இவளையே கனவுகாணத் தொடங்கிவிட்டான். இவள் பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர் மடத்தில் சேர்ந்தாள். தொழுநோய் வைத்தியசாலை ஒன்றில் பணிபுரிய அனுப்பப்பட்டாள். கொஞ்சக்காலத்தின்பின் இளைஞன் விடுதலையில் சொந்த ஊருக்கு வந்தான். இவளைப்பற்றி விசாரித்து இவள் வேலைசெய்யும் மடத்துக்குச் சென்று, தலைமைத் தாயாரிடம் அனுமதி பெற்று, இவள் வேலை செய்துகொண்டிருந்த அறைக்கே போய்ச் சேர்ந்தான். அவள் ஒரு நோயாளியைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தாள்.



கொஞ்சநேரம் கதைத்தபின் இளைஞன் தன் காதலை வெளிப்படுத்தினான். அந்த எண்ணத்தையே விட்டு விடும்படி அவள் கேட்டுக்கொண்டாள். மனம் உடைந்த இளைஞனான தளபதி, இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்ததற்காக அன்புடன் ஒரு முத்தமாவது தரும்படி கெஞ்சினான். உடனே அந்தக் கன்னியாஸ்திரி, தான் கழுவித்துடைத்த நோயாளியின் புண் இருந்த காலைத் தூக்கித் தன் மடியில் வைத்து அதை முத்தமிட்டாள். தளபதியைப் பார்த்து ''உங்களை முத்தமிடுவதில் நான் எவ்வித இன்பத்தையும் அடையமாட்டேன். இந்த நோயாளியின் கால் புண்ணை முத்தி செய்யும்போது, மரிய மதலேன் யேசுவின் பாதங்களை முத்திசெய்த இன்பத்தை உணர்கிறேன்'' என்று கூறி நல்ல ஒரு யுவதியைத் தெரிந்து விவாகம் முடித்து இன்பமாக வாழுங்கள் என வாழ்த்துக் கூறியதுடன் இனிமேல் தன்னைப் பார்க்கவும் வரவேண்டாம் எனவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

### (2) ஏழைகளின் சிறிய சகோதரிகள் :

இக்கன்னியர் 1954ம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு நாளும் நூற்றுக்கு மேற்பட்ட வயோதிப ஆண்களையும், பெண்களையும் உணவூட்டி, குளிப்பாட்டி, அறளைப் பேச்சு, ஏச்சுக்கள் வாங்கி மனம் கோணாது முகமலர்ச்சியுடன் பராமரித்துவருகின்றனர். 60 வயதுக்கு மேற்பட்டோர், ஏழைகள், ஆதரவற்றோர்களையே இவர்கள் ஏற்றுக்கொள்வர்.

**இம் மறைமாவட்ட நூற்றாண்டு ஞாபகமாக, இவ்வாண்டு (1994) திருமலை லிங்கநகரில் அன்னை தெரேசாவின் வயோதிபர் சாலையொன்றும், கருணை நிவாசம் என்னும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

நாம் நமது வயதுமுதிர்ந்த பெற்றோரைப் பாதுகாப்பதற்கு எவ்வளவு புறுபுறுப்பு, கறகறப்பு, வேண்டாவெறுப்புக் காட்டுகிறோம். **''மகன் தந்தைக்குக் கஞ்சி கொடுத்த ஓட்டை (பாத்திரம்) மகனின் மகன் ஒளித்துவைத்த கதையை நினைவுபடுத்திப்பாருங்கள்.''**

(3) திருக்குடும்பக் கன்னியர் :

சந்துருகொண்டான் என்னுமிடத்தில் அங்கவீனமான பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர். நாம் நமது சொந்தப் பிள்ளைகளையே நல்ல வழியில் வளர்க்க எவ்வளவு பெருமூச்சு விடுகிறோம்.

**9. இழப்புக்கள் :**

அருட்திரு. *L. S.* மரியநாயகம் சே.ச. அடிகளார், ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் ஒரே நோக்குடன், வெளிநாட்டு உதவிபெற்று 1974ல் சீனன்வாடியில் 'கமவள மானிட நலன்விருத்திச் சங்கம்' (*Agro-Human Development Welfare Society*) ஒன்றை ஆரம்பித்துக் கைத்தொழில், கமத்தொழில், மீன்பிடித் தொழில்களை விருத்தி செய்த போது இனக்கலவரத்தில் அடிபட்டு 1983ல் மட்டுநகர் வந்து புதுக்குடியிருப்பில் 25 ஏக்கர் காணியும், கல்லடியில் 8 ஏக்கர் காணியும், மட்டுநகர் புகையிரத வீதியில் ஒரு வீடும், மாவடிவேம்பு, உதயமூலை என்னுமிரு இடங்களிலும் இரு ஆரம்பப் பாடசாலைகளையும் வைத்து நூற்றுக்கணக்கானோர்க்கு வேலைவாய்ப்பு, நூற்றுக்கணக்கான ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி எல்லாம் செய்துகொண்டு ஏழைமக்களுக்கும், பிள்ளைகளுக்கும் வாழ்வளித்துக்கொண்டிருந்தார். 4-2-93ல் 24 பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு கடல் குளிப்புக்காகச் சென்றபோது அகால மரணமடைந்தார். எலும்புக்கூடு இரு நாட்களின் பின் 6-2-93ல் கண்டெடுக்கப்பட்டது. ஏழைச் சிறுவருக்குப் பெரியதோர் இழப்பு.


வண. பீற்றர் துரைரெட்ணம் அடிகளார் வந். கிளென்னி ஆயர் அவர்களின் செயலாளராக இருந்தபோது உரோமாபுரிப் பயணத்தில் மோல்ற்றாதீவில் இறைவனடி சேர்ந்தார் 30-10-71ல். தான் பிறந்து, வளர்ந்து, தவழ்ந்து, நடந்து, படித்து, குருவாகிப் பணிபுரிந்த சொந்த மண்ணிலே பிரேத அடக்கம்கூட நடைபெறவில்லை. எல்லோரும் மனம் வருந்தினர்.

இனக்கலவரத்தின்போது வண. *G.* அம்புறோஸ் அடிகளார் காத்தான்குடி என்னுமிடத்தில் அனுபவித்த உடல் பங்கம் இன்னும் தீர்ந்தபாடில்லை. பூரண சுகமற்ற நிலையிலேயே இன்றும் சீவிக்கிறார் - பணிபுரிகிறார்.



## புனித மரியன்னை உபபேராலயம்

1807ல் பாஸ்கல் முதலியாரால் கட்டப்பட்டது.




இவ்வளவின் பிற்பகுதியில் புனித மிக்கேல் ஆங்கில ஆண்கள் பாடசாலை 1873ல் கட்டப்பட்டது.


சமாதானத்தின் காவலன் வண. சந்திரா பெர்னாண்டோ அவரது கல்லறையும் உண்டு.

பூலோகம் : 9-8-1931
பரலோகம் : 6-6-1988

## கல்லடிப்பாலம்

[redacted]

லேடி மனிங் விறிஜ்




சேர். மனிங் தேசாதிபதி காலத்தில் 1924ல் கட்டப்பட்டது. இதில் இருந்து நகருக்குக் கரையோரமாகச் செல்லும் பாதை லேடி மனிங் ட்றைவ்.

வண. J. லாங் சே.ச. அடிகளால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு மட்டுநகர் மீன்பாடும் தேனாடு என நிரூபிக்கப்பட்ட இடம்.

## புனித மரியன்னை உபபேராலயம்

1807ல் பாஸ்கல் முதலியாரால் கட்டப்பட்டது.





இவ்வளவின் பிற்பகுதியில் புனித மிக்கேல் ஆங்கில ஆண்கள் பாடசாலை 1873ல் கட்டப்பட்டது.

சமாதானத்தின் காவலன் வண. சந்திரா பெர்னாண்டோ அவரது கல்லறையும் உண்டு.

பூலோகம் : 9-8-1931
பரலோகம் : 6-6-1988

## கல்லடிப்பாலம்

லேடி மனிங் விறிஜ்



சேர். மனிங் தேசாதிபதி காலத்தில் 1924ல் கட்டப்பட்டது. இதில் இருந்து நகருக்குக் கரையேரமாகச் செல்லும் பாதை லேடி மனிங் ட்றைவ்.

வண. J. லாங் சே.ச. அடிகளால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு மட்டுநகர் மீன்பாடும் தேனாடு என நிருபிக்கப்பட்ட இடம்.

வண. S. செல்வராஜா அடிகளார் கல்முனையில் இருந்து சொறிக்கல்முனையில் இருந்த அகதிகளுக்கு உணவளிப்பதற்கான ஆயத்தங்களுடன் சென்றவர் இன்னும் மீண்டு வரவில்லை.

வண. J. ஹேபியர் புளியந்தீவில் இருந்து வாழைச்சேனைக்குப் புறப்பட்டவர் இன்னும் மீளவில்லை. சுடப்பட்டார்களா? வெட்டப்பட்டார்களா? தெரியாது.

வண. சந்திரா பெர்னாண்டோ அடிகளார் 6-6-88ல் குண்டு பாய்ந்த உடலுடன் தன் அறையில் பிரேதமாகக் கிடந்தார்.

சற்றுச் சிந்திப்போம். ஏன் இவ்வளவு கஷ்டம் அனுபவித்தார்கள், உயிரையும் தியாகஞ்செய்தார்கள். இதில் ஏதும் சுயநலம் இடம்பெறுமா ?

வண. சந்திரா பெர்னாண்டோ அவர்களின் பிரேத அடக்கம் புனித மரியன்னை உப-பேராலய வளவில் சர்வ மதத் தலைவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதைப் பற்றிய சிறிய குறிப்பு:

மட்டுநகர் மாவட்டம் கண்டிராத சனக்கூட்டம்
மக்கள் முகவாட்டம் அஞ்சலிக்கண் ணீரோட்டம்
சர்வமதத் தலைவர்களின் மாபெரும் பொதுக்கூட்டம்
சமாதானக் காவலன் என்றதோர் உயர்பட்டம்
மூன்றுநாள் இரவுபகல் ஓய்வின்றி வஸ் ஓட்டம்
வாழ்வே மாயமென்று மனதினிலே போராட்டம்
ஆயர்க்கு மட்டுமே ஆலயத்துள் அடக்கம்
ஆனால் இவர்க்கு மட்டும் ஏன்இந்த வளவடக்கம்
கத்தோலிக்கர் அல்லாதோர் ஒன்றாகிக் கேட்டதனால்
உத்தரவே கிடைத்ததிந்த உத்தமனார் உடம்புக்கே.

ஈற்றில், காத்தான்குடி அறபுக்கல்லூரிப் பேராசிரியர் மதிப்புக்குரிய அலியார் மௌலவி அவர்களின் இரங்கல் உரையின் இறுதி வசனத்துடன் நிறைவுபெறுகிறது.

''ஆறும் ஆறும் ஆறாத் துயர்தரும் ஆறுகள்''

வி-ம்: அடிகளாரின் இறப்பு ஆறாம் மாதம், ஆறாந் திகதி. இவை இரண்டு 6 என்னும் இலக்கங்களும் ஆறாத துயரம்தரும் இலக்கங்கள். (அடக்கம் எட்டாந்திகதி இடம்பெற்றது).

# VII. பாதயாத்திரைகள்

## 1. பெரிய புல்லுமலைப் பாதயாத்திரை:

இக்காலம் யுத்தம், சமாதானமாக முடியவேண்டும் எனவும் பாதயாத்திரை செய்யும் காலம். இந்தக்காலத்தில் மாத்திரமல்ல பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் யாத்திரைகள் இடம்பெற்றன. 1954 பங்குனி 19ல் 19 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரைக்குழு, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு, வண. நோபேட் A. ஒக்கஸ் அவர்கள் தலைமையில் 28 மைல் தொலைவிலுள்ள பெரிய புல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயத்தைநோக்கி நடக்கத்தொடங்கியது. (இவ்வாலயம் யாத்திரைத்தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடம்). அடுத்த ஆண்டு தொடங்கி புளியந்தீவு புனித மரியன்னை ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. (இது, உப பேராலயமாக இருப்பதாலும், வீச்சுக்கல்முனை யாத்திரிகரும் சேர்வதற்காகவும்). இடையில் புளியடிக்குடா, தாண்டவன்வெளி, இருதயபுரம், தன்னாமுனை யாத்திரிகரும் சேர்ந்துகொள்வர். 1979ல் ''பாவப்பரிகார யாத்திரை'' என்ற பெயருடன் வெள்ளிவிழாக் கொண்டாடியபோது யாத்திரையில் கலந்துகொண்டோர் ஆறாயிரம் வரையில். யாத்திரிகர்களை ஊக்குவிக்கும் வகையில் தன்னாமுனையில் பொதுமக்களால் சவ்வரிசிக்கஞ்சி அல்லது பாயாசம்; கொடுவாமடுவில் சில வருடம் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியர் (P. W. D) திரு. செல்லத்துரை அவர்க்ளால், சில வருடம் செங்கலடிப் பொதுமக்களால் இராச்சாப்பாடு. பன்குடாவெளிச் சந்தி, கரடியனாற்றுச் சந்தி, இலுப்படிச்சேனை, கோப்பாவெளி, கித்தூள் முதலிய இடங்களில் அவ்வப்பகுதி மக்களால் கோப்பி விநியோகிக்கப்படும். சனிக்கிழமை காலை 10 மணி அளவில் தேவாலயத்தைச் சென்றடைந்ததும் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். வேண்டுதல்களும் இடம்பெறும். மதியபோசனம் திரு. பாக்கியராசா செல்வம் அவர்களால் வழங்கப்படும். (இனக்கலவரத்தால் யாத்திரை தடைப்படும் வரை இவைகள் தொடர்ந்து நடைபெற்றன.) மறுநாட் காலை பூசையின்பின் வாகனங்கள்மூலம் வீடு திரும்புவர். இதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையும் உதவியது குறிப்பிடத்தக்கது.



## 2. ஆயித்தியமலைப் பாதயாத்திரை:

ஆயித்தியமலைத் திருநாளுக்கு முந்தியநாள் சனிக்கிழமைக் காலை 6 மணிக்குப் புளியந்தீவு மாதா கோயிலில் இருந்து புறப்பட்டு மாலை 6 மணியளவில் ஆயித்தியமலை மாதா கோயிலை அடையும். இடையில் அரசடிச்சேனையில் கடதாசி ஆலை வைக்கோல் சேமிப்பு நிலையத்தாரால் குளிர் பானம் வழங்கப்படும். பனங்கன்றடிச் சேனையில் திரு. S. குரூஸ் அவர்களின் வயல் வாடியில் பூசைப்பலி ஒப்புக்கொடுத்த பின், அவரால் மதியபோசனம் வழங்கப்படும்.

1974ல் வலையிறவுப் பாலம் கட்டப்படமுன் இந்த யாத்திரை கவர்ச்சிகரமாகவும், உல்லாசப்பயணம் போலவும் அமைந்திருந்தது. அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரப் பெட்டியில் மாதா சொரூபம் இக்கரையில் இருக்கும். மிதக்கும்படகு, வள்ளங்கள், தோணிகள்மூலம் யாத்திரிகர் அக்கரை செல்வர். நாலைந்துமுறை இவைகள் வந்து வந்து போகும். கடைசியில் மாதா சொரூப வண்டி படகில் ஏற்றப்படும். அக்கரை சேரும் வரை ஆற்றுக் காட்சி பார்க்கக்கூடிய காட்சியாக இருக்கும். கீதங்கள் ஒலித்தபடியே இருக்கும். யாத்திரிகர் அக்கரையில் நின்று மாதாவை வரவேற்பர். ஊர்வலம் ஆரம்பமாகும். சுமார் 5 கி. மீ. தூரத்திலுள்ள திரு. S. குரூஸ் அவர்களின் வயல் வாடியை அடைந்ததும் யாத்திரையில் கலந்துகொண்ட குருக்களும், ஆயித்தியமலையில் இருந்து இதற்கென வந்த குருக்களும் சேர்ந்து பலி ஒப்புக்கொடுப்பர்.

**குறிப்பு:** பாதயாத்திரைகளின்போது தமது நேரத்தையும் சிரமத்தையும் பொருளையும் பாராது மனமுவந்து அன்னபானாதிகள் அளித்து யாத்திரிகரை ஊக்கப்படுத்திய அத்தனைபேருக்கும் இம்மறைமாவட்டம் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இறை அருளும் கிடைப்பதாக.

யாத்திரைக் குழுவினர் இடையிடையே வாகனங்கள் மூலமும், கினிதுமை, வகக்கோட்டை, தேவத்தை, பாலையூற்று, மடுத்திருப்பதி, பாலக்குடா முதலிய இடங்களுக்குச் செல்வர். ஒருமுறை வழமைபோல 1ம், 2ம் வகுப்புப் பெட்டிகளையும், 3ம் வகுப்பில் மூன்று பெட்டிகளையும் தங்களுக்கென ஒதுக்கிப் பிரத்தியேகம் (RESERVED) என ஒட்டச் செய்திருந்தனர். சேகுவரா இயக்கம் தலைதூக்கிய காலம். இயக்கக்காரர் ஹிங்குறாக்கொடை என்னுமிடத்தில் வண்டியை மறித்துத் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டனர். புகையிரத

நிலைய அதிகாரி (Station Master) வந்து ஒட்டப்பட்ட பிரத்தியேகம் என்ற கடதாசியைக் கிழித்து எடுத்தபின்னரே வழி விட்டனர். இதனால் கினிதுமைப் புகையிரதப்பயணம் தடைப்பட்டது. எனினும் இடையிடையே பஸ்வண்டிமூலம் நடைபெறுகிறது.

நாடு சீராக இருந்த காலத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, கல்முனைப் பகுதிகளில் இருந்தும் யாத்திரிகர் முதல்நாளே புளியந்தீவுக்கு வந்து மறுநாள் பாதயாத்திரையில் கலந்து கொண்டனர்.

இந்தக்காலம் பகலிலும் சுதந்திரமாக நடமாடமுடியாத காலம். எனினும் பாதயாத்திரையை மக்களுக்கு நினைவூட்டும் வகையில், மரியாயின் ஆண்டான 1988ல் வண. L. பிலிப் அடிகளார் தலைமையில் நிலாவெளியில் இருந்து பேராலயத்துக்கு (திருமலை) பாதயாத்திரையை மேற்கொண்டனர்.

### 3. பாதயாத்திரையின் பலன் :

1992 ஐப்பசி 17ல் பாத்திமா மாதா காட்சிதந்த 75ம் ஆண்டு ஞாபகார்த்தமாக வண. ஜோசப்மேரி அடிகளார் மட்/புதூர் வேளாங்கண்ணி மாதா ஆலயத்திலிருந்து கல்லடிக் கடற்கரைக்குப் பாதயாத்திரையை மேற்கொண்டார். இதில் கலந்து கொண்டோர் ஏழாயிரம் வரை.

பாதயாத்திரை என்பது உடலை வருத்தி மனதை ஒரு வழிப்படுத்தும் ஞானகாரியங்களில் ஒன்று. பாதயாத்திரையை வேடிக்கையாகப் பார்க்கிறவர்களின் மனதிற்கூட, ஏன் இவ்வளவு தொகையாக, இவ்வளவு தூரத்துக்கு இரவோடு இரவாக யானை, பூச்சிபட்டை உள்ள தெருவழியே செல்கிறார்களே? அடுத்தமுறை நானும் நடந்துபார்த்தாலென்ன என்ற எண்ணம் உண்டாகலாம். அப்படியே சேர்ந்து சமய அனுசரணையிலும் பங்குகொண்டோர் பலர். சிலரது தளர்ந்த விசுவாசம் உறுதியடைகிறது. உதாரணமாக 1992 ஐப்பசி 16ம், 18ம் திகதிகளில் மட்டுநகர் கல்லடி எங்கும் நல்ல மழை. 17ந் திகதி விடிய விடிய கல்லடிக் கடற்கரையில் செபவழிபாடு. ஒருதுளி மழைகூட விழவில்லை. எனவே விசுவாசம் உறுதி பெறுமா? தளருமா?



# VIII. நினைவை விட்டு நீங்காத நிகழ்ச்சி

1950ம் ஆண்டு ஆனி மாதம் 17ந் திகதி பிற்பகல் 3 மணி தொடங்கியே தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலய வளவிலும், தெருவிலும் சனங்கள் கூடத்தொடங்கிவிட்டன. காரணம் பத்திமா மாதா சொரூபம் பிபிலையில் இருந்து மோட்டார்ப் பவனியாக வரப்போகிறது. மாதாவை எதிர்பார்த்த நேரம் பிற்பகல் 5 மணி.

### 1. தேவதாயார் :

1917 வைகாசி 13ந் திகதி தொடங்கி ஐப்பசி 13 வரை ஒவ்வொரு 13ந் திகதியிலும் ஆறுமுறை போர்த்துக்கல் தேசத்துப் பாத்திமா என்ற இடத்தில் தேவதாயார் சிறுவன் பிரான்சிஸ்கோ, சிறுமிகள் ஜசிந்தா, லூசியா மூவருக்கும் காட்சி கொடுத்தார். அவர்களோடு கதைத்தார் இப்போது லூசியா மாத்திரம் கன்னியர் மடத்தில் அருட்சகோதரியாகக் கடமை புரிகிறார். இவர், "இந்தச் சொரூபத்தின் முகம்தான் நான் கண்டு கதைத்த தேவதாயாரின் முகம்போலக் கிட்டத்தட்ட இருக்கிறது" என ஏற்றுக்கொண்டார். இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்ததால் மாதாவின் முகத்தைப் பார்க்கச் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.

வரவேற்பாளர் பங்குத்தந்தை வண. S. லாசறஸ் அடிகளார். வாசலில் அமைத்திருந்த அலங்காரப் பந்தலின் கீழ் மாதா வந்துவிட்டார். வெடிகள் அதிர்கின்றன. அடிகளார் மாதாவின் முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறார். கண்களில் இருந்து நீர், தாரை தாரையாக வழிகிறது. வரவேற்புரை ஆரம்பமாகிறது.

"நீங்களே எங்களைத் தேடி வந்திற்றீங்களா அம்மாஅஅஅஅ" எனப் பெலத்த சத்தமாக அழுகிறார். தொடர்ந்து ஒரு சொல்லாவது அவர் வாயில் நின்று வரவில்லை. எல்லார் முகங்களிலும் கண்ணீர்த் தாரகை. வரவேற்புரை முடிந்தது.

## 2. மட்டுநகர் ஊர்வலம் :

மட்டுநகர் மைதானத்தை நோக்கி ஊர்வலம் நகர்கிறது நகர வரவேற்புக்காக (*Civic Recepti0n*). பி. ப. 7-00 மணியளவில் மைதானத்தையடைந்தோம். மின்விளக்கு ஒன்றையுமே காணோம். ஆங்காங்கு கம்புகள் நட்டு 8 அடி உயரத்தில் சோணால் வீணாலாகக் கயிறுகட்டி மெழுகுவர்த்தி கொளுத்தப்பட்ட பலவர்ண வெளிச்சக்கூடுகள் ஐயாயிரம் வரை தொங்குகின்றன. ஆனால் ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியவில்லை. மைம்மலான வெளிச்சம். இதை ஒழுங்கு செய்தவர் வண. J. லாங்சே. ச. அடிகளார். அவரில் எல்லோருக்கும் ஒருவித வெறுப்பு உண்டாகிறது. 20 அடி உயரத்தில் நான்கு கமுக மரம் நட்டு, நான்கு அடிச் சதுரத்தில் ஒரு பலகை. பலகையை மறைக்க இரு கொக்கொட்டிச் கந்துகள். இரு குருக்கள் சொரூபத்தைத் தூக்கிக்கொண்டு படிக்கட்டு வழியே ஏறி வைத்துவிட்டு இறங்கிவிட்டனர். இது கூடச் சரியாகத் தெரியவில்லை. திடீரென ஒரு வெளிச்சம் மாதாவின் முகத்தில் விழுந்தது ஆயிரம் வர்த்தி வலுவுள்ள மின்குமிழ் ஒன்றின் (*Focus*) பிரகாசம். பட்டப்பகலில் தெரிவதுபோல, தெட்டத்தெளிவாகத் தெரிந்தது மாதாவின் முகம். திறந்த கண்ணும் வாயுமாக எல்லோரும் பேச்சுமூச்சு இன்றி நிற்கின்றோம்.

இந்த மாதா சொரூபத்துக்குப் பொறுப்பாளராக இருந்து 50ம் ஆண்டு வைகாசி 22ந் திகதி தொடங்கி ஆடி மாதம் 15ந் திகதிவரை 55 நாட்களாக இலங்கையில் பல இடங்களுக்கும் கொண்டுசென்றவர்கள் இலங்கையை விட்டுப் போகும்போது கதலிக் காடியன் (*Catholic Guardian*) பத்திரிகையில் வெளியிட்ட செய்தி:

> ''மட்டுநகர் மைதானத்தில் தெரிந்த மாதாவின் அழகிய முகத்தோற்றம்போல இலங்கையில் வேறு எந்த இடத்திலும் இருக்கவில்லை'' என்பது.

## 3. தெய்வீக அலங்காரம் :

நகரபிதாவின் வரவேற்பு உரை முடிந்ததும், ஊர்வலம் புனித மரியன்னை ஆலயத்துக்கு நகர்ந்தது. சொரூபமிரண்டாச் சந்திக்குச் (வூட்லன்ட்) சென்றதும் கோயில் வளவில் வெடிச்சத்தம் ஆரம்பமாயிற்று. சொரூபம் கோயிலையடைய 20 நிமிடம்வரை சென்றது, வெடி ஓய்ந்தபாடில்லை. ஊர்தி ஆலய வளவுக்குள் நிறுத்தப்பட்டது. கோயில் முகப்பு, வளவு, வாசல் முழுவதும் மின்குமிழ்களும் குழல் விளக்களும்.



சொர்க்கலோகமே உலகில் வந்ததுபோல இருந்தது. வாசலில் இருந்து மாதாவை வைக்க அமைக்கப்பட்டிருந்த மேடைவரைக்கும் பக்கத்துக்கு ஐம்பதாக நூறு இளநீர் வாணங்கள் (பூக்களைச் சொரியும் வாணம்) இருபக்கமும் இவ்விரண்டாகக் கொளுத்தப்படுகின்றன. ஒன்று எரிந்து கீழே வர மற்றது எழுந்து மேலே செல்கின்றது. என்ன அழகு! கண்ணாற் கண்டகாட்சியை வாயால் சொல்லவோ, எழுத்தில் வடிக்கவோ முடியாத நிலை. எரியும் பூ வாணங்களும் மேடையை நெருங்க நெருங்க ஊர்தியும் நெருங்கிக்கொண்டே செல்கின்றது சொரூபம் மேடையில் வைக்கப்பட்டது. வெடியும் இல்லை வாண விளையாட்டும் இல்லை. ஒரே நிம்மதி ஆயர் கிளென்னி அவர்களும், பதிநான்கு குருக்களும் பொன்னென மின்னும் பூசை உடுப்புக்கள் அணிந்து வருகின்றனர். கால்வட்ட அமைப்பில் 15 பலிப்பீடங்கள். ஒவ்வொரு பீடத்துக்கும் பின்னணியாக 8 அடிச் சதுரச் சீலையில் 15 தேவ இரகசியங்களையும் வர்ண உருவங்களால் விளக்கிய பதாகைகள். (தேவ இரகசியங்கள் 15, களிகூர்ந்த காரணிக்கம் 5, வியாகுல காரணிக்கம் 5, மோட்சானந்த காரணிக்கம் 5). பீடங்களை அலங்கரித்திருந்த பூக்கள் **இந்த இடம் மட்டக்களப்பு அல்ல நுவரெலியா** எனச் சொல்லுவதுபோன்றிருந்தது. அப்போது கூட்டுப்பலி நடைமுறையில் இல்லாததால் தனித்தனி பலி ஒப்புக்கொடுக்கின்றனர். அன்று இரவு முழுவதும் செபவழிபாட்டில் கழிகிறது.

அடுத்தநாள் புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா பாடசாலைகளைத் தரிசித்து அடுத்தநாள் மோட்டார்பவனி கல்முனை நோக்கிச் செல்கின்றது.

கோயில்வளவு வரவேற்புக்குப் பொறுப்பாக இருந்தவர் காலஞ்சென்ற திரு. *K.* சந்தியாப்பிள்ளை அவர்கள். இவர் ஒரு செல்வந்தர். பிரமச்சாரி. மாதாவின்மேல் அணைகடந்த அன்பும், விசுவாசமும் கொண்டவர். மட்டுநகர் நியூவேக்கரி உரிமையாளர். திரு. *J.* ஹென்றியின் தாய் மாமனார். எனது ஞானத்தந்தை.

மட்டுநகரில் இருந்து கல்முனைக்கும், கல்முனையில் இருந்து பிபிலைக்கும் செல்லும்போது, வாடகை மோட்டாரில், மாதாகோவில் உபதேசியாராக இருந்த திரு. செல்லத்துரை உடையாரையும். என்னையும் கூட்டிச்சென்றார். பிபிலையில் மாதாவை ஒப்படைத்துத் திரும்பி வருகையில் பலதும் பத்தும் கதைத்துக்கொண்டுவந்தோம். இடையில் நான் அவரிடம் ''ஐயா, நீங்கள் அந்த வளவைப் பதினை

யாயிரம் ரூபாவுக்கு விற்றிருக்கவேண்டிய அவசியமில்லை. இருந்த காசோடு சமாளித்திருக்கலாம்'' என்று சொன்னது தான் தாமதம், வந்துவிட்டதே கோபம் சீறி விழுந்தார் என்னில் ''அடே மடையா, என்ர அம்மா, என்ர கோயிலுக்கு வரக்க, நான் என்ன மாதிரி அவவை வரவேற்கிறேனோ, அதேமாதிரித் தான் அவவும். நான் மோட்சத்துக்கு அவவிடம் போகும்போது என்னை வரவேற்பா. இனிமேல் இப்படி மடத்தனமாகக் கதைக் கப்படாது'' என்றார். என்னை வீட்டில் இறக்கிவிடும்வரை நான் ஒன்றுமே பேசவில்லை. இறங்கியதும் ''போயிற்று வாறன்'' என்றதைத் தவிர. (விற்கப்பட்ட வளவு, மட்டு/லொயிட்ஸ் அவெனியூவில் ஒலிவ்லேன் சந்திக்கும் மூலையில் இருக்கிறது. கிராண்ட் ஈஸ்ரன் ஹொட்டலாக (Grand Eastern Hotel) இருந்து இன்று வளர்மதி அச்சுக்கூடமாகவும் மாறிய நிலையிலுள்ளது).

இந்நிகழ்ச்சியில் நினைவில் நிற்கக்கூடியவை சில :

1. வண. S. லாசறஸ் அடிகளாரின் வரவேற்புரை.
2. மைதானக் காட்சி.
3. கோயில் வளவு அலங்காரமும், நிகழ்வுகளும்.
4. வாங்கிய ஏச்சு.

ஆனால் மைதானத்தில் கண்ட மாதாவின் சௌந்தரிய முகமே நினைவைவிட்டு நீங்காது இன்றும் நிலவுகிறது. மைதான அலங்கார முறையால் பொதுமக்கள் கற்ற பாடம். புதுமணத்தம்பதிகளின் மணவறையை வெளிப்புறத்தே தீப அலங்காரம் செய்து உள்ளே தம்பதிகளை இருத்தினால் அவர்களது முகமே தெரிவதில்லை. இதனால் அலங்கார முறை மாற்றமடைந்தது.



# இந்நூலாசிரியரைப்பற்றி

திரு. S. பிரான்சிஸ் ஆசிரியர் அவர்களைக் கௌரவிக்கும்முகமாக 5-10-1974ல் மட்/புனித சிசிலியா மகளிர் வித்தியாலயத்தில் ஜனாப் A. M. மஜீத் (கல்விப்பணிப்பாளர்) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள, மகாவித்துவான் F. X. C. நடராசா அவர்கள் தலைமையில் நடந்தேறிய பாராட்டு விழாவின்போது குறிப்பிட்டவைகளிற் சில:

தமிழ் ஆசிரியர் சங்கத்தை மட்டுநகரில் முதன்முதல் தாபித்து, அதன் பிரதிநிதியாக வட இலங்கை சென்று, கிழக்கிலங்கை ஆசிரியர்களும் தனித்துச் செயலாற்ற இயலும் என நிலைநாட்டிய காரணத்தால், ஆசிரியர் சங்கத்தால் வெளியிடப்பட்ட ''ஆசிரியன்'' என்னும் மாத இதழில் இவரது உருவப்படத்தை அட்டைப்படமாக அச்சிட்டுக் கௌரவித்தவர். நான் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராவதற்கு வழிகோலித்தந்தவர் எனது குருவாகிய திரு. S. பிரான்சிஸ் ஆசிரியர் அவர்களே என்பதைப் பகிரங்கமாகக் கூறி எனது நன்றிக்கடனையும், குருவணக்கத்தையும் சமர்ப்பிக்கின்றேன்.

D. S. K. வணசிங்க,
தலைவர், அ. இ. த. ஆ. சங்கம்.

❖ ❖ ❖

கிழக்குமாகாணத்தில் தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவராக 37 ஆண்டு சேவையாற்றி, பாடசாலைகளில் பிரவேச பண்டித வகுப்பு. கிழக்கிலங்கைச் சங்கீத சபைமூலம் சங்கீத வகுப்பு, சித்திர வகுப்புக்கள் நடாத்தி மட்டுநகரில் அருகிக் கிடந்த சித்திரம், சங்கீதம், இலக்கியக் கலைகளுக்குப் புத்துயிர் கொடுத்தார்.

1960ல் வீச்சுக்கல்முனை றோ. க. பாடசாலை ஆசிரியராகச் சென்றபோது. அவ்வூர் மக்கள் போக்குவரத்து வசதியின்றியும், குடிநீரைக் காசுக்கு வாங்கவேண்டிய நிலையிலும் இருந்தனர். உரியவர்களுடன் தொடர்புகொண்டு, சுமைதாங்கிச் சந்தியில் இருந்து திமிலைதீவு வரை ஆற்றோரமாகச் சென்ற கிறவல் பாதைக்குத் தார் போடுவித்து, இ. போ. ச. பேருந்து நாளொன்றுக்குக் காலையிலும் மாலையிலும் இருமுறை ஓடச்செய்தார். சேற்றுக்குடாச் சந்தியிலும், புனித

அன்னம்மாள் ஆலயச் சந்தியிலும் இரு நீர்க் குழாய்களை நிறுவச்செய்தார். இன்றும் காலையிலும் மாலையிலும் பெண் கள் குடங்களுடன் பவனி வருவதைப் பார்க்கலாம்.

எனவே முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

— செ. இராசதுரை.

◆ ◆ ◆

என்னை ஒரு மேடைப்பேச்சாளனாக ஆக்கியதுமன்றி, காலஞ்சென்ற எனது தந்தை S. A. செல்வநாயகம் அவர் களுக்கு அரசியல் ஆலோசகராக இருந்து உறுதுணை புரிந்த தற்கவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இராஜன் செல்வநாயகம்,
2வது பாராளுமன்ற உறுப்பினரும்,
மாவட்ட அரசியல் அதிகாரியும்.

◆ ◆ ◆

எனது ஆசான் பிரான்சிஸ் ஐயா அவர்கள் தமது ஐந் தாவது பதிப்பாக வெளியிட்ட விவேகப்பயிற்சி அப்பியாசங் கள் என்னும் நூலில் உள்ள வினாக்களில் அரைவாசிக்குமேல் பொறுக்கி 24 வருடங்களின் பின், வித்தியா பகுதியே புது முறைக் கல்வி என அறிமுகப்படுத்தியது எனின் இவர் கல்வித் துறையில் ஒரு முன்னோடியாக இருந்தார் எனப் பகிரங்க மாகக் கூறுவதில் என்ன பிழை? எனது குருவணக்கத்தையும் செலுத்துகின்றேன்.

— K. கந்தசாமி ''முகிலழகன்''.

◆ ◆ ◆

கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்து, 70ம் ஆண்டு வரை யாழ்நகரில் ஒன்றாக இயங்கிவந்த சமாஜத்தைப் பிரித்து மட்டுநகரில் இருந்து செயலாற்றவைத்த பெருமை திரு. பிரான்சிஸ் அவர்களையே சாரும்.


த. சண்முகநாதன்,
உதவிக் கூட்டுறவு ஆணையாளர்,
கிழக்குப் பிராந்தியம்.

◆ ◆ ◆



19252.

## மட்டு. அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் தீர்த்தக்கேணி அணைக்கட்டு



திரு. P. இராஜன் செல்வநாயகம் அவர்களுக்குப் புகழாரம் சூட்டிய அணைக்கட்டு.

## குடிநீருக்குக் கியூவரிசை

வீச்சுக்கல்முனை, சேற்றுக்குடாப் பகுதிகளில்
1960ல் ஏற்பட்ட கியூவரிசை.



காலாகாலமாக ஒரு குடம் குடிநீர் 10 சதத்துக்கு
வாங்கிய இடங்கள்.
[அரசியல்வாதிகளின் தூரநோக்கில்
இது சமீபத்தில் இருந்ததால்
தெரியாமல்] இருந்த இடம்.

## குருவை மகிமைப்படுத்திய சீடர் இருவர்



அமரர் திரு. D. S. K. வணசிங்க

அ. இ. த. ஆ. சங்கத்
தலைவராக இருந்து
என் பணியைத்
தொடர்ந்தார்.


செய்த சிறந்த
பொதுச் சேவைக்காக
31-03-1989
பி. ப. 7 மணியளவில்
கைத்துப்பாக்கி ரவையைப்
பரிசாகப் பெற்று
மறு உலகில் பிரவேசம்.

யாவரும் சமம் என்ற
கொள்கை.

படுவான்கரையை
எழுவான்கரையோடு
(வலையிறவுப் பாலம்)

கிறிஸ்தவராக இருந்தும்
சைலப்பணி
(அமிர்தகழித் தீர்த்தக்
குளக்கட்டு)

மலர்வு 28-3-1986.



அமரர் திரு. P. இராஜன்
செல்வநாயகம்



அமரர் திரு. கே. வி. எம்.

காசிநாதர் வயித்தியலிங்கம் மார்க்கண்டு சுப்பிரமணியம் என்றால் விளங்காது. K. V. M. என்றால் நொத்தாரிசு தொடங்கி நீதிபதி வரை, ஏழை தொடங்கி செல்வர் வரை எல்லோரும் அறிவர்.

சைவத்தொண்டன் என்பதற்குச் சான்று
மதுரையில் அமரத்துவம் அடைந்தது.

இவரிடம் உதவி கேட்டுச்சென்ற எவரும்
வெறுங்கையுடன் திரும்பிய கதையே இல்லை.

தனது ''மக்கள் கடை''க்கு வந்த 45 கலன்
மண்ணெண்ணெய் 'பேர்மிட்டை'
எங்கள் கடைக்குத் தந்த கொடைவள்ளல்.

26-02-1906 அவனியில்:

03-02-1978 அமைதியில்:

சாந்தி. சாந்தி. சாந்தி.

19241

திரு. பிரான்சிஸ் அவர்களைப்பற்றி எதைச் சொல்லுவது, எதைச் சொல்லாமல் விடுவது என்றே திண்டாடுகின்றேன். 'ஒருவர் உயிரோடு இருக்கும்போது அவரது பெயரை ஒரு தாபனத்துக்குச் சூட்டுவது பிழை' என்று மட்டுநகரில் பின்பற்றிவந்த வரட்டுக் கொள்கையைத் தகர்த்து 'வெபர் அரங்கு', 'ஞானசூரியம் மைதானம்' என்னும் பெயர்களை நிலைநாட்டினார்.

இனக்கலவரத்தின்போது தமிழருக்கு உதவவென மத்திய வகுப்பார் சேர்ந்து 'மக்கள் கடை' ஒன்றை ஆரம்பித்தோம். இவர் சாதாரண மக்களைச் சேர்த்து எங்கள் கடையைத் தாபித்துத் திறம்பட நடாத்தி ஏழைகளுக்கு உதவினார்.

நீதித்துறையிலும் பின்நிற்கவில்லை. மட்டுநகர் மறியற்கூட மேற்பார்வையாளராகப் பலவருடங்கள் சேவை செய்தார். யூரி சேவையில் அமர்ந்து திருமலை பன்குளம் கொலை வழக்கில் 40 நாள் கடமைபுரிந்தார்.

நடுத்தர வகுப்பினருக்கு வசிப்பிட வசதி செய்வதற்காக திரு. V. T. ஞானசூரியம் அவர்களுடன் இணைந்து கூட்டுறவு இயக்கம்மூலம் அரசாங்கத்திடம் 7 இலட்சம் ரூபா கடன் பெற்று 28 வீடுகளைக் கட்டிக் குடியமர்த்தி "ஞானசூரியம் சதுக்கம்" எனப் பெயரும் சூட்டினார்.

K. V. M. சுப்பிரமணியம் J. P. U. M.
*Attorney - at - Law.*
*Notary Public English and Tamil,*
*Member of Coconut Growing*
*Trade Wages Board.*

◇ ◇ ◇

இவரது நிருவாகத் திறமையை நேரிலே கண்டேன். இவர் தலையிடாமல் இருந்திருந்தால் 'சிவசு' கல்வி நூற்றாண்டு கிழக்குப் பிராந்தியத்தில் இவ்வளவு சிறப்பாக நடந்திருக்காது.

A. M. மஜீத், *B. Sc., Dip-in-Edu.*
கல்விப்பணிப்பாளர்,
கிழக்குப் பிராந்தியம்.

◇ ◇ ◇

இவர் சமயபாடத்தில் ''டிப்ளோமா'' பெற்று, பாட சாலைகளில் சமய பாடநூல்கள் இல்லாத குறையைப் போக்க ''வேத உபதேசம்'' என்னும் நூற்தொகுதி நான்கைப் பதிப் பித்தார்.

நாடகம் எழுதுவதிலும். நடிப்பதிலும் கைதேர்ந்தவர். இவர் எழுதிய ''ஆணா பெண்ணா அழகுடையவர்'' என் னும் சிறு நாடகம் இலங்கை வானொலியிலும் ஒலிபரப் பாகியது.

இவர் எழுதி நடித்த ''மிலிற்றறிக் கலியாணம்'' என் னும் நகைச்சுவை நாடகத்தில் மாப்பிள்ளையாக வந்த ஐந்து அடி உயரமான ஆசிரியரையும், பெண் வேடம் பூண்ட ஆறரை அடி ஆசிரியரையும் இன்று கண்டாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை என்பதைச் சிரித்துக்கொண்டே கூறுகின்றேன்.

வண. நோபேட் A. ஒக்கஸ்,
இயக்குநர்,
மட் / கத்தோலிக்க கலாசாரக் குழு.

பெரியோர், சிறியோர் பேதமின்றி ஒரே மாதிரியாய்ப் பழகுபவர்: தமது உதவி நாடுவோர்க்கு, தம்மாலியலாவிடி னும் பிறருதவி நாடி அதை ஈடுசெய்யும் சிறந்த பண்பாளர்.

— F. X. C. நடராசா.



''தகுதி கண்டு மதிப்புக் கொடுக்கத் தயங்காதே''
இது குருவாக்கு.




மட் / பட்டின வட்டாரக் கல்வி அதிகாரி
திரு. வி. ரி. அரசன் அவர்களுக்கு
நான், குரு வாக்கை நிறைவேற்றிய விழாவின்போது.



## நூலாசிரியர்

★ **தகைமை** — பயிற்றப்பட்ட 1ம் தர ஆசிரியர் (1936), பாலபண்டிதம் (1937), சங்கீத ஆசிரியர் சான்றிதழ் (1935), ஆங்கில ஆசிரியர் சான்றிதழ் (1950), றோ. க. டிப்ளோமா (1944), சித்திர ஆசிரியர் சான்றிதழ் (1935), உடற்பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் (1936).

★ **வெளியிட்ட நூல்கள்** — புத்திப் பரீட்சை (5ம் வகுப்பு), மாணவர் கைநூல் (SSC), வேத உபதேசம் (4 தொடர் வெளியீடுகள்), தவக்காலம், திருவருகைக்காலம், புனித அந்தோனியார் நவநாள்.

★ **கலை இலக்கியப் பணி** — நாடக ஆசிரியர், நடிகர், நெறியாளர், இலங்கை வானொலி நாடகங்கள், பாடசாலை நாடகங்கள் பல இதில் அடங்கும்.

★ **கல்விப்பணி** — சித்திரப் பயிற்சி வகுப்புகள் (மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, மூதூர். சியவச நூற்றாண்டுக் கண்காட்சி, சித்திரக்கலைக் கண்காட்சி, மட். சங்கீத சபை ஸ்தாபிதம், ஜேசு அகடமி (மட்டக்களப்பு), அறிவகம் (திருகோணமலை) நிறுவியமை, இலகுமுறையில் இலக்கணம், இலக்கியம், கணிதம் போதித்தல்.

★ **சமூகப்பணி** — வீச்சுக்கல்முனை வீதி அமைப்பு, நீர் விநியோகம், பஸ் சேவை, ஞானசூரியம் வீடமைப்புத் திட்டம், வெபர் ஸ்ரேடியம் பெயர் பொறிப்பு, "எங்கள் கடை" ஸ்தாபிதம், மட். கூட்டுறவுச் சங்க ஸ்தாபிதம், மட். சிறை மேற்பார்வைக் குழு உறுப்பினர், விசேட ஜூரி சேவை உறுப்பினர், யுத்தகால A R P வார்டன். கிழக்கிலங்கை ஆசிரியர் சங்கம் ஸ்தாபிதம், பாதயாத்திரைக் குழுச் செயலாளர் (25 ஆண்டுகள்), கட்டுமுறிவு குடியேற்றம், வரியிறுப்பாளர் சங்கம் ஸ்தாபிதம், சூறாவளி நிவாரண வேலை (SEDEC நிதியுடன்), வின்சன்ட் டீ போல் சங்கப் பிராந்தியத் தலைவர் பணிகள்.

---

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.